19037

சிந்தாமணி

May 1925

பெண்கள் சுதந்திரம் பெறும் வழி.

(பத்திராதிபர்.)

இந்தியப் பெண்மணிகள் முற்காலத்திய சுதந்திரத்தையே கோரிவருகின்றனர். ஒரு சிலர் நவீனவழிகளைப் பின்பற்றிய சுதந்திரத்தைக் கோருவதாக இருப்பின் நவநாகரிகத்திலாழ்ந்து கிடக்கும் ஆடவர்கள் அதற்குக் காரணமன்றி வேறில்லை. தவிர ஆராய்ச்சி செய்யப்படாமலிருக்கும் தற்கால நிலைமையும், சிந்திக்கப்படாமலிருக்கும் கல்விமுறைகளும் இதற்குக் காரணங்களாக இருக்கின்றன. பெண்மக்களுக்குத் தாங்களே தலைவர்கள் என்று பெருமை பேசிக்கொண்டு சூத்திரதாரர்களாய்ப் பின்னிருந்து ஆட்டிவைக்கும் ஆடவர்களின் அறியாமையாலும் அவர்களிடத்துள்ள அயல்நாட்டு அனுஷ்டானத்தாலும் பெண்கள் அடைந்துள்ள தாழ்ந்த நிலைபற்றி விரிவாயுரைத்தல் அனாவசியம். ஆடவர்கள் இயற்றும் பிழை இம்மட்டுமல்ல. பெண்களைப் பூர்வீகவழியில் இருக்கவும் விடாமலும் நாகரிகத்துறையில் தாராளமாகச் செல்லவும் விடாமலும் சிலர் குறுக்கிட்டு நிற்பதை விசனத்துடன் குறிப்பிடவேண்டியதாயிருக்கிறது. பூர்வீக வாழ்க்கையிலுள்ள மாதர்கள் மூடர்களென்று ஆடவர்கள் இகழ்வதையும் நாகரிகத்துறையில் செல்பவர்களை அதிகப்பிரசங்கிகளென்று நினைப்பதையும் நாம் இக்காலத்திலும் காணலாம்.

சிலருக்குத் தாங்கள் தலைகால் தெரியாது நாகரிகத் தோரணையில் ஆழ்ந்திருக்கும்கால் பூர்வீக அனுஷ்டானத்திலிருக்கும் பெண்மணியைக் கண்டால் வெறுப்புண்டாகிறது. அயல் நாட்டுக் கதைகளையும் விவகாரங்களையும்

...ன்றி நோக்கும் சமயங்களில் கண்ணியம் ...ாய்ந்த இந்தியப்பெண்மணிகளுக்குத் தற்கால ...கரிகவழிகள் சிறிதும் ஒவ்வாதென்று இவர் ...ள் மனம் துடிதுடிக்கின்றது. இந்தியாவில் இந்திய நாகரிகம் இந்திய ஆடவர்களிடம் மீண்டும் நிலைபெறும்வரை இவ்வாறே பூர்வஞானம் சற்றும் நவநாகரிகவாசை சற்றுமாக இவர்களை ஆட்டிவைப்பதில் சந்தேகமே இல்லை. நாகரிகவழியில் லாப மற்றுப் போகும்பொழுது பூர்வீகத்தையும், பணத்தட்டும் உத்தியோக வாஞ்சையும் ஏற்படுங்கால் நவநாகரிகத்தையும் மனதில் நினைத்துப் பெரும்பாலரான ஆடவர்கள் ஒரு நிலையின்றி தடுமாறிக் கொண்டிருக்கும்போது இவர்களால் பெண்மக்களின் சுதந்திரமும் அதற்கேற்ற சாதனங்களும் கிடைக்குமென்று இனியும் எண்ணியிருத்தல் கூடாத காரியம். இன்றளவும் இயன்றவரைப் பூர்வீக வாழ்க்கையைக் கைவிடாதும் ஆடவர்களையும் மிதமீறி நாகரிகத்துறையில் செல்லவிடாதும் காப்பாற்றி வருபவர்களான இந்தியப் பெண்மணிகள் தாங்களே முன்வந்து தங்கள் நியாயமான சுதந்திரத்தையும் இந்திய நாகரிகத்தையும் மீண்டும் புத்துயிர்பெறச் செய்யக்கூடிய காலமிதுவேயாகும். பெண்கள் தங்கள் சுதந்திரத்தை நிலை நிறுத்துங்கால் சில நவீனவழிகளைக் கைக்கொள்ள வேண்டியிருப்பதாக முன் சஞ்சிகையில் கூறியிருக்கிறோம். பூர்வீகம், நவநாகரிகம் இரண்டின் வழியை யனுசரிப்பவர்களும் ஒரேபாதையில் செல்லவேண்டி யிருப்பதாகவும் சொல்லியிருக்கிறோம். தாங்கள் இன்னார்; தங்கள் கடமை இன்னது; தங்களுக்குத்தேவை எவை; தாங்கள் எத்துறைகளில் சுதந்திரம் பாராட்டல் வேண்டும் என்பதைப் பெண்மக்கள் நன்கறிவதற்குக் கல்வியே ஏற்ற சாதனமாயுள்ளது. ஆனால் தற்காலக் கல்விமுறை இவைகளுக் கேற்றதாயில்லை. பெண்மக்கட்குரிய படிப்பு இதற்கு அவசியமாயிருக்கின்றது. பெண்மக்கட்க்குரிய படிப்பை நிலைநிறுத்துவதற்குத் தற்சமயம் ஸ்தலசுய ஆட்சி ஸ்தாபனங்களும் சட்டசபைகளுமே சாதனங்களாகவிருக்கின்றன. நடைபாதை ஒன்றாயிருப்பினும் பலர் பலவேறு நோக்கத்துடன் அதில் நடந்து செல்வதுபோல, மேற்கண்ட சாதனங்கள் பூர்வீக வாழ்கையையும் கல்வியையும் முக்கிய லக்ஷியமாகக்கொண்ட பெண்மணிகளால் கைப்பற்றப்படுமாயின் புதிய வழிகளை வளரவிடாமல் தடுப்பதற்கும் பழையகொள்கைகளைச் சிறிதேனும் உயிர்பெறச்செய்யவும் இடமுண்டென்பதை மறுக்க முடியாது. இந்தியப் பெண்மணிகளில் அனேகமாக அனைவரும் பூர்வீக வாழ்க்கையையே விரும்புகின்றமையால் இதற்கு மாறாகவும்இவைகளைக் கெடச்செய்கின்றனவாயுமுள்ள விவகாரங்கள் ஜனப்பிரதிநிதிஸ்தாபனங்கள் மூலமாக நடைபெறாது தடுப்பது நியாயமான செய்கையாகும். ஒரு சமூகத்தையே கட்டுப் படுத்தக்கூடிய பல விஷயங்கள் சட்ட சபைகளில் தீர்மானிக்கப்பட்டு விடவும் கூடும். ஆகையால் பெரும்பாலர்களின் லக்ஷியம் மேலோங்கி நிற்கும்படியான வழியைத் தேடல் வருமுன் காப்பது போலாம். கிருதயுக தர்மத்தையே வாயால்மட்டும் பேசிப் பொழுது போக்குதலும், பெண் சுதந்திரமென்றால் இந்தியப் பெண்களின் நிலைமையை அடியோடு மாற்றிவிடல் என்று எண்ணிவிடுதலும் தற்சமயம் சிறிதும் ஒவ்வாத செய்கை என்பதில் ஆக்ஷேபமில்லை, பெண்மக்கள் நிலைமையானது முற்காலம்போலில்லை என்று வாய்ப்பேச்சால் மட்டும் பலர் அனுதாபங் காட்டுகிறார்களன்றி அதற்கு வேண்டிய வழியைத் தேடுவாரின்றி இருக்கும் இச்சமயம் பெண்மக்கள் முன்னின்று ஜனப்பிரதிநிதி ஸ்தானங்களில் தம்மினத்தவர்களை இடம் பெறச்செய்வதில் தங்களுடையவும் தமது வீட்டிலுள்ள ஆடவர்களுடையவும் வாக்குரிமைகளை உபயோகப்பட[illegible] வேண்டும்.

பர்வதகுமாரி.

(427-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீமான் மகேச குமார சர்மா எழுதியது)

ஆறும் அத்தியாயம்.

பர்வதத்தின் அடிவாரத்தில்.

மலைமேல் ஏறிச்செல்வதில் எவ்வளவு கஷ்டம் உண்டாகின்றதோ அவ்வளவு கஷ்டம் அதிலிருந்து கீழே இறங்கி வருகையில் உண்டாகாவிடினும், மனக்கவலைமாத்திரம் அதிகமாகவே உண்டாகின்றது. இறங்கி வரும் சமயத்தில் சரீரமுழுதும் அதிலும் முக்யமாய்க் கால்களில் நடுக்கமுண்டாகிறது; எங்கே அடி சருக்கி விழுந்துவிடுவோமோ என்கிற பயமும் ஒவ்வொரு நிமிஷத்திலும் உண்டாகிறது. சுசீலகுமாரன் வழி காட்டிக்கொண்டே முன்னே போய்க்கொண்டிருந்தான். ஆனால் பிரதிபைக்கு இறங்கி வருவதில் அதிக கஷ்டமும் பயமும் உண்டாயிற்று. அவள் பத்தடி நடப்பதும் பிறகு உட்கார்வதுமாயிருந்தாள். இடையிடையே பின்பக்கம் திரும்பிப் பார்த்தபொழுது, அந்த நிர்மானுஷ்யமான பாதை ஒரு நேர்க்கோட்டுக்குச் சமானமாகப் பர்வதத்தின் கொடுமுடிவரையில் போய்க்கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அந்தப் பாதையிலிருந்து துஷ்ட மிருகம் எதுவாயினும் சந்தடி செய்யாமல் தன்னைப் பின் தொடார்ந்து வந்து திடீரென்று தன்மேல் விழுந்து அடிக்குமோவென்று அவளுக்குச் சற்று நேரத்திற்கெல்லாம் தோற்றியது. இப்படிப்பட்ட ஆசங்கை தன் மனத்தில் ஏன் ஜனிக்கவேண்டுமென்று பிரதிபைக்கு விளங்கவில்லை. மலையின்மேல் ஏறிச் செல்லுங்காலையில் இத்தகைய சந்தேகமொன்றும் அவளுக்கு உண்டானதில்லை. அவள் அதிகமாக வேர்த்து அடிக்கடி உட்கார்ந்தும் மறுபடி எழுந்தும் மெல்ல மெல்ல இறங்கி வரலானாள். கிரமக் கிரமமாய் பூதலத்தின் சமஸ்த வஸ்துக்களும் கண்ணுக்குப் புலப்படலாகி, பசு எருமை மனிதாதியரின் குரலோசையும் காதில் விழுந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அத் தமையன் தங்கையர் இருவரும் அந்தக் குளிர்ந்த நிழலுடன் கூடிய அருவியின் அருகில் வந்து சேர்ந்தனர். அருவியைப் பார்க்கும்போதே பிரதிபையின் முகத்தில் பரமானந்தம் பொங்கியது. அதன் அருகிற்சென்று அவள்—"அருமையான அருவியே, நான் இன்று உன் பிறப்பிடத்தைப் பார்த்து வந்தேன்; அன்றியும் நீ இவ்வாறு ஓய்ச்சலில்லாது இட்டுக்கொண்டிருக்கும் இரைச்சலுக்கு அர்த்தம் இன்னதென்றும் கண்டுகொண்டு வந்தேன். இன்று நீ எனக்கு அருளிய உபதேசத்தை என் உயிர் உள்ளளவும் நான் மறவேன்" என்றாள். அதன் பிறகு பிரதிபை அருவியின் கரையிற்போய் உட்கார்ந்தாள். சூரியன் பர்வத சிகரத்தைக் கடந்து தலைக்கு நேரே உச்சியில் வந்துவிட்டான்; வெயில் மிக வெப்பமாயிருக்கிறது, பசுக்களும் பறவைகளும் இளைப்பாறுவதற்காக நிழலுள்ள இடங்களையும் மரக் கிளைகளையும் வந்தடைகின்றன. அப்பொழுது பதினைந்து நாழிகை யானதைக் கண்டு சுசீலகுமாரன் அகத்துக்குத் திரும்பிப் போகத்துரிதப்பட்டுத் தங்கையை நோக்கி—"பிரதிபா, போஜன வேளை ஆய்விட்டது; எழுந்திரு, சீக்கிரமாய் அகத்துக்குப் போவோம்," என்று சொல்லிப் பிரதிபையோடு கூடச் சிறிது நேரத்திற்கெல்லாம் வீடுபோய்ச் சேர்ந்தான்.

சுசீல குமாரன் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது, அவனும் பிரதிபையும் எங்கே போனார்களோ, ஏன் இன்னும் வரவில்லையென்று அவர்களுடைய வயது சென்ற செவிலித்தாய் வியாகூலப்பட்டு அழுதுகொண்டிருக்க, வேலைக்காரன் ராம்ஜி அவ்விருவரையும் தேடிக்கொண்டு எங்கேயோ வெளியிற் போயிருப்பதாகத் தெரியவந்தது. அவ்விருவரும் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததைக் கண்டு செவிலித்தாய் ஆநந்தத்தாலும் அபிமானத்தினாலும் உரக்க அழுது, அன்பினால் கோபிப்பவள்போல் காட்டி—"இன்று வெகு காலையிலேயே எழுந்து நீங்கள் இரண்டுபேரும் எங்கேபோயிருந்தீர்கள்? பதினைந்து நாழிகை ஆய்விட்டது; அப்பொழுதும் உங்களைக் கண்டபாடில்லை. உங்களைக்காணாமல் இதுவரையிலும் என் உயிர் உடலில் தரிக்காமல் தத்தளித்தது. காட்டிலும் மலைகளிலும் திரிவதே ஒரு வியாதிபோல் உங்களைப் பிடித்திருக்கிறது. காடுகளிலும் கணக்கற்ற துஷ்ட மிருகங்கள் இருக்கின்றன. ஆகையால் நீங்கள் எப்போதும் அவ்விடங்களுக்குத் தனித்துப் போகவேண்டாம் என்று நான் எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன். ஆனால் நீங்கள் என் வார்த்தையை எப்பொழுது கேட்டிருக்கிறீர்கள்? நீங்கள் வருவதில் காலதாமதமாவதைப் பார்த்து ராம்ஜி உங்களை தேடுவதற்காகப் போயிருக்கிறான். உங்களை அவன் சந்திக்கவில்லையா? ஆஹா! பிரதிபையின் முகம் எப்படி வாடிப்போயிருக்கிறது பார். சுசீலனுக்குக் கொஞ்சமாவது விவேகம் கிடையாது. புஷ்பம்போல் மெல்லிய மேனியுடைய இந்தப் பெண்ணை மலைகளிலும் காடுகளிலும் இழுத்துக்கொண்டுபோய்த் திரிகிறான்!"

செவிலித்தாய் கடிந்துபேசிய வார்த்தைகளைக் கேட்டு சுசீலகுமாரன் தங்கையின் முகத்தைப் பார்த்தான்; உள்ளபடியே அவளது முகம் வாடிக் களையற்றிருந்தது. களைப்பினால் அவள் சோபை குன்றியிருந்தாள். சுசீலகுமாரன் அதைக் கண்டு மிக்க வெட்கமும் துக்கமும் அடைந்தான். பிரதிபை தமையனது மனோபாவத்தை அறிந்து புன்னகை புரிந்து பேசலுற்றாள்—"அண்ணா, நான் களைத்துப்போயிருக்கிறேனென்பதில் சம்சயமில்லை. நீ போய் போஜனம் செய். நான் சிறிது நேரம் இளைப்பாறுகிறேன். அம்மா, நான் சாப்பிடுவதற்குக் கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வா."

அதற்குள் ராம்ஜி வந்து சேர்ந்தான். அவனும் இவ்விருவர்களையும் கோபித்துக்கொள்ளாமலிருக்கவில்லை. அவனுக்குத் திருப்திகரமான சமாதானம் சொல்லிவிட்டு சுசீலகுமாரன் போஜனம் செய்யப் போனான். பிரதிபை கொஞ்சம் தீர்த்தம் குடித்துவிட்டு, வீட்டிற்கு அணித்தாயிருக்கும் தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு போய்ச் சேர்ந்ததும், வேணுகானம்போல் ஓர் இனிய குரல் அவள் செவியில் விழுந்தது. அந்தச் சத்தம் வந்த திசையின் பக்கமாய் அவள் திரும்பிப் பார்த்த பொழுது, மீனா, அம்பை என்னும் ஸந்தால ஜாதிப் பெண்கள் இருவர் பூங்கொத்துகளால் கூந்தலை அலங்கரித்துக்கொண்டு, ஒரு விருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்து, இருவர் சுரங்களும் ஒன்றோடொன்று கலந்து இழைந்து தொனிக்கப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிரதிபை பாட்டுக்கேட்கவேண்டுமென்று ஆசையால் எவ்விதமான சத்தமும் செய்யாமல் அவர்களின் பின்னால் போய் நின்றாள். அப்பொழுது,

"எனைவிட்டுப் பிரிஞ்சுபோன
என் மனம் கொண்ட கள்ளா,
மனையிலே என்னை விட்டே
மாயமாய் மறைஞ்சதேனோ?"

என்று பாடுவது அவள் காதில் விழுந்தது. பாட்டைக் கேட்டதும் பிரதிபைக்குச் சிரிப்பு

வந்தது. உடனே அவள், "அடி மீனா, அடி அம்பா, உங்கள் இரண்டு பேருக்கும் இன்னும் கலியாணமே ஆகவில்லையே; அப்படி யிருக்க உங்களைவிட்டு எவன் எங்கே போய்விட்டான்" என்று கேட்டாள். மீனாவும் அம்பையும் பிரதிபை தங்கள் சமீபத்தில் நின்றிருப்பதைப் பார்த்து வெட்கத்தினால் மிக்க கூச்சம் அடைந்துவிட்டார்கள். அதைப்பார்த்துப் பிரதிபை—"நீங்கள் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தீர்களே; இன்னும் பாடுகிறதுதானே? ஏன் வெட்கப்படுகிறீர்கள்? இன்றைக்கு மான்களுக்கு ஏதாவது தீனிபோட்டுத் தண்ணீர் காட்டினீர்களா இல்லையா?" என்று கேட்டாள்.

மீனா:— ஏ இல்லெ? பாருங்க, அதுங்க எல்லாம் தீனி துண்ணூட்டு தண்ணி குடிச்சுட்டு குந்திகிட்டு இருக்கு. இன்னெக்கி அம்மா அவங்க எங்கே போயிருந்தியங்க? ஒங்களெ காணலேன்னு பாட்டியம்மா மெத்த அழுதுகிட்டு யிருந்தாங்களே?

பிரதிபை:—உங்கள் எல்லாருக்கும் மலையின் மேல் ஏறிப்போவது வழக்கமாய்விட்டது. இன்று நானும் என் தமையனோடே மலைமேல் ஏறிப்போனேன். ஆனால் நீங்கள் எப்படி ஏறிப்போகிறீர்களோ தெரியவில்லை. என் காலிலே இன்று முழுதும் குத்தலும் குடைச்சலுமாகவே இருக்கிறது.

இதைக்கேட்டு மீனாவும் அம்பையும் இடி இடியென்று சிரித்தார்கள். சிறிது நேரம் கழித்து மீனா—"அம்மா, நீங்க பெரிய வீட்டுக்காரரு. மலெமேலெ ஏறிப்போறதுன்னா எவ்வளவு கஷ்டம். அதெல்லாம் உங்களாலே ஆறகாரியமா? எங்களுக்கு மலெயே வீடு. நாங்க மலையேறி போறது என்னா வோல்தி?" என்றாள்.

பிரதிபை:—நல்லது, இப்போ நீங்கள் பாடிக்கொண்டிருந்த பாட்டை இன்னொரு விசை பாடுங்கள், யார் உங்களை விட்டு விட்டுப் போய்விட்டான் என்கிறது எனக்கும் கொஞ்சம் தெரியட்டும்.

இதைக்கேட்டு அவ்விருவரும் மறுபடியும் சிரிக்கலானார்கள். சிறிது நேரம் கழித்து அம்பை சொன்னாள்—"மீனாவுடெ புருசன்."

பிரதிபை:— என்ன! மீனாவின் மணவாளனா! அப்படியானால் இப்போ அவளுக்கு கண்ணாலம் ஆகாதா? இன்னம் கண்ணாலம் ஆகல்லெ, அதுக்குள்ளே மீனாவின் புருசன் அவளை விட்டுப் போய்ட்டானா?

அம்பா சிரித்துக்கொண்டே சொன்னாள்—"அவெ அப்படி விட்டூட்டு போய்ட்டபடியாலெ மீனாவுக்கு மெத்த கயிட்டோ உண்டாயிருக்கிறது. அதனாலெதா மீனா பாட்டுப் பாடிக்கிட்டுயிருந்தா."

மீனா அம்பாவின் மேல் சிறிது சிநேகக் கோபம் பாராட்டிப் பிரதிபையைப் பார்த்து—"யில்லெம்மா யில்லெ, இவ பொய் சொன்னா. அது நாங்க பாட்ற பாட்டுங்கள்லெ வொண்ணு. அதெ இப்படிதா நாங்க பாடிகிட்டு யிருக்குற வயக்கம்" என்றாள்.

அப்பொழுது வனத்திலிருந்து புல்லாங்குழல் வாசிக்கும் ஓசை கேட்டது. அதைக் கேட்டு மீனா, அம்பா, இவர்களின் மனம் அந்தப் பாட்டோசை வந்த திசையில் சென்றது. சிறிது நேரம் கழித்து, அம்பா சிரித்துக்கொண்டே—"இதோ பாருங்க, ஒங்களுக்கு கேக்கிலையா, மீனாவுடெ புருசன் மீனாவெ அளெக்கறா" என்றாள். அதைக் கேட்டு மீனா கோபங்கொண்டு அம்பாவைத் தங்கள் ஸந்தாலி பாஷையில் என்ன திட்டினாளோ தெரியவில்லை; பிறகு அவளை அடிக்கக் கையை ஓங்கினாள். அம்பா இடிஇடியென்று சிரித்துக்கொண்டு ஓடிப் போய்விட்டாள்.

(தொடரும்.)

தாம்பத்யமுறை அல்லது மணவிமக்களும் முக்தி மார்க்கமும்.

(ஸ்வாமி ஸ்ரீராம தீர்த்த பரமஹம்ஸர்)

416-ம் பக்கத் தொடர்ச்சி.

ஸ்ரீமான் வெ. க. ராமநாதன், B.A., B.L.

ஸந்யாஸமென்றால் கௌபீனதாரியாகத் தெருவிலோ காட்டிலோ திரிவதன்று. ஸந்யாஸமென்றால் அனைத்தையும் பவித்ரமாக்குதல், பாவனமாக்குதல் எனக் கொள்ளவேண்டும். மக்களைத் தியாகஞ் செய்வது என்றால் குழந்தையை விட்டு ஓடி விடுதலன்று; குழந்தையை விரட்டி யோட்டுதலுமன்று. குழந்தை ஈசுவராம்சம், அதுவே ஈசுவரன் என்று கருதுதலே நிஜ ஸந்யாஸம். பிரதி வஸ்துவினிடத்தும் சகல சிருஷ்டிகளிடத்தும் ஈசனைக் காண்பதே வேதாந்த சாஸ்திரத்தில் கூறிய ஸந்யாஸமாகும். வேதாந்த சாஸ்திரம் சொல்கிறது —பெண்டாட்டியை விட்டுவிடு, புருஷனை விட்டுவிடு, பந்துக்களை விட்டுவிடு என்று— அதன் பொருளென்ன? பெண்டாட்டியை உன் உறவின் முறையினள் என்று கொள்ளும் எண்ணத்தையும், அவள் உன் பெண்டாட்டி, உன் இல்லக்கிழத்தியெனும் சம்பந்தத்தையும் மறந்து அவள் ஈசுவராம்சம்; உன் ஆத்மா தான் அவள்; நீதான் அவள், அவள்தான் நீ என அவளிடத்தில் ஈசுவரத் தன்மையை வைக்கவேண்டுமென்பதுதான் அந்த உபதேசத்தின் உண்மைப்பொருள். சத்துருவினிடம் சத்துருத்வத்தை யொழித்து அவனிடம் ஈசனைக் காணலும் மித்ரனை மித்ரனெனும் பாவத்துடன் பார்க்காமல் அவனிடம் நீ வைத்துள்ள மித்திரத்வத்தை மறந்து அவனிடம் ஈசுவரத்வத்தையும், ஈசுவர குணத்தையும் பொருத்திப் பார்த்தலுமே உண்மைத் துறவாகும்.

தன்னலங் கருதும் 'நான்' 'என்னுடையது' எனும் மமகாரத்தை யொழிப்பாயாக. சிருஷ்டிகளனைத்திலும் ஈசுவரனைக் காண்பாயாக. இடைவிடாது பிரபஞ்சமுழுவதும்பிரதிவஸ்துவினிடத்தும் காணப்படும் தெய்வீகத் தன்மையை நாடிப் பற்றுதல்வேண்டும். ஹிந்து தருமம், அதாவது ஸநாதந தருமம், பிரதி தம்பதிகளையும் இந்த உண்மையைப் பின்பற்றியே தமது தாம்பத்யத்தையும் கிருகஸ்த தருமத்தையும் இயற்றும்படி விதிக்கின்றது. இக்கோட்பாடுகளை இமைபிறழாது அநுஸரிக்கும் கிருகஸ்தனுடைய குடும்பத்தில் அவனுடைய தரும பத்தினியானவள் பிரதிதினமும் அருணோதயத்துக்கு முன்னரே எழுந்திருப்பாள். கிருகஸ்தன் தியானத்தில் ஆழ்ந்து, பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தில் ஈடுபட்டு அவ்வானந்த வெள்ளத்தினின்றும் பருகி இன்புறும்போது தேகத்தை மறந்து செயலற்று மனமற்று இரண்டிற்கும் அப்பாற் சென்று கடவுளினிடம் தன்னை அடைக்கலஞ் செய்து, அவருடைய அழிவற்ற கருணாம்ருத ரஸத்தை உட்கொண்டு களித்து நிற்கும் நிலையில் அவருடைய தரும பத்னி அவரெதிரே வந்து அவருடைய உடலின் தோற்றத்தை அகக் கண்ணினாலாவது புறக் கண்ணினாலாவது கொள்ளாமல் தன் பார்த்தா எவ்வாறு தமது சரீரத்தை மறந்து அந்த ஸ்தூல ரூபத்திற்கு அதீதமாய்ச் சென்று பரமாத்மாவுடன் ஐக்யப்பட்டிலயித்து நிற்கிறாரோ அவ்வாறே தானும் தனது புரு

ஷனுடைய திவ்விய தெய்வீக நிலையையும் ஈசுவரத்வத்தையும் மாத்திரமே கண்டவளாய்ப் பிறிதொன்றும் காணாதவளாவாள். இவ்விதம் தனது பர்த்தாவின் சரீரத்திற்குச் சற்று அப்பால் உட்கார்ந்து தனது கண்களிரண்டையும் அவருடைய புருவத்தினிடம் பதித்துப் பார்த்திருப்பாள். அவள் தன் பர்த்தாவைப் போன்ற உயரிய பக்குவ நிலையை யடையாதவளாதலால் ஓம் என்ற பிரணவத்தை உச்சரித்த வண்ணமாய் அவருடைய சரீரத்தைத் தன் மனதில் தியானித்து அந்தத் தியானத்தின் மகிமையால் இதர எண்ணங்கள் யாவற்றையும் மனதினின்று அகற்றித் தன் சொந்த உடலையும் அடியோடு மறந்துவிடுவாள். உடனே தன் பர்த்தாவின் சரீரத்துடன் சேர்ந்து விட்டதாகவோ அல்லது தன் சரீரம் அவருடைய சரீரமாக மாறிவி[illegible]தென்றோ அவளுக்குத் தோன்றும். அரா[illegible] இவ்வாறாயின் அவளுடைய ஆத்மா ஒவதா[illegible] தன் பர்த்தாவின் ஆத்மாவென்ற ஊர்ச்[illegible] உண்டாகி அவ்வித ஏகபாவத்தை அநுபவிப்பாள். தியானத்திலாழ்ந்து பரமாத்ம ஞானம் அடைந்திருப்பது தன் பர்த்தாவல்லவெனவும் தான்தான் அவ்வித பரமாத்ம ஞானத்தில் ஈடுபட்டிருக்கிறதாகவும் அவளுக்குத் தோற்றும். பர்த்தாவின் தியாகம் அவளதேயாகையால் தான் விசுவரூபியாகிப் பிரபஞ்ச முழுவதும் வியாபித்திருப்பதாகஅவள் கருதுவாள். அந்நிலையில் ஸகல பிரபஞ்சத்தின் ஆத்ம சக்தியும் ஈசுவர சக்தியும் தன்னையே யன்றி வேறில்லையென்ற ஸ்வாநுபவம் அவளுக்கு ஏற்படும். இவ்விதம் அவள் பர்த்தாவுக்கு உற்ற துணையாகவும் இருப்பாள். பர்த்தா அவளுக்குத் துணையாயிருக்கலாம். ஆனால் பர்த்தாவுக்கு அவளால் என்ன சகாயம் ஏற்படக்கூடுமென்ற [illegible]வி பிறக்கலாம். பத்தினியானவள் தன் பர்[illegible]வைக் கடவுளாகப் பாவித்துத் தன் முழு [illegible]லும் ஸங்கல்பத்தாலும் அவனை ஈசுவரனாகப் பாவிக்கவேண்டுமென்று அவள் பாமார்த்திகமாகக் கோரும்போது, அநந்நிய சிந்தையாய்ச் செலுத்தப்படும் அவளுடைய மனோசக்தியானது தான் ஸங்கல்பித்த மார்க்கஞ் சென்று அவனைக் கடவுளாக்காது போகுமோ? அப்புருஷனானவன் ஜீவாத்மாவேதான். பரமாத்மா என்ற உண்மையைக் கண்டறிவதற்காகச் செய்யும் கிருஷியில் அவனுடைய தர்மபத்தினியின் தூய சிந்தையும் கோரிக்கையும் உதவி புரியக்கூடுமென்பது இயலாத காரியமென நினைத்தல் கேவலம் அறியாமையும் உலகாயதவாதமுமேயாகும்.

எம்மனிதனையும் நாம் நினைக்கும் எண்ணங்களையே அவனை நினைக்கும்படி செய்வதும், நாம் போகும் வழியே அவனைப் போகும்படிச் செய்வதும் சாத்தியமான காரியங்களென்பது விஞ்ஞான சாஸ்திரிகள் தம் சுய அநுபவ சாக்ஷியால் ஒத்துக்கொள்ளும் உண்மை.

பதிவிரதா ஸ்திரீ யொருவள் திரிகரண சுத்தியாய்த் தன் பர்த்தாவே ஈசுவரன் என்ற பரம பவித்திரமான தெய்வீக எண்ணத்தை இடைவிடாது தந்தியந்திரம்போல் அனுப்பிய வண்ணமாக இருக்கிறாள். தானும், ஈசுவரனும், ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றேனும் உண்மையைப் பர்த்தாவானவன் உணர்வதற்கு மனைவியின் பிரார்த்தனைகள் பெரிதும் சாதனங்களாயிருக்கின்றன; அவ்விதமே புருஷன் அந்த அத்வைதப் பொருளை யுணர்வதால், மனைவியும் புருஷனுடைய சகாயத்தால் அதனை உணர்கின்றாள். இம்மணவினையென்பது எத்தகைய பவித்திரமான சேர்க்கையென்பதை யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்! இம்மணவினை, இல்லறம், தாம்பத்யமென்பது எத்துணை உயரிய நிலை பாருங்கள். இருவரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்து

கொண்டு ஒருவரை நம்பி ஒருவராக ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேறுகிறார்கள். இவ்வித ஆத்மார்த்தப் பலனைப் பயக்கும் மணவினையோ, காதலோதான் பரம ஸந்துஷ்டியான தாம்பத்யமாகும். தங்கச் சாயல், நல்ல மாநிறமென முகத்தின் வர்ணத்தைப் பார்த்தும், தேக காந்தியைப் பார்த்தும், கண்ணும் மூக்கும் சித்திரம் எழுதியதுபோல் அமைந்திருக்கிறதென அங்க லக்ஷணங்களைக் கண்டும், ஆள் உருவத்தைக் கண்டும், சரீரக் கட்டைக் கண்டும், ஆகார புஷ்டியைக் கண்டும், வனப்பைக் கண்டும் மோகங்கொண்டு முடிக்கப்படும் மணவினைகளனைத்தும் தாம்பத்ய சுகத்தைப் பயக்காது இல்லறத்திற்குக் கெடுதி விளைவித்துச் சதிபதிகளைப் பரிதாபகரமான நிலைக்குக் கொண்டுவந்து விடுகின்றன. அவ்வித விவாகங்களால் காலக்கிரமத்தில் சதிபதிகளிருவரும் தம்முள் சச்சரவிட்டு மனம் விண்டு ஆராத்துயருக்கு ஆளாகின்றனர்.

முகத்தின் சாயலையும், வடிவழகையும், உருவத்தினமைப்பையும் நோக்காது பரஸ்பர மனப்பொருத்தத்தையும், சதிபதிகள் தம்முள்ளுள்ள பரஸ்பர தெய்வீக உணர்ச்சியையும் பாரமார்த்திகத்தையுமே கவனித்து இணைக்கப்படும் விவாகமே பரம பவித்திரமானது. அதுவே நிலைத்து நிற்கக்கூடும். அவ்விதம் பாணிக்கிரஹணம் செய்த தம்பதிகளுக்கு மட்டுமே இகபரசுகமும் சந்தோஷமும் வாய்க்கும்.

ஒரு மகானிடம் விதந்து ஒருவள் வந்து நமஸ்கரித்து, "என் பர்த்தா சில மாதங்களுக்குமுன் காலமாய்விட்டார். அவரைக் கரையேற்ற நான் செய்யக்கூடியது யாது?" எனக் கேட்டனள். அச்சமயம் ஆடவர் ஒருவர் வந்து தன்னுடைய மகன் இறந்துவிட்டதாகவும், ஏக புத்திரவிஷயமாதலால் அம்மகன் பிரிவைத் தன்னால் ஆற்றமுடியாமையினால் தான் பிராணத்தியாகஞ் செய்துகொள்ள உத்தேசித்திருப்பதாகவும் கூறினர். இன்னொரு புருஷர் வந்து சேர்ந்தார். "மனைவி மாண்டாள். இனி நான் இருப்பதால் என்ன பயன்?" என்று சோகமுற்றார். இம்மூவர்க்கும் யாது விடை பகர்ந்தார் அம்மகா புருஷர்?

கணவனைப் பறிகொடுத்த மாது மிகவும் மனச்சோர்வுற்றுத் தன் புருஷனுக்கு நற்கதியுண்டாகும்படிக்கான காரியம் யாதாயினுஞ் செய்யவேண்டுமென்று பெரிதும் ஆவல்கொண்டிருந்தாள். அப்புனிதன் கூறினர் : "உன் கணவன் கடைத்தேரும் மார்க்கத்தைச் சொல்கிறேன், கேள். அதைரியம் வேண்டாம். நான் சொல்கிறபடி நடக்க வேண்டும். பிரதி தினமும் நீ துக்கமடைந்து கவலையுறும்போதெல்லாம், உன்புருஷனுடைய ஞாபகம் உனக்கு வரும்போதெல்லாம், உடனே கீழே உட்கார்ந்து கண்ணை மூடி உன் பர்த்தாவினுடைய திருவுருவத்தை மனதில் தியானித்துக்கொள். நாம் விரும்பும் வஸ்துக்களையோ உருவங்களையோ கணப் பொழுதில் நமது மனதின் முன் வந்து நிற்கும்படி நாம் செய்துகொள்ளலாமன்றோ? இவ்வாறு உன் பர்த்தாவின் உருவமோ அல்லது அவருடைய சரீரமோ, உன் மனதிற்கு வந்தவுடன் நீ வருத்தப் படக்கூடாது, துக்கப்படக்கூடாது, ஏங்கக்கூடாது, பெருமூச்சு விடக்கூடாது, அழக்கூடாது. ஏனெனில் அழுதாலும், பெருமூச்செறிந்தாலும், கண்ணீர் விட்டாலும் நீ உன் புருஷனை இம்மண்ணுலகைப்பற்றிக் கிடந்து உழலும்படி நிர்பந்தித்தவளாகிறாய்; அவரை இவ்வுலகைவிட்டு அகலவொட்டாது தடுத்தவளாகிறாய்; அவ்விதம் செய்வது யசஸ்கரமன்று; அதி ஹீனமான காரியமாகும். மேல்நோக்கிச் செல்லாது உன்னால் அவர் கீழே விழவேண்டியிருக்கும். அவரை நீ தாழ்மைப் படுத்தவாவது அவருடைய மேற்போக்கைத்

தடை செய்யவாவதுகூடாது. உன் புருஷன் அவருடைய புதிய நிலைக்குரிய பிறிதொரு உலகில் ஜீவித்து இருக்கின்றார். அவரை இறந்தவராக நினைக்காதே. அவர் உயிர்த்திராவிட்டால் நீ கண்ணை மூடிக்கொண்டு அவரை ஸ்மரித்தவுடன் உன் எதிரில் அவரது உருவம் ஸ்பஷ்டமாய் வந்து நிற்றல் முடியுமா? அவருடைய திருவுருவம் உன் மனதிற் படிந்தவுடன், அவரே தெய்வமென பாவித்து மனதில் அவ்வுண்மையைப் பதித்துக்கொண்டு "நீயே கடவுள், நீயே தெய்வம், நீயே அதிபதி. உனது உருவத்திலும், உனது சரீரத்திலும், உனது திருவுருவப்படத்திலும் நான் காண்பது பரமாத்ம ஸ்வரூபமே" என்ற உண்மை மொழிகளை இடைவிடாது மொழிந்து அவரிடம் பன்னிப் பன்னியுரைத்து அவருக்குப் போதனை செய்தவண்ணமாயிரு.

"நாம் டெலிபோன் யந்திரத்தைக்காதண்டை வைத்துக்கொண்டு கவனித்தால் ஏதோ குரலைக் கேட்கிறோம். அக்குரல் அந்த எஃகினாலாகிய யந்திரத்தினின்று வருவதன்று; நமது கண்ணுக்குப் புலப்படாமல் டெலிபோன் கம்பெயின் இன்னொரு நுனியண்டை நின்று பேசும் நண்பனுடைய குரலென்பதை நாம் அறிவோம். அவ்விதமாகவே இவ்வுலகை விட்டு, உன்னை விட்டு, அகன்ற உன் பர்த்தாவின் உருவத்தைக் காணுந்தோறும் உருவம் தெய்வீகமானதென்று நம்பி, அதன்படியே "நீதான் தெய்வம், நீதான் ஸ்வாமி" என்று ஒருமுறை இருமுறையன்று ஆயிரம் பதினாயிரம் முறையென ஓதிக்கொண்டேயிரு. இவ்விதமாக உன் புருஷனை நீ கடைத்தேறவைக்கலாம்" என்றார்.

இவ்வாறு இறந்தோரெனப்படும் நண்பர்களையே காத்து ரக்ஷிப்பது முடியுமென்றால் இதே மாதிரியான அப்பியாஸத்தால், பிரயத்தினத்தால், நமது உயிர்த்திருக்கும் நண்பர்களையும் கை கொடுத்துதவித் தூக்கி ரக்ஷிக்கக் கூடுமென்பதில் ஐயமுண்டோ?

புருஷனும் மனையாளுமாகக் கூடி இவ்விதம் இல்லறத்தை நடத்தினால், அத்தகைய தாம்பத்யத்தினால் பரஸ்பரம் நன்மையும் ஸந்தோஷமும் பயந்து முடிவில் ஆத்ம ஸாம்ராஜ்யமும் கைகூடுவதாகும். பிரதி புருஷனும் தன் மனைவிக்குச் சந்தோஷத்தைத் தரக்கூடிய வஸ்துக்களை வாங்கிக் கொடுத்து வசதிகளையமைத்து அவளுடைய மனதைத் திருப்தி செய்ய முயல்கிறான் என்று நீ சொல்லலாம். அவ்விதமாகத் திருப்தி செய்வதைச் சரியான மார்க்கமென ஜனங்கள் தங்கள் அறியாமைத் தனத்தால் கருதுகிறார்கள். சதிபதிகள் தம்முள் ஒருவருக்கெழும் அவாக்களையும் வேண்டுதல்களையும் இன்னொருவர் நிறைவேற்றி வைத்து அவர் மனங்கோணாமல் நடந்துகொள்வதுதான் அவரைச் சந்தோஷிப்பிக்கும் மார்க்கமெனத் தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் மனதிலெழுங் குறைகளைத் தீர்த்தவண்ணமாயிருப்பது தீர்த்தவனுக்கும் இழிவாகும்; குறை தீர்ந்தவருக்கும் இழிவைத் தருவதாகும். மனித இயற்கை யாதெனில், எனக்கு எது சந்தோஷத்தை யுண்டாக்குகிறதோ அது உனக்கும் சந்தோஷத்தை யுண்டாக்குதல் வேண்டும்; எனக்கு நன்மை எதுவோ அதுவே உனக்கும் நன்மையாக விருத்தல் வேண்டும்; நான் முன்னடைந்தால் நீயும் முன்னடைவதாக வேண்டும்; எனது முற்போக்கே உனது முற்போக்காகும். உலகத்தோரனைவரும் பிணியால் பீடிக்கப்பட்டாலன்றி நான் பீடிக்கப்படமாட்டேன். என் தேகத்தை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்வதால் நான் உலக முழுவதையும் ஆரோக்கியமாயிருக்கச் செய்கிறேன். விஞ்ஞான சாஸ்திரத்தில் ஓர் உண்மையுண்டு. அதாவது காரியத்திற்குப் பிரதிகாரியம் எப்போதுமுண்டு; அவை காரியமும் அதைப் பின்தொடரும் பிரதிகாரியமும் ஒன்றுக்கொன்று ஒரே அளவினதாகி முரண்பட்டு நிற்பனவாகும்.

என்றால் உனக்கு ஸந்தோஷம் உண்டானால் நானும் ஸந்தோஷமடையவேண்டும். ஒருவர் கோரிக்கையை இன்னொருவர் பூர்த்தி செய்துவைப்பதால் இன்பம் ஏற்படுகிறதென்று நினைக்கிறார்கள். அவ்வாறு ஏற்படுவதே கிடையாது. விரோத உணர்ச்சியும், மனம் முறிதலுமே மிஞ்சுகின்றன.

அவ்விதச் செயல்களால் இருவரும் வருந்துகிறார்கள். இருவரும் மனமுறிந்து தவிக்கின்றனர். அவர்களுக்குக் கவலையும் பயமும் அதிகரிக்கின்றன.

ஏன் இவ்வித பயங்களும் கவலைகளும் ஏற்படுகின்றன? ஒருவருக்கொருவர் இன்பம் பயத்தற்குச் சரியான மார்க்கம் இதுவென இருவரும் அறியாதிருத்தல்தான் காரணமாகும். நீங்கள் பரஸ்பரம் இன்புறச் செய்துகொள்ளவேண்டுமென்றால் தன்னயமே பெரிதாகி விளங்கும் இந்த 'நான்' என்னும் அகங்காரத்திற்கு நற்போதனை செய்தல் இன்றியமையாதது. உண்மையான சிநேக உணர்ச்சி உன்னிடம் ஏற்படவேண்டும். அந்தச் சிநேகத்திற்குப் போதுமான இடத்தையும் கைக்கொள்ள வேண்டும். பரஸ்பரம் புத்தியை விசாலப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறாகக் காலக்கிரமத்தில் நீயும் ஸந்துஷ்டியடைந்து உன்னைச் சேர்ந்தவர்களையும் திருப்தியடையும்படிச் செய்யமுடியும். உன்னைச் சேர்ந்தவர்களுக்கு நீ யதார்த்தத்தில் நன்மை செய்யவேண்டுமானால், இன்பத்திற்கு மூலாதாரங்களாகிய விசால புத்தியையும் ஆத்மஸ்வாதந்தரியத்தையும் நீ அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். உனது நண்பர்களுக்கும் இந்த உபதேசங்களைச் செய்து அவர்களையும் வழிக்குக் கொண்டுவரவேண்டும். தனது மனைவியின் புத்தியை விசாலப்படுத்தி அவளுக்கு ஞானோபதேசஞ் செய்வது பிரதி ஆண்மகனினுடையவும் கடமையாகும். தன் மனைவிக்கு உபதேசஞ் செய்யாத புருஷனும், ஞானோபதேசம் செய்து அவளை மேம்படுத்தாமலுமிருக்கும் மனைவியும் இன்பமுற்றிருப்பதென்பது இயலாத காரியம். அத்தகைய மனைவி பாபத்தைச் செய்தவளாகிறாள்; தன் இல்லத்தைத் தன் மனைவி கல்வி பயிலும் சர்வகலாசாலையெனக் கருதாத புருஷனும் பாபாத்மாவாகிறான். இவ்வித பரஸ்பர சகாயஞ் செய்துகொள்வதே தம்பதிகளிருவருக்கும் பரஸ்பர இன்பத்தைப் பயப்பதாகும்.

நம் வாசகர்கள் இயேசு கிறிஸ்துவின் ஜனனவிவரத்தை அநேகமாய் அறிந்திருக்கமாட்டார்கள். இயேசு கிறிஸ்துவின் தாயார் புருஷனுடைய சேர்க்கையில்லாமலே கன்னிகை பெற்ற பிள்ளையாகவே இயேசுவைப் பெற்றெடுத்தாள் என்பார்கள். இயேசுவின் அன்னையாகிய மேரி என்னும் பாக்யவதி பரிசுத்தை; சதா தெய்வ சிந்தனையுடையவள்; ஈசுவர பக்தியுடையவள்; சிறிது ஈசுவரானுபவமும் பெற்றவள். அவளைத் தெய்வமென்றே சொல்லலாம். கருத்தரித்தபின் அவளுடைய மானத்தை சம்ரக்ஷிப்பதற்காக அவளைப் பெண்டாடிய யோசேப்பும் தூய சிந்தையும், தெய்வ பக்தியுமுடைய சிறுவன். அவன் ஸகல சிருஷ்டிகளிடத்தும் ஈசுவர புத்தி பாராட்டும் மேன்மை பெற்றவன். இருவரும் யௌவன வயதினர். இருவரும் ஆத்ம சாக்ஷாத்கார அநுபவத்தில் மெய்மறந்து ஈடுபட்டிருந்தபோது இருவருக்கும் சேர்க்கை யேற்பட்டு அவள் கருத்தரித்தனள். பின்னடி அம்மாது சிரோமணி அவ்விதம் ஏதாவது நடந்ததென்றே அடியோடு மறந்துவிட்டாள்.

நல்ல தூக்கத்திலெழுப்பிக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் வழக்கம் அனைவருக்கும் தெரியும். மறுநாள் அக்குழந்தையைப் பார்த்து நேற்றிரவு பால் குடித்தாயா எனக் கேட்டால் அடியோடு இல்லையென்றே சாதிக்கும். இந்த அநுபவம் பிரதி வாசகருக்கும் தெரிந்திருக்கலாம். குழந்தை கண்விழித்து மொடு

மொடுக்கெனப் பால் குடித்ததென்னமோ வாஸ்தவந்தான்; ஆனால் அந்த ஞாபகமே அதற்கு இருப்பதில்லை. இதற்குக் காரணம் யாதெனில் முதல் நாள் இரவு பால் அருந்தும்போது குழந்தை சாதாரணமான உணர்வு நிலையிலில்லாமல் வேறொரு உணர்வு நிலையில் இருந்ததால் மனம் வேறெங்கோ சென்றிருந்தது. கண்துயில் காலத்தில் நடப்பதெனும் வியாதிக்குட்பட்டோர் தாங்கள் முந்தின இரவு துயில்விட்டெழுந்து செய்த பல்வேறு செய்கைகளுள் ஒன்றுகூட அவர்களுக்கு ஞாபகம் வருவதில்லை. இதைப்போலவே மேரியும் யோசேப்பும் ஆத்மானுபவமெனும் ஸ்வப்நாவஸ்தை போன்ற ஓர் அவஸரத்தில் மெய் மறந்து களித்திருந்தபோது மேரி கர்ப்பவதியானாள். அந்நிலையிலிருக்கும்போது உன் தேகத்தினுடைய ஞாபகமே உனக்குச் சற்றுமிராது. அவ்வித நிலையில் கருத்தரித்தவள் பின்னடி ஊரார் கேட்கும்போது கருத்தரித்த சந்தர்ப்பமே அவளுக்கு ஞாபகமில்லாமற்போயிற்று. கிறிஸ்தவர்கள் அவள் ஈசனுடைய அருளால் கருத்தரித்தாளென்றனர்; அதாவது ஈசுவரானுபவம் அடைந்து, ஈசுவரானுக்ரஹம் பெற்று, ஈசுவர ஸாந்நித்தியத்தில் ஈடுபட்டிருந்து அவள் கருத்தரித்தாள் என்பது பொருள். இவ்வாறாக இயேசு கிறிஸ்து ஈசனின் மகனானார். மேரி யோசேப்பைக் கூடித்தான் கருத்தரித்தனள். என்றாலும் இயேசுகிறிஸ்துவை ஈசனுடைய மகனென்று நாம் ஏன் சொல்லக்கூடாது? இப்போது ராமதீர்த்தர் சொல்வது யாதெனில் கிறிஸ்துவைப்போன்ற பல்லாயிர மக்கள் அவதரிக்கவேண்டுமானால், அதாவது கிருஷ்ணன், இயேசுபோன்ற சற்குண சம்பந்தராய் விளங்கக்கூடிய மக்களைப் பெறவேண்டினால் நீங்கள் தம்பதிகள் இருவரும் மனமொருமித்து ஈசுவர ஸாந்நித்தியத்தில் ஆழ்ந்து ஈடுபட்டுத் தூய சிந்தையராதல் இன்றியமையாதது என்பதேயாம். சற்றும் சுயநயம், பொறாமை, அசூயாதி சிறு குணங்களும் குறும்புமதிகளும் மனதிற் குடிகொள்ளாது சதா தெய்வ சிந்தனையுடையவர்களாகி, சகல ஜீவராசிகளிடத்தும் தெய்வ புத்திவைத்து, அவற்றினிடம் அன்பு பாராட்டி, அல்லும் பகலும் உயரிய எண்ணங்களும் பாரபுத்திகளுமே மனதிற் குடியிருத்திச் சோம்பலடையாமல் சோர்வடையாமல் ஸதா ஈசனருளெனும் நவசக்தியுடன் திகழ்ந்துகொண்டிருந்தால் அத்தகைய தம்பதிகள் இல்லத்தில் புத்தர்களும் இயேசுகளும் இன்றைக்கும் அவதரிப்பார்கள் என்பதில் சிறிதேனும் ஐயப்பாடு கிடையாது.

நம்முடைய இல்லமானது நாம் கொள்ளும் பிரேமைக்கு மூலஸ்தானமாய் விளங்குதலன்றி வெளிப் பிராகாரமதிற்சுவராக நிற்றல்கூடாது. சாதாரணமாய் ஜனங்கள் தங்களுடைய அன்பும் பிரேமையும் தனது குடும்பத்திற்கு வெளியே செல்லவொட்டாமல் இல்லத்தை ஒரு கோட்டையாகச் செய்துகொள்கிறார்கள். மனைவியும் இல்லமும் நமது பிரேமைக்கு உறைவிடமாய், நடுநாயகமாய், நாற்பக்கமும் கிரணங்களை வீசும் கதிரவனைப்போன்றதாயிருக்க வேண்டும். உன் அன்பும் பிரேமையும் அங்கேயே அடைபட்டு உன் பெண்டு பிள்ளைகளுடன் நின்றுவிடல்கூடாது. உன் பிரேமையின் எல்லைக் கல்லாக உன் மனைவியையும் மக்களையும் நிர்ணயித்துவிடக்கூடாது. உன்னுடைய தன்னலங்கருதிய எண்ணங்களாலும் யோசனைகளாலும் அவளையும் சீர் குலைக்கிறாய். நீயும் சீர்கெடுகிறாய். இருவருடைய நாசத்திற்கும் நீ காரணமாகின்றாய். நேசிக்கும் வகையை மனைவியானவள் உனக்குப் போதிக்கிறாள். அவள் கற்பித்த அந்தப் பிரேமையைப் புனிதப்படுத்தி அதனைப் பிரபஞ்ச சிருஷ்டியினிடம் செலுத்தும் அகண்டப் பிரேமையாக விசாலப்படுத்தி முடிவில் அவ்விதம் புறவல்லுநர்களிடம் வைத்

துள்ள பிரேமையை பிரேமையாக மலரவைத்தல் வேண்டும். நீ அதே பிரேமையுடன் சிருஷ்டி வகைகளனைத்தையுமணுகி புல், புஷ்பம், மலை, ஆறு, குளம், குட்டை யாவற்றையும் அவ்வித அன்பு நிறைந்த நோக்கத்துடன் பார்ப்பாயானால் உன் ஜன்மம் சாபல்யமடைந்ததாகும். பிரபஞ்சத்துள்ள பல்வேறு வஸ்துக்களுக்கும் உனக்கும் அடிப்படையாய் நிற்கும் அத்வைத நிலையைக் கண்டறிந்தவனாகிறாய்.

உனக்கும் உலகிற்கும் உள்ள சம்பந்தத்தை எடுத்துரைத்து அதனுடன் நீ எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதை உன் மனைவி மூலமாய் நீ கற்றல்வேண்டும். உலகத்தோடு ஒட்டிவாழும் மார்க்கத்தை அவளிடம் நீ கற்றுக்கொள்ளவேண்டும். உலகத்துடன் ஒவ்வாமல் உன்னை வாழும்படிச் செய்வாளேயாகில் அவள் பரமத்ரோகியாகிறாள்.

(தொடரும்.)

கலாவதி அல்லது காலத்தின் கொடுமை.

437-ம் பக்கத்தொடர்ச்சி.

(சகோதரி வி. பாலம்மாள்.)

9-வது அதிகாரம்.

இச்சம்பவம் கண்டு கோர்ட்டு முழுதும் தத்தளித்தது. கலாவதியின் வேலைக்காரிகள் ஓடிவந்து ஜட்ஜியின் உத்திரவின்படி எஜமானியைத் தனியறைக்கு எடுத்துச் சென்றார்கள். மூர்ச்சை தெளிவிப்பதற்கான வைத்திய உதவியும் உடனே யளிக்கப்பட்டது. கோர்ட்டில் சந்தடி யடங்கியதும் வாதி வக்கீல் தனது வாதத்தைத் தொடங்கி 'இச்சந்தர்ப்பத்தில் நடந்தவைகளைக் கொண்டே நியாயம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தனக்கு வேறு சாக்ஷியில்லை என்பதை பிரதிவாதி ஒப்புக்கொள்ளுகிறாள்' என்றதும் 'பேச்சை நிறுத்தும். பிரதிவாதி தரப்பில் தக்க சாக்ஷி யிருக்கிறது' என்ற சொல் கூட்டத்திடையே உண்டாயிற்று. இதுவரை யொன்றுமில்லாது கேஸ் முடியும் தறுவாயில் சாக்ஷிவிடப்படுமானால் அதை யொப்புக்கொள்வதா கூடாதா என்பதுபற்றி வாதிப்பிரதிவாதிகளின் வக்கீல்கள் நெடுநேரம் போர்புரிந்தனர். குறுக்குக் கேள்விகளால் நொடிப்பொழுதில் மடக்கிவிடலாமென்ற தைரியத்தால் வாதி வக்கீல் முடிவில் சம்மதித்தார். கோர்ட்டு சேவகன் சகுந்தலையம்மாள் என்று மும்முறை யழைத்தான். உடல் முழுதும் முக்காடிட்டிருந்த உருவமொன்று சாக்ஷிக்கூண்டிலேறிற்று. 'சர்வ வல்லமையுள்ள கடவுளின் முன்பாக' என்று சொல்லும் சமயம் முகமூடியை விலக்கிக்கொண்டு பதினெட்டு வயதுள்ள மங்கை யொருத்தி பிரமாணமெடுத்துக் கொள்ளுவதறிந்து சந்திரனைத் தவிர்த்து மற்றெல்லோரும் ஆச்சரியமடைந்தனர். கோபந் தாங்காது சந்திரன் இருக்கைவிட்டெழுந்திருந்தான், ஆனால் ஏற்கனவே அருகில் தயாராக நின்றுகொண்டிருந்த போலீஸ்வீரர் இருவர் இவனை யசையாது உட்காரச் செய்துவிட்டார்கள். மோகனாங்கி சாக்ஷி சொல்லவாரம்பித்தாள்.

கேள்வி:— கலாவதியம்மாளின் குழந்தையைப் பற்றி உமக்கேதாகிலும் தெரியுமா?

பதில்:— எனக்கு நன்றாய்த் தெரியும்.

கேள்வி :— அக்குழந்தையின் பூர்வோத்திரமென்ன?

பதில்:—நான் அதைப் பெற்ற தாய். குழந்தைக்கு ஒருமாதமாகுந் தருவாயில் என் தந்தை கலாவதியம்மாளிடம் ஒப்புவித்தார்.

கேள்வி:—உமக்கு விவாகமாயிருக்கிறதா? தான் பெற்ற குழந்தையைப் பிறரிடம் ஒப்புவித்த காரணமென்ன?

பதில்:—எனக்கு விவாகமாயிருக்கிறது. வெளியிடக்கூடாத சில காரணங்களால் அவ்வாறு செய்ய நேர்ந்தது.

கேள்வி:— முழு விவரங்களையும் சிறிதுமொளிக்காமல் வெளியிட்டாலன்றி உமது சாக்ஷியத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

பதில்:— நான் இக்கேஸில் வாதியாயிருக்கும் சந்திரசேகரரின் மனைவி. என்பெயர் மோகனாங்கியல்ல. சகுந்தலை என்பதே எனது உண்மையான பெயர். பாரிஸ்டர் தயாநிதி என் தந்தையாவார். ஒருசந்தர்ப்பத்தில் என் கணவரைச் சந்தித்தேன். சிறு வயதில் என்னை மணம்புரிந்து பிறகு ஒரு முறைகூட என்னைப் பார்த்திராததால் அவர் என்னை இன்னாரென்று கண்டுகொள்ளவில்லை என்பதறிந்தேன். அச்சமயம் என்பெயர் மோகனாங்கியென அவரிடம் தெரிவித்தேன். அவரிடம் முழு நட்பையும் பெற்றபின் என் பெயரை யவருக்குத் தெரிவிக்கலாமென்றிருந்தேன். மறுமுறை யவரைக் காண முடியவில்லை. இது கழிந்த பத்தாவது மாதத்தில் எனக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. இவ்வசந்தர்ப்பத்தைக் கண்டு பலர் பலவாறு நினைக்கக்கூடுமாகையால் என் தந்தை அக்குழந்தையைத் தக்க விடத்தில் வளர்த்து வரும்படி ஏற்பாடு செய்தார். என் குழந்தை செம்மையாய் வளர்க்கப்படுவதறிந்து நானும் அச்சமயத்தை யுத்தேசித்துத் திருப்தியடைந்தேன். இக்கேசு ஆரம்பிக்கும்முன் கல்கத்தாவில் முன்னமொரு தடவை சந்தித்திருந்த மோகனாங்கியை மீண்டும் சந்தித்து அவளையே விவாகம் செய்துகொள்ளவும் சந்திரசேகரர் விரும்பினார். இதை யறிந்த நான் மோகனாங்கியாகவே அவரை ரிஜிஸ்டர் கலியாணமாகச் செய்துகொண்டேன். இவ்விஷயங்கள் ஆரம்பம் முதல் என் தந்தையின் அனுமதிபெற்றே நடந்து வந்தனவாயினும் அவர் பெயரும் நான் யார் என்பதும் இன்றுவரை சந்திரசேகரர் அறிந்ததில்லை. நான் என் கணவருடன் சென்னையில் வசித்து வந்தேன். இந்தக் கேசுக்கும் என் குழந்தைக்கும் சம்பந்தமிருப்பதை நேற்றுப் பகல் பனிரண்டுமணி வரையில் நானறியேன். நேற்றுப் பகல் வண்டியில் கல்கத்தாவிலிருந்து என் தந்தை சென்னை வந்து என்னிடம் அதுவரை வெளியிடாதிருந்த பல விஷயங்களையும் வெளியிட்டார். தந்தையுடன் நான் இன்று காலை இவ்விடம் வந்திருப்பதை என் கணவன் அறியார். குழந்தை பிறருடையதென்பதற்குக் கடவுள்தான் சாக்ஷியென்று கலாவதியம்மாள் சொன்னதும் உண்மையை வெளியிட்டுத்தீரவேண்டிய சமயம் வந்துவிட்டதென்று என் தந்தை என்னை எச்சரித்தார்.

மோகனாங்கியின் வாக்குமூலம் முடிந்ததும் அவள் தந்தை விசாரிக்கப்பட்டார். தயாநிதி பிரபல மனிதரானபடியால் விஷயங்கள் உண்மையென்றே ஜட்ஜ் தீர்மானித்தார். ஜட்ஜ்மெண்ட் படித்து முடிக்க நெடுநேரமாயிற்று. வக்கீல் தொழிலென்பது சிறந்த தொழிலென்றும், ஆனால் பணத்தாசையால் இவர்கள் கண்டபடிக்கெல்லாம் கேஸை ஜோடிப்பது அடாத செய்கையென்றும், வாதி இவ்விதம் கேஸ் தொடருவதற்கு வக்கீல் காமேச்வரனின் தூண்டுதலே காரணமென்பதை வாதி ஒப்புக்கொண்டுவிட்டதால் இனியேனும் இவ்வாறு விபரீதமான கேஸ்களைப் பிறரும் ஜோடிக்காதிருத்தல் அவசியமென்றும், பிரதிவாதி கலாவதியம்மாளுக்கு இஷ்டமுண்டானால் வாதிமீதும் வக்கீல் மீதும் மான நஷ்ட வழக்குத் தொடரவும்கூடுமென்றும், பெண் மக்களை வாதிப்பிரதிவாதிக

ளாகக்கோர்ட்டிலிழுப்பது வருந்தத் தக்கதென்றும், சாக்ஷி சொல்லும் பெண்பாலை வாய்க்கு வந்தபடி குதர்க்கமாகக் குறுக்குக்கேள்விகளைக் கேட்பதால் வக்கீல்களின் நிலைமை பலினமடைவதாயும், இனியேனும் இத்தகைய பரிதாபகரமான கேஸ்கள் கோர்ட்டுக்கு வராமலிருக்கும்படி வக்கீல்களை எச்சரிக்கை செய்வதாயும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. கோர்ட்டில் கூடியிருந்த ஜனங்கள் இதுகேட்டு சந்தோஷத்தால் ஆரவாரஞ் செய்தனர். இனி எவ்விதத் தகராறுகளையும் பஞ்சாயத்தார் மூலமாகவே தீர்த்துக்கொள்வதன்றி வக்கீல்களை நம்பி அவர்கள் கற்பிக்கும் சிட்டாக்களைப் பாடமாகக் கோர்ட்டில் ஒப்பவித்துக் கையிலுள்ள காசையும் முகத்திலுள்ள பவிஷையும் இழப்பது கூடாதென்று அவர்கள் மனதில் நிச்சயம் செய்துகொண்டனர்.

பெண்களின் சொத்துரிமை ஹிந்துலாவில் திருத்தப்படாமையாலேயே இவ்வாறு அநியாய வழக்குகள் ஏற்படுகிறதென்றும், கணவனுடைய பாகமோ அல்லது அவனால் எழுதி வைக்கப்பட்ட சொத்துக்களோ மனைவிக்கு சர்வ சுதந்திர பாத்தியமாக ஏன் இருக்கக் கூடாதென்றும். அவ்வாறிருந்தால் காமேச்வரன்போன்ற வக்கீலுக்கும் சந்திரசேகரன் போன்ற வாதிக்கும் கோர்ட்டு விவகாரத்தில் இடமேற்படாமலிருந்திருக்குமென்றும் சிலர் பேசிக்கொண்டார்கள். உட்கார்ந்தவிடம் விட்டசையாது இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த சந்திரனுக்குத் தன்னையறியாது துக்கம் மேலிட்டுத் தான் செய்த பிழையை எண்ணி வாய்விட்டலறினான். காமேச்வரன் பணத்தாசையால் வக்கீல் தொழிலுக்கே பெருத்த அவமானத்தை விளைவித்துவிட்டானே என்ற தலையிறக்கத்துடன் மற்ற வக்கீல்கள் வெளியே சென்றனர்.

முடிவுரை.

கலாவதி தன்னிடம் உள்ள குழந்தை சந்திரனுடையதென்று தெரிந்துகொண்டதில் அளவற்ற சந்தோஷமடைந்தாள். தனது கொடிய வழக்கங்களையும் துஷ்ட சகவாசங்களையும் விடுத்து சந்திரசேகரன் முன்போலவே கலாவதியைப் பெற்ற அன்னையைப்போல் பாவித்து அவளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கலானான். சகுந்தலையும் கணவனுடன் சந்தோஷமாய்க் காலங்கழிக்கும் பாக்கியத்தை யடைந்தாள். கேஸ் நடக்கும்காலத்தில் விரோதமாக சாக்ஷியங் கொடுத்தவர்கள் எல்லாம் இப்பொழுது கலாவதியின் காலில் விழுந்து மன்னிப்பை வேண்டினார்கள். காணாதவிடத்தில் கலாவதியை தூஷித்துப் பேசித் திரிந்த பந்துக்கள் வெட்கத்தால் தலை குனிந்தார்கள். தஞ்சை ஜில்லாமுழுதும் வக்கீல் காமேச்வரனின் கேடுகெட்ட புத்தியைப்பற்றியும் 'பொய் கொல்லும் மெய் வெல்லும்' என்ற நியாயம் கலாவதியின் விஷயத்தில் மெய்ப்பிக்கப்பட்டது பற்றியுமே பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தது. கேஸ் நடந்த காலத்தில் எதிரிகளிடம் லஞ்சம்பெற்று கலாவதியின் கணவன் சிரார்த்தத்தை நடத்தவர மாட்டேனென்று வீராப்புப் பேசிய குண்டலதீக்ஷிதர் உமாமகேச்வர விரதத்தில் கலாவதியால் அளிக்கப்பட்ட வெள்ளிக்குடங்கள் பதினாறில் ஆறுகுடங்களைத் தன்னைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கும்படி பிரயத்தனம் செய்ததுடன் தாமே முதன்மையாயிருந்து நடத்தி வைத்து சம்பாவனை பெறவேண்டுமென்றும் முயர்ச்சித்தார். ஆனால் மனதில் சத்தியமும் நடவடிக்கைகளில் நன்னெறியும் நியாயமான வழியில் சம்பாதித்தலுமின்றி பணமே பிரதானமென்று பல்லைக் காட்டும் குண்டல தீக்ஷிதரின் குண்டலங்களில் கலாவதிக்கு முன் இருந்த மரியாதையும் நம்பிக்கையும் இப்பொழுது அடியோடு

இல்லாமல் போய்விட்டது. இச்சகம் பேசித்திரியும் ஏழைகளையும் சமயத்திற்கேற்றது போல் பேசித்திரியும் வைதீகர்களையும் கண்டால் ஒன்று காணாவிடத்தொன்று என்று பேசும் பந்துக்களையும் அடியோடு கலாவதி வெறுத்துத் தள்ளிவிட்டாள். தன்னிடம் மீந்துள்ள ஆபரணங்களை விற்று அத்தொகையையும் தனக்குச் சொந்தமான சொத்துக்களையும் மூலதனமாக வைத்து ஹிந்துப் பெண்களில் ஏழைகளாயுள்ள விதவைகளைக் காப்பாற்றும் பொருட்டு காசிமா நகரில் ஒரு விதவாச்ரமம் ஏற்படுத்தினாள். அவ்வாச்ரமத்தில் கைராட்டினத்தில் நூல் நூற்பதற்கும் கைத்தறியில் நெசவு செய்வதற்கும் தேச பாஷையைச் செவ்வையாய் எழுதிப் படிப்பதற்கும் கற்பிக்கப்பட்டு இலவசமாகவும் அவ்வேழைப்பெண்களுக்கு போஜனமுமளிக்கப்பட்டு வந்தது. 'கெட்டும் கேடு நினையாதே' என்ற நீதி மொழியை கலாவதி மறக்கவில்லை. வக்கீல் காமேச்வரன் எதிர் பாராவண்ணம் கோர்ட்டு மெத்தைப் படிக்கட்டிலிருந்து உருண்டுவிழ மண்டை சுக்கல் நூறாக உடைந்து மாண்டார் என்ற செய்தி கேட்டுப் பலர் இதுவே இட்டார்க்கிட்டபலனென்பது என்று சொன்னபோதிலும் கலாவதி அவர் மனைவி ஹைமவதியையும் அவள் தாயாரையும் விதவாச்ரமத்தில் வசிக்கும்படி ஏற்பாடு செய்து உதவினாள். கலாவதியின் அருமைக் குழந்தை பாலகோபாலன் சாக்ஷாத் கிருஷ்ணாவதாரம்போலவே வடிவிலும் அழகிலும் சிறந்து விளங்கினான்.

சுபம்!

கண்ணகி குறித்த கற்புடைமகளிர்.

ஸ்ரீமான் சொ. பழனியப்ப செட்டியார்.

உலகத்துப் பெண்பாலார் யார்க்கும் கற்பு இன்றியமையா அணிகலனாம். கற்பாவது கணவனைத் தெய்வமென உணர்வதோர் மேற்கோள். கொண்டானிற் சிறந்த தெய்வமில்லையென்றும், அவனுக்கு நீ இன்னவாறு குற்றேவல் செய்தொழுகு என்றும் தாய் தந்தையராலும், பிறராலும் கற்பிக்கப்பட்டு இவ்வொழுக்கம் நிலைபெறுதலான் இப்பெயர் பெற்றது. இக்கற்புடை மங்கையரே தெய்வமெனப் பேணுந்திறனுடையார். கற்புடை மங்கையரால் ஆகாத காரியமொன்றில்லை.

“தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை” என்பதுவுங்காண்க.

முற்காலத்து தமயந்தியென்பாள் காட்டில் கணவனைப் பிரிந்து அல்லலுற்றிரங்கி பாம்பால் பிடிக்கப்பட்டுழி, அதனை விடுவித்த வேடுவன் தன்மாட்டுக் கேடு நினைத்தலான் அவனை யெரித்தாள். சாவித்திரி யென்னும் மாது காலனாற்கொள்ளப்பட்ட தனது கணவனுயிரை விடாது பின்தொடர்ந்து கைப்பற்றினாள். இன்னுமிதுபோன்ற கற்புடை மங்கையர் சரிதைகள் எண்ணிலவாய் இலங்குகின்றன. கோவலனென்னும் வணிகன் மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனால் சிலம்பு திருடிய குற்றஞ் சாற்றப்பட்டு வெட்டுண்டிறந்தான். அதனையறிந்த அவன் மனைவியாகிய கண்ணகி யென்பாள் ஆண்டு சென்று கோவலன் குற்றமுடையானல்லன் என்பதை நிரூபித்தாள். அதனை யறிந்த அரசன் நடுநடுங்கி “இழிதகைமையையுடைய பொற்கொல்லன் சொற்கேட்ட நானோ அரசன்! ஐயோ! அருமந்த குலம் என்னாற் பழியடைந்ததே! என் ஆயுள் இன்றே அழியக்கடவது” என்று துக்கித்துத் தானிருந்த மணியாசனத்தின்மீதே மயங்கி வீழ்ந்திறந்தான். அதனை யறியாத அவன் மனைவி தம்மைக் காத்தருளவேண்டுமென்று கண்ணகியின்

பாதங்களில் வீழ்ந்தாள்; வீழவே கண்ணகி, கீழே குறிக்கப்படுகின்ற கற்புடை மங்கையர் எழுவர் பிறந்த நாட்டிற் பிறந்தவளாகிய நான் உண்மையிற் பத்தினியாமாயின் 'அரசனோடு இம்மதுரையையும் ஒழிப்பேன்' என்று வஞ்சினங்கூறித் தனது இடக்கொங்கையை வலக்கையாற்றிருகி அதனை யந்நகரத்தின்மீதெறிந்து காவலன் பேரூரைக் கனையெரிமூட்டினாள். கண்ணகியாற் குறிக்கப்பட்ட கற்புடை மங்கையர் எழுவர் வரலாறு பின்வருமாறு :—

1.

"வன்னிமரமும் மடைப்பளியுஞ் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய் குழலாள்."

கடலோடு சென்று காவிரி கலக்குஞ் சங்கமுகமென்னுந்துறை முகத்தையுடைய காவிரிப்பூம்பட்டினத்தின்கண் எல்லையில் செல்வமுடைய வணிகனொருவனிருந்தான். அவன் புத்திரப்பேறின்மையாற் பல வகை யறங்களை யாற்றி, அதன் பயனாய் ஒரு பெண் மகவைப் பெற்றான். அவ்வணிகன் பாடல்சால் சிறப்பிற்கூடல் நகர்க்கண் மணமுடித்துக்கொண்டிருக்கும் தன் மருமகனுக்கே இம்மகவைக் கொடுப்பேனென்று சுற்றத்தாரறியச் சொல்லிக்கொண்டிருந்து சின்னாட்களில் இறந்துவிட்டான். அந்நாளிலேயே அவன் மனைவியும் பிரிவாற்றாது உடனிறந்தாள். சுற்றத்தார் அவ்விருவருக்கும் அபரக்கிரியைகளைச் செய்த பின்னர் அவன் மருமகனுக்கு ஓலையனுப்பினர். மருமகன் அவ்வோலையைக் கண்டு மிகவும் வருந்தி சுற்றத்தார் தேற்றத் தெளிந்து மதுரையை நீங்கிக் காவிரிப்பூம்பட்டிணத்திற்கு வந்து மாமனுடைய வீட்டின்கண் இருந்தான். சின்னாட் கழிந்த பின்பு அப்பெண்ணை மதுரைக்கு அழைத்துச் சென்று ஆண்டுள்ள கிளைஞர் அறிய விவாகம் செய்துகொள்வேனெனக் கூறி மாமனுடைய செல்வங்களை யெல்லாம் உடன்கொண்டு மதுரையினீங்கித் தன்னுடன் போந்த சுற்றத்தினரை முன்னே போமாறு சொல்லித் தான் அப்பெண்ணை யழைத்துக்கொண்டு மெல்லச் சென்றான். திருப்புறம்பயம் என்னூர்த் தலத்திற்குச் சென்று இன்றிரவை யீண்டுக் கழித்து வைகறையிற் புறப்படுவோமென்று அருகிலுள்ள கிணற்றில் ஸ்நானஞ் செய்து அவ்விடத்துள்ள வன்னிமரத்தடியிற் சமையல் செய்து உணவருந்திக் கோயிற்படி யொன்றில் தலையை வைத்து நித்திரை செய்தான். அவ்வமயம் ஒரு சர்ப்பம் அவனைத் தீண்ட விஷந் தலைக் கேறி யிறந்தான். உடனிருந்த சேடிப் பெண்கள் அவனுக்குற்றதை யுணர்ந்து புலம்பி நின்றனர். அப்பெண் இவைகளைக் கண்டு ஒரு சாரொதுங்கி அறிவிழந்து மயங்கி இறந்தவள் போலானாள். துன்பம் என்பது இத்தன்மையதென அறியாதவளாதலால் ஆற்றாது அவன் மேற்கொண்ட காதலுருகினாற் போன்று அன்றிரவெல்லாம் தனியே யிருந்து வாய்விட்டாற்றினாள்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள்தோறும் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு வந்து அருகிலுள்ள திருமடமொன்றில் எழுந்தருளியிருந்த மலைமகள் ஞானமுண்டாராகிய திருஞானசம்பந்தப் பெருமான் அவ்வழுகுரலைக் கேட்டு அங்கெழுந்தருளி வந்து அப்பெண்ணை நோக்கி "நீ யார்? நிகழ்ந்ததென்னை?" என வினவியருளினர். அவள் தன் மரபும், தாய் தந்தையரும், அவர் தன்னை யிவனுக்கே மணமுடிப்பேனெனக்கூறியதும் இவனிறந்ததும் ஆகிய எல்லாவற்றையும் கூறினாள். பெருமான் தமியளாகிய அப்பெண்மேல் இரக்கங்கொண்டு இறந்த அவ்வணிகனுக்குச் சமீபத்திற்சென்று அவன் உயிர் பெற்றெழுமாறு திருக்கண் சாதித்தருளினர். இறந்த வணிகன் துயினீத்தெழுவான் போன்று எழுந்து நாயனாரை வணங்கி நின்றான். அக்கன்னிகை சந்தோஷக் கடலுள் மூழ்கி ஒரு சாரொதுங்கி

நின்றாள். அக்கன்னிகை தன் மாமனுடைய மகனா யிருந்தும் அவனிறந்தபோதும் உயிர் பெற்றெழுந்தபோதும் அவனைத் தீண்டாத நிலையையும் கற்பினையும் திருஞானசம்பந்த பெருமான் கண்டு அவ்வணிகனை நோக்கி 'உன் மாமன் பெற்ற இவள் சோபனகாலத்தில் அல்லது துக்க காலத்திலல்லாது என்று உன் தேகத்தைத் தீண்டப் பெறுவாள்? ஆதலால் இவ்விடத்திற்றானே விவாகம் செய்துகொண்டு செல்வாயாக' யென்றார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு பெருமானை வணங்கி "கிளைஞருஞ் சான்றுகளுமின்றி யெவ்வாறு விவாகம் செய்து முடிப்பேன்" என்று வினாவ "உன் மாமன் இக்கன்னிகையைப் பெற்றபொழுதே உனக்கே மணமுடிப்பேனெனக் கூறியதைச் சுற்றத்தார் யாவருமறிவர். அன்றியும் இந்த வன்னி மரமும் கிணறுமே சாட்சியாம். நம் வார்த்தையைக் கடவாது மணமுடிப்பாய்" என்று பெருமானருளி செய்தார். அதனைக் கேட்ட வணிகன் "அடியேனுக்குத் தாய் தந்தையரும் பிறவும் நீவிரே" யென்று பெருமானை வணங்கி அவர் கட்டளைப்படி மணவினையாற்றுங்கொண்டு மனைவியோடு அப்பெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு மதுரைக்குச் சென்றான். மதுரைக்கணுள்ள கிளைஞர் யாவரும் அவ்வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்தனர். வணிகன் தன்னுடைய பொருளும், தன் மாமனுடைய பொருளுங் கொண்டு வாணிபம் செய்து குபேரனைப் போன்று வாழ்ந்தான்.

அவனுடைய மூத்த மனைவிக்குத் துஷ்டர்களாகிய பல பிள்ளைகளும், இளைய மனைவிக்கு ஒரு சற்புத்திரனுமுண்டு. இருவருடைய பிள்ளைகளும் தெருவில் விளையாடுங்கால், மூத்தவளுடைய பிள்ளைகள் இளையவளுடைய பிள்ளையை அடித்தார்கள். இளையவள் அதுகண்டு பொறுது அப்பிள்ளைகளை வைதாள். மூத்தவள் இளையாளை நோக்கி "நீ எந்த ஊர்? எந்த ஜாதி? யார் மகள்? யாவர் முன்னிலையில் அக்கினி சாட்சியாக என்னுயகன் உன்னை விவாகம் செய்தான்? என்னுயகன் வனப்பைக் கண்டு ஆசைப்பட்டுவந்த காமக்கிழத்தியாகிய உனக்கு வாயேன்? பெருமை யேன்? என் நாயகன் விவாகஞ் செய்ததற்குச் சான்றுகளுண்டா? சொல்வாயாக" என்றாள். இளையவளதனைச் செவியுற்று வருந்தி "திருப்புறம்பயம் என்னுந் தலத்திலே எம்முடைய நாயகர் தம்மை விடந்தீண்டி யிறந்தபோது உயிர்ப்பித்த திருஞான சம்பந்தப் பெருமான் திருவருளினாலே சிவலிங்கமும், வன்னிமரமும், கிணறுஞ் சாட்சியாக என்னை மணமுடித்தார். அம்மூன்று சாட்சிகளும் உள்ளன" என்றாள். மூத்தவள் நகைத்து "மனத்திற்கேற்ற சான்றுகளையே கூறினாய். நன்று! நன்று!! அச்சான்றுகள் இங்கும் வருமாயின் அஃதுண்மைதான்" என்றாள். இளையவள் பெரு மூச்செறிந்து புலம்பி வீட்டிற்குச் சென்று "தாய் தந்தையரில்லாத தமியளாகிய எனக்குத் தெய்வமே துணை" என்று மனந்தேறி அன்றிரவு ஊணுறக்கமின்றி அதிகாலையிலெழுந்து பொற்றாமரையில் ஸ்நானஞ் செய்து சோம சுந்தரக் கடவுளின் திருவடிகளிலே வீழ்ந்து "மாமனாக வந்து வழக்குரைத்த பெருமானே! என் விவாகத்திற்குச் சான்றாயிருந்த வன்னி மாமும், சிவலிங்கமும், கிணறும், ஆகிய மூன்றையும் இங்கே வருவித்து மாற்றாளுடைய வாய்ப்பழியைத் தீராதொழிவீரேல் நான் யென்னுயிரை மாய்த்துக்கொள்ளுவேன்" என்று முறையிட்டாள். அப்பொழுது அவள் நிலையையுணர்ந்த ஸ்ரீசோமசுந்தரப் பெருமானின் திருவருளினால் கோயிலின் ஈசானமூலையில் அச்சான்றுகள் மூன்றுந் தோன்றின. இளையவள் மூத்தவளையழைத்து வந்து அவைகளைக் காட்ட அவள் கண்டு நாணித் தலை குனிந்தாள். இளைய

வளுடைய கற்பையும் சிவபக்தியையுங் கண்ட அந்நகரத்திலுள்ளார் யாவரும் மகிழ்ந்தார்கள். மூத்தவளை இவள் கொடியவளெனப் பழித்தார்கள். நாயகனாகிய வணிகனும் "குற்றமற்றவளைப் பழித்த பாவி" என்று மூத்தவளை விலக்கி வைத்தான். இளையவள் அதனை யறிந்து "என்னுடைய கற்பை யுலகமறியச் செய்தவள் இவளேயாம். தாயில்லாத அடியேனுக்கு இவளே தாயுமாவாள். இனியிருவரும் ஒன்று வாழ்வோம்" என்று கூற அவ்வாறே தம்முள்ளிணங்கி வாழ்ந்தார்கள்.

2.

"கரையின் மணற்பாவை நின் கணவனாமென்
றுரை செய்த மாதரொடும் போகாதிரைவந்
தழியாது சூழ்தர வாங்குந்தி நின்ற
வரியா ரகலல்குன் மாதர்"

காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்த பெண்கள் கூடி விளையாடுகையில் ஒரு சிறுமியைப் பார்த்து மற்றைச் சிறுமிகள் 'இம்மணற்பாவையே உன்னுடைய கணவனாகும்' என்றுகூற அச்சிறுமி அம்மாதர்களுடன் இல்லிற்கும் போகாதவளாகிக் கடலினது அலைகளால் அம்மணற் பாவை யழியாவண்ணம் அங்கு காவலாக நின்றுகொண்டிருந்தாள்.

3.

"..........உலை சான்ற
மன்னன் கரிகால்வளவன் மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான் புனலின் பின்
(சென்று
கன்னவி றோளாயோ ! வென்னக் கடல் வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங்கொடிபோலப் போதந்தாள்."

சோழ அரசர்களுட் சிறந்தோனாகிய கரிகாற் பெருவளத்தான் மகளாகிய நல்லிசைப் புலமை வாய்ந்த ஆதிமந்தியாரென்பார், நீர்விழவொன்றில் கழாரென்னும் ஊரைச் சார்ந்த காவிரித்துறையில் கணவனாகிய அத்தியுடன் நீராடுகையில், அவனைக் காவிரி வெள்ளம் கலந்து கொள்ள, இவர் அவனைக் காணாது பல இடங்களிலுந் தேடித் தேடிச்சென்று கடற்கரையில் அரற்றிக்கொண்டு நிற்கையில், இவரது கற்பின் பெருமையால் கடல் அவனைக் கரைக்கு அணித்தான விடத்திற்கொணர்ந்து காட்ட, இவருடைய துயரத்தை யறிந்தவளும், ஆங்கு நீராடிக் கொண்டிருந்தவளுமாகிய மாருதி யென்பாள் கண்டு அவனை யழைத்து வந்து சேர்க்க, மகிழ்ந்தாள்.

4.

"மணன்மலி பூங்கானல் வருகலன்கணோக்கிக்
கணவன் வரக் கல்லுருவ நீத்தாள்."

காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்த மற்றோர் மங்கை தன்னை மணந்த கணவன் கடல் யாத்திரை முடித்துத் திரும்பும்வரையில், தனது கற்புக்குக் குற்றம் வாராமற் காத்தற் பொருட்டு அக்கற்பின் மாட்சியால் கல்லுருவம் பெற்று அவன் திரும்பி வந்தவுடன் அவ்வுருவத்தை நீக்கித் தனதியற்கை வடிவம் பெற்று அவனுடன் இல்லறம் நடத்தி வாழ்ந்தாள்.

5.

"இணையாய
மாற்றாள் குழவி விழத்தன் குழவியுங் கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்"

அந்த நகரத்துப் பிறந்த மற்றோர் மங்கை தனது சக்களத்தியின் குழந்தை தவறிக் கிணற்றில் வீழ்ந்தவுடன் 'தன் போல்வாள் குழந்தையிலாதவளாயிருக்கத் தான் மாத்திரம் குழந்தையுடையாளாயிருத்தல் தகுதியன்று' எனவெண்ணித் தன் குழந்தையையுங் கிணற்றில் போட்டுவிட்டாள். அவள் கற்பின் உறுதியையும், மேம்பட்ட குணத்தையுமறிந்த தெய்வத்தினருளால் இரண்டு குழந்தைகளும் உயிருடன் மீளப்பெற்று மகிழ்ந்தாள்.

6.

"வேற்றொருவன்
நீணோக்கங் கண்டு நிறைமதிவாண் முகத்தைத்
தானோர் குரக்குமுக மாக்கென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி யல்குற்பூம் பாவை."

அந்நகரத்துத் தோன்றிய மற்றோர் வனிதை தன் கணவன் அயலூர் சென்றிருந்தபொழுது ஆடவனொருவன் தன்னை விடாது நோக்குகின்ற காமப் பார்வையைக் கண்டு சகியாளாய்த் 'தன் கணவன் வருமளவும் குரங்கு முகம் வரும்படி சிந்தித்துப் பெற்றுத் தன் கணவன் வந்தவுடன் அம்முகத்தைப் போக்கித் தன்னியற்கை முக மடைந்தாள்.

7.

"பெண்ணறி வென்பது பேதைமைத்தே யென்றுரைத்த
நுண்ணறிவினோர் நோக்க நோக்காதே யெண்ணி
லேன்."

"வண்டலயர்விடத் தியானோர் மகட்பெற்றால்
ஒண்டொடி நீயோர் மகப்பெறிற் கொண்ட
கொழுநனவளுக்கென்றி யானுரைத்த மாற்றங்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தாற்
சிந்தைநோய் கூருந் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்க முடுத்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
வாடகப்பூம் பாவை"

காவிரிப்பூம்பட்டினத்துத் தோன்றிய இரண்டு பெண்கள் சிறுவயதில் வண்டலயற்றி விளையாடுங்கால், தம்மிருவருக்கும் ஆண், பெண் என்னும் பாற் பகுதிப்படி மகவுண்டாமாயின் அவ்விருவருக்குமே மணமுடிப்போமெனப் பேசிக்கொண்டார்கள். பிறகு அவ்விருவருக்கும் பருவகால முற்றுழி மணவினை முடிந்து புத்திரப் பேறுண்டாகிப் பேசிக்கொண்டவாறே ஆண் பெண் என்னுமிருபாற் பகுதிப்படி பிறந்தன. ஆனால், அப்புத்திரன் முடவனாயிருப்பதைக் கண்ட பெண்மகளீன்ற மாது தனது நாயகனை நோக்கி நான் சிறு வயதில் 'பெண்களின் அறிவு பேதைமைத் தன்மைத்து' என ஆன்றோர் கூறியதை யாராயாது வண்டலாட்டயருங்கால் இவ்வாறு பேசிக்கொண்டதுண்டு; இப்போது அப்புதல்வன் முடவனாயிருக்கின்றனை வருந்துகிறேன் என்று சொல்ல 'எப்போது நமது தாய் அவனுக்கென்றுரைத்தாளோ அப்போதே நான் அவனுக்குரியவளாயினேன்,' எனச் சிந்தித்தவளாய், அவள் புத்திரியாகிய பெண் இறைப்பொழுதுந் தாழ்க்காமல், கோடியுடுத்துக் கூந்தலை வாரி முடித்துக் கொண்டு அப்புத்திரனைத் தன் தலைமீது சுமந்து நின்றாள் என்பதாம்.

மேற்கூறப்பட்ட கற்புடை மங்கையர் எழுவர் சரித்திரங்களால்கற்புடைப் பெண்டிர் மிகச் சிறந்தோரென்பதும், அவர்கள் எக்காரியங்களையுஞ் செய்ய வல்லுனரென்பதும் பெறப்பட்டன.

ஜோதிடம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்.)

தர்ம நியாயமான 5 கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0 ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத ரூ. 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமார் உபாஸி ...கோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியடிகள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—11—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசாம் செய்திருந்தார். அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியாபனம் செய்து கொள்ளுகிறோம்.) மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சனேயஸ்வாமி ஜோதிடாலயம்,
திருத்தணிகை, சித்தூர் ஜில்லா

செலிமாபேகம் அல்லது மொகல்மன்னரது அந்தப்புரம்.

(422-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.

இரண்டாவது அத்தியாயம்.

மலைப்பிரதேசமாகிய காஷ்மீரத்தில் 'ஆராமபாக்' என்ற ஓர் அழகிய இடத்தில் சக்கிரவர்த்தி ஷாஜஹான் பாதுஷா கோடை காலத்தில் வசிக்க ஒரு அரண்மனை கட்டுவித்திருந்தனன். அந்த அரண்மனை 'மோத்திமஹால்' என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. அவ்வரண்மனையில் முதலில் வசித்துவந்தவள் பாதுஷாவின் அன்புக்குரிய மனைவிகளில் ஒருவளான செலிமாபேகம் என்பவளே. அழகிலும் குணத்திலும் இவளுக்கு ஒருவரும் ஈடில்லை. அச்சமயம் ஷாஜஹான் பாதுஷா அழகே உருவாய் வந்த மும்தாஸ் பேகத்தைக்கூடக் கவனியாதிருந்தானென்றால், செலிமா பேகத்தைப்பற்றி வர்ணித்துக்கொண்டிருப்பது அனுவசியமே!

நல்ல பௌர்ணமிநாள். சந்திரன் தன் கிரணங்களைப் பரப்பி எங்கும் பிரகாசித்து வந்தான். ஆராமபாக் அரண்மனையோரமாக ஒரு சிறிய மலையோடையுமிருந்தது. அவ்வோடையின் நிர்மலமான நீரில் சந்திரனது கிரணங்கள் பிரதிபிம்பித்ததால் எங்கும் பிரகாசமாயிருந்தது.

மோத்தி மஹால் அரண்மனையில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறையில் செலிமா பேகம் சிருஷ்டி சௌந்தரியத்தில் தன் மனதைச் செலுத்திய வண்ணம் நின்றுகொண்டிருந்தாள். அச்சமயம் செலிமா இவ்வுலகைத் துறந்தவள்போல் காணப்பட்டனள். பேகத்தின் கேசகலாபம் பூர்ணமாயிருந்தது. பின்புறம் போர்த்திருந்த சிவப்புப் பட்டு வஸ்திரமும், பிரகாசித்துக்கொண்டிருந்த அவளது அழகிய முகமும், கருங்கூந்தலுக்கு மிக்க சோபையை யுண்டாக்கின. நாலா பக்கங்களிலும் சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். ஆனால் அந்த ரமணீயமான ஸ்தலத்தில் அச்சமயம் நிசப்தமே நிறைந்திருந்தது. நாள் முழுதும் கூவிக்கொண்டிருந்த பறவைக் கணங்கள் நித்திராதேவியின் பாசத்திற்குக் கட்டுப்பட்டிருந்தன.

சிருஷ்டி சௌந்தரியத்தில் மிக்க நேரம் ஈடுபட்டிருந்த செலிமா பேகம் பெருமூச்சு விட்டு, "ஆஹா! என்ன அழகான இரவு! ஸ்படிகம்

போன்ற இந்த நிலவில் சிருஷ்டியினழகைக் கண்ணுற்றபின் என்மனதில் என்னென்னவோ எண்ணங்களுதிக்கின்றனவே! ஆயினும் என்ன பலன்? என் இச்சையைப் பூர்த்தி செய்பவர் எங்கே? ஜனங்களில்லாத இந்த இடத்தில் குற்றவாளியைப்போல் நான் அடைபட்டிருக்கின்றேன். யாருக்காக இவ்வுயிரிருக்கிறதோ அவரெங்கே? வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவர் இதுவரைவாராதகாரணமென்னவோ? அவரது தரிசனம் எப்பொழுது கிடைக்குமோ? 'உனக்காகவே நானிவ்வுயிரை வைத்திருக்கிறேன்' என்று வாயால் மாத்திரம் அடிக்கடி சொல்லுகிறார். ஆனால் காரியத்திலோ ஒன்றையுங் காணவில்லை. எனது மனோபீஷ்டத்தைச் சாந்தி செய்துகொள்ளுவதெப்படி? அநேக தாசிகள், வேலையாட்கள் முதலியவர்களுக்கு யஜமானியாக இருந்தும், பக்ஷியைப்போல் இங்கு அடைபட்டிருப்பதில் ஏதாயினும் சுகமுண்டா? பாஷாணத்திற் பூக்களுண்டாகுமோ? தில்லீச்வரரது மனமோ பாஷாணத்தைப்போற் கடினமாயிருக்கிறது. அங்கே அன்பெனும் புஷ்பமானது எவ்விதம் மலரப்போகின்றது? நான் சார்வபௌம சக்ரவர்த்தியின் பேகமேயாயினும் என்னைவிட எனது தாசிகளுக்கே அதிக சுகமென்பதிற் சந்தேகமில்லை" என்று சொல்லிக்கொண்டே பெருமூச்செறிந்தவண்ணம் மெதுவாகச் சென்று மஞ்சத்தினருகிலிருந்த ஒரு சோபாவிலுட்கார்ந்தனள்.

ஷாஜஹான் பாதுஷா வேட்டையாட ஆரண்யத்திற்குச் சென்று ஏழு நாட்களாய்விட்டன. இதுவரை யாதொரு சங்கதியும் அவனிடமிருந்து வரவில்லை. "இன்று சாயங்காலம் நிச்சயமாகத் திரும்பி வந்துவிடுவேன்" என்று பேகத்தினிடம் சொல்லிவிட்டுச் சென்றானாயினும் அவ்வண்ணம் பாதுஷா வரவில்லை. ஒருநாள் கழிந்தது; இரண்டு நாட்கள்—செலிமா பேகம் தன் பிரிய பதியின் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டேயிருந்தனள். எட்டு நாட்கள் கழிந்தும் ஷாஜஹான் வேட்டையினின்றும் திரும்பிவந்தபாடில்லை.

செலிமாபேகத்தின் படுக்கையறையில் எங்கும் விளக்குகள் பிரகாசமாயெறிந்துகொண்டிருந்தன. வாசனை கம கம வென்று வீசிற்று. நாலாபக்கங்களிலுமுள்ள சுவர்களில் மனதையபகரிக்கும்படியான மிக்க அழகான சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. நான்கு திசைகளிலும் பெரிய நிலைக்கண்ணாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அறை முழுதும் பற்பல புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததால் அவ்வரண்மனையெங்கும் வாசனைவீசிக்கொண்டிருந்தது. நான்கு திக்குகளிலும் தொங்கவிடப் பட்டிருந்த எண்ணிறந்த படங்கள் விளக்குகளின் வெளிச்சத்தால் ஜ்வலித்துக்கொண்டிருந்தன.

அச்சமயம் சோபாவிலுட்கார்ந்திருந்த சுந்தரி செலிமாபேகம் தன்மேலிருந்த மெல்லிய வஸ்திரங்களின் பாரத்தைத் தாங்க முடியாது தவித்துக்கொண்டிருந்தனள். மிக்க துவேஷத்துடன் தன்மேலிருந்த வஸ்திரத்தைத் தூக்கியெறிந்தாள். சிறு முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட கரைகளோடுகூடிய ரோஜா வர்ணப் பட்டுச் சேலையை விசிறியெறியவே, விளக்கின் பிரகாசத்தால் எங்கும் அது தக தகவென ஜ்வலித்தது. மிக்க விரக்தியோடு கூடிய குரலில், "யாது செய்வேன்? எதன்மேலும் என் மனம் நாடவில்லையே!" என்றனள்.

பேகத்தின் ஆக்ஞை எப்பொழுது வரப்போகின்றதெனச் சமீபத்தில் ஒரு தாசி நின்றுகொண்டிருந்தனள். செலிமா அவளை நோக்கி "அடுத்த அறையிலிருக்கும் புதுவீணையை எடுத்து வா" என்றனள்.

வீணையைக் கொணர்ந்தனள் தாசி. ஆனால் சிரமப்பட்டும் ச்ருதி சேர்க்க முடியாது திகைத்

தாள் செலிமா. மதுரமான குரலிற் பாட எவ்வளவோ முயன்றனளாயினும் பயன் படாது கடைசியாக மிக்க நிராசைகொண்டவளாய் "இவ்வீணையுங்கூடப் புருஷவர்க்கத்தைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது. இதுவும் அவரைப் போலவே கடோ மனமுற்று யிருக்கின்றதே!" என்றனள்.

சாக்கி என்ற நாமதேயத்துடன் ஒரு தாசி அரண்மனையில் சில தினங்களுக்கு முன்னால் உத்தியோகத்திலமர்ந்திருந்தனள். செலிமா அருகிலிருந்த தாசியை நோக்கி, "அந்தப் புதிய தாசியை அழைத்து வா சீக்கிரம். அவள் நன்றாய்ப் பாடுகிறாள்" என்றனள்.

அச்சமயம் தன்னறையிலிருந்த சாக்கி பேகத்தின் ஆக்ஞையை யறிந்தமாத்திரத்தில் விரைவாக வந்து சேர்ந்தனள். சாக்கியின் முகம் வாஸ்தவமாகவே மிக்க எழில் வாய்ந்திருந்தது. ஆனால் சிந்தையிலாழ்ந்திருப்பதாக முகக் குறிகளாற் தெரியவந்தது. நிதமும் ஏகாந்தமாகவிருக்கவே சாக்கி இஷ்டப்பட்டாள். அந்தப்புரத்திலுள்ள தாசிகளோடு அவள் கொஞ்சமேனும் சேருவதில்லை, அவர்களுடன் பேசுவதுமில்லை. ஒரு நாள் சாக்கி ஏகாந்தமாய்த் தனதறையிலுட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தபொழுது செலிமாபேகம் அக்குரலைக் கேட்க அவளறையில் மறைந்திருந்தனள். சாக்கியின் குணத்தைக் கண்டு செலிமா மகிழ்வுற்று அவளிடம் பிரீதி கொண்டனள். எப்பொழுதும் தன்னிடத்திலேயே யிருக்கும்படி செலிமா சொல்லி வந்தாளாயினும் பேகத்துடன் தனித்திருக்கச் சாக்கி இஷ்டப்பட்டவளல்ல.

சாக்கி வீணை, சதார் முதலிய தந்தி வாத்தியங்களிற் கைதேர்ந்திருந்தனள். புல்லாங்குழல் வாசிப்பதிலும் அதிகத் திறமை வாய்ந்திருந்தனள். அவளது குரலோ குயிலைப்போன்றிருந்தது. அந்தப்புரத்தில் தாசியாயிருக்க இத்தொழில்களைக் கற்றிருக்கவேண்டியதவசியமே முன்னொரு நாள் நல்ல பௌர்ணமி இரவில் சாக்கி உத்தியானவனத்தில் ஏகாந்தமாய்ப் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்ததை செலிமா பேகம் கேட்டு அத்தொனியி லீடுபட்டுத் தன்னையே மறந்திருந்தனள். அந்த நாள் முதல் பேகம் சாக்கியைத் தன் தோழிகளில் ஒருத்தியாகக் கருதி வந்தாள்.

சாக்கி செலிமா பேகத்தின் அறைக்குள் நுழைந்து ஒரு புறமாக நின்றாள். பேகம் "சாக்கி! நீ இப்பொழுது வீணை வாசிக்கிறாயா அல்லது புல்லாங்குழல் வாசிக்கிறாயா? தோழீ, எவ்வஸ்துவின் பேரிலும் என் மனம் கிஞ்சித்தேனும் நாடாதிருக்கின்றதே!" என்றனள்.

சாக்கி கொஞ்சம் சிரிப்புடன், "மகாராணியின் இச்சைப்படி செய்யக் காத்திருக்கின்றேன்" என்றனள்.

செலிமாபேகம் சிரித்துக்கொண்டே, "சாக்கி! நீ இவ்வரண்மனைக்கு வந்து எவ்வளவோ நாட்களாயும் உன் முகத்தில் இதுவரை கொஞ்சமேனும் சந்தோஷக் குறிகளைக் கண்டதில்லை. புன்முறுவலுடன் இன்றே நான் உன்னைக் காணுகின்றேன். நீ இப்படி உலகை வெறுக்கக் காரணம் யாது?" என வினவினள்.

"தாசிக்கு வேடிக்கை விநோதங்கள் எதற்காக?"

இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் செலிமா மிக்க விசனமுற்று சாக்கியை நோக்கி "சாக்கி! நான் உன்னைத் தாசியெனவா கருதி நடத்தி வருகிறேன். சொல் பார்க்கலாம்." என்றனள்.

"இல்லை. மஹாராணியே! தங்களது பூர்ண அனுக்கிரஹம் என் மேலிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை."

"ஆனால் இப்படி விசனப்படக் காரணமென்ன?"

"நீங்களேன் நிதமும் துக்கக் கடலிலாழ்ந்திருக்கிறீர்கள்?"

"போடி பைத்தியமே! நான் நிதமும் இரவும் பகலும் உன்னைப்போல் சிந்தித்து உட்கார்ந்திருப்பதில்லை. இப்பொழுது சில நாட்களாகத்தான் இவரது தரிசனங் கிடைக்காததைப் பற்றி என் மனங் கொஞ்சங் கஷ்டத்தை அடைந்துள்ளது. நானென்ன உன்னைப்போலவா உலகை வெறுத்திருக்கின்றேன்?"

சாக்கி கொஞ்சநேரம் யோசனையிலாழ்ந்திருந்த பின், "மஹாராணி அம்மையே! ஏதாவது ஒரு வஸ்துவை இச்சித்து அவ்வஸ்துவை யடையப் பிராப்தமில்லாவிடில் துக்கமுண்டாவது சகஜமே. இது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. பாதுஷாவைக் காணத் தாங்கள் இச்சை கொண்டும் அவரைக் காணாததால் தங்கள் மனம் இக்கஷ்டத்தை யடைந்திருக்கிறது. அவ்வண்ணமே நானும் ஒரு வஸ்துவைக் குறித்து அதிக அவாக் கொண்டேன். துரதிர்ஷ்டவசத்தால் எனதெண்ணம் பூர்த்தியாகாதிருக்கவே எப்பொழுதும் துக்கத்திலாழ்ந்துள்ளேன்" என்றனள்.

சிநேகபாவத்துடன் செலிமா சிரித்துக்கொண்டே, "ஆனால் சரி, சாக்கி! நீ யாரையாகிலும் இச்சிக்கின்றாயா? நீ இச்சிப்பவர் என்னிடம் தெரிவிக்கக்கூடாதா? சொல்லும் பக்ஷத்தில் அவருக்கு முனக்கும் விவாகம் செய்து வைக்கின்றேன்" என்றனள்.

சாக்கியின் நெற்றியில் வியர்வை நீர் முத்து முத்தாய் நின்றது. முகஞ் சிவந்தது. மிக்க மிருதுவான குரலில், "மஹாராணியின்பேரில் எனக்கு இச்சை யுண்டாயிருக்கிறது" என்றனள்.

பாதுஷா வேட்டையாடச் சென்ற நாள் முதலாய்ச் செலிமா மிக்க வருத்தத்தை யடைந்திருந்தனளாயினும், தாசியின் வார்த்தையைக் கேட்டு உரக்க நகைத்தனள். சாக்கியைத் தன்னருகிலிருந்து பிடித்துத் தள்ளி, "போடி பைத்தியமே! நான் பாதுஷவின் பாரியை. என் மேல் இச்சைகொண்டிருக்கிறாயா?" என்று விநோதமாகப் பகர்ந்தனள்.

சாக்கி எழுந்துபோக எத்தனிக்கவே செலிமா அவளது கரத்தை இறுகப் பிடித்துத் தன்னருகிலுட்கார வைத்தனள். கொஞ்ச நேரங் கழித்துச் செலிமா சாக்கியை நோக்கி, "சரி. அதிருக்கட்டும். நீ உனது புல்லாங்குழலைக் கொண்டுவா. இன்று அரண்மனை மிக்க வெப்பமாயிருக்கிறது. ஜன்னல்களெல்லாவற்றையுந் திறந்துவை. விளக்குகளை அணை. சந்திரனது பிரகாசம் பூர்ணமாயிருப்பதால் வேறு வெளிச்சம் வேண்டாம். இந்தப் புஷ்பமாலைகளை எனது மஞ்சத்தின்மேற் பரப்பி வை. பாதுஷா வாராததால் எனது தேகத்தில் ஊன்றி நிற்கும் விரகதாபத்தை இப்படியாவது தணித்துக் கொள்ளுகின்றேன். எனதருகிலுட்கார்ந்து வீணையை மீட்டிக் கொஞ்சநேரம்பாடுவாயாகில் அதைக் கேட்டு என் துக்கத்தைத் தற்சமயம் மறந்திருப்பேன்" என்றனள்.

சாக்கி எழுந்திருந்து நிற்க பேகம், "சாக்கி! இன்று அதிக தாகமாயிருக்கிறது. கொஞ்சம் ஷர்பத் கொண்டுவா" என்றனள்.

சாக்கி உடனே ஸ்வர்ண பாத்திரம் நிறைய ஷர்பத்தை ஊற்றிக் கொணர்ந்து செலிமாவின் வாயினருகிற் பிடித்தனள்.

"நுரை அதிகமாயிருக்கிறதே. ஷர்பத் அதிக உஷ்ணமானதால் அதைத் தணிக்கப் பன்னீர் கலந்தாயா?" என்றனள் செலிமா.

ஸ்வர்ண பாத்திரத்தைக் கையிலேந்திய வண்ணம் சாக்கி அடுத்த அறைக்குட் சென்று பன்னீர் கலந்ததுமன்றி, மற்றுமேதோவொன்றை அத்துடன் விரைவாகச் சேர்த்து மறுபடியும் செலிமாபேகத்தினிடம் கொடுத்தாள்.

பேகம் அதைத் தன் கையில் வாங்கிக் கொஞ்சமேனும் பீதி வைக்காமற் பருகிவிட்

டுச் சமீபமிருந்த மேஜையின்மேல் அப்பாத்திரத்தை வைத்தாள். அருகிலிருந்த மகமல் மெத்தைகளால் நிறைந்துள்ள மஞ்சத்தில் சுந்தரி செலிமா ஷர்பத்திற் கலந்துள்ள மருந்தின் வேகத்தால் மயங்கிப் படுத்தாள். சாக்கி வீணையைமீட்டி மதுரமான ஸ்வரத்திற் பாடிக்கொண்டிருந்தனள்.

மூன்றாவது அத்தியாயம்.

மிக்க நேரம் சாக்கி பாடிக்கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் வீணை வாசித்தாள். பிறகு வீணையோடு சேர்ந்து குயிலைப் பழிக்குங் குரலிற் பாடினாள். இப்படிப் பாடிக்கொண்டிருக்கும்பொழுது சாக்கியின் நேத்திரங்கள் நித்திரா தேவியின் பாசத்திற்குக் கட்டுப்பட்டிருந்த சுந்தரியின் முகத்தையே நாடி நின்றது. கொஞ்சநேரங் கழித்துப் பாட்டை நிறுத்தி, எழுந்திருந்து சந்தடி செய்யாது செலிமாவின் மஞ்சத்தினருகிற் சென்று அவளருகில் மெதுவாக உட்கார்ந்தாள். ஷர்பத்துடன் கலந்திருந்த மருந்தின் வேகத்தால் செலிமா பேகத்தின் கபோலத்தில் இரத்தமேறிச் சிவந்திருந்தது. தாம்பூலந் தரித்திருந்ததாற் சிவந்திருந்த உதடுகள் மெதுவாக அசைந்துகொண்டிருந்தன. தென்றல் மெல்லெனத் தவழும் பொழுது சிறு செடிகளின் இலைகள் அசைவதுபோல், செலிமாவின் வக்ஷஸ்தலம் மெதுவாக மேலுங்கீழும் அசைந்துகொண்டே யிருந்தது. அவளது சுவாசத்தினின்றும் ஷர்பத்தின் மதுரவாசனை வெளியே வந்துகொண்டிருந்தது. கபோலத்தில் சிறு முத்துமாலையைப்போல் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய்ச் சேர்ந்து நின்றன.

சாக்கி தன் வஸ்திரத்தால் பேகத்தின் முகத்தைத் துடைத்தாள். ஆனால் துடைக்கும் பொழுது அவளது கைகள் நடுக்கமுற்றன. உடனே படுக்கையை விட்டெழுந்து தூரமாகச் சென்று நின்றாள். அவளது நேத்திரங்கள் சிவந்தன. மார்பு படபடவெனத் துடித்தது. தொண்டை வறண்டது.

அப்பிரம்மாண்ட அரண்மனையிற் தாசி சாக்கி ஏகாந்தமாய் ஸ்திரமனதுடன் யோசனையிலாழ்ந்து நின்றுகொண்டிருந்தாள். மிக்க நேரமாயினும் அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தனள். பிறகு மெதுவாகச் சென்று செலிமா பேகத்தின் படுக்கையில் மறுபடியு முட்கார்ந்து சந்தடி செய்யாது செலிமாவின் முகத்தருகில் முத்தமிட வெண்ணிச் சற்று தலை குனிந்தாள். அச்சமயம் அவள் மனம் பீதியாற் படபடவெனத் துடித்தது. உடம்பு சிலிர்த்தது. தேகமெல்லாம் வியர்த்தது. அச்சத்தால் தலை நிமிர்ந்தாள். மஞ்சத்தின்மேல் உட்கார்ந்திருந்த சாக்கிக்கெதிரில் ஒரு பெரிய கண்ணாடி யிருந்தது. அச்சமயம் திடீரென பேகத்தினறையில் எங்கும் விளக்குகள் பேகத்தின் உத்திரவின்படி தன்னால் அணைக்கப்படாமல் முன்போல் பிரகாசமா யெரிந்துகொண்டிருப்பது அறிந்து அஞ்சிய சாக்கி தற்செயலாய் எதிர்ப்புறம் நோக்கவே, வாசனை மிக்க மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட கண்ணாடியில் உயர்ந்து திடகாத்திரமாயுள்ள ஓர் அழகிய புருஷனது பிரதிபிம்பம் இவளுக்குத் தென்பட்டது. ஏகாந்தமாகச் சர்ப்பத்தை எதிரிற் காணும் ஒரு மனிதன் எவ்வளவு அவஸ்தைக்குள்ளாவானோ, அவ்வவஸ்தைக்கு சாக்கியும் உட்பட்டாள்.

அந்த உருவத்தை மறுபடியும் கண்ணெடுத்துப் பார்க்க சாக்கிக்குத் தைரிய முண்டாகவில்லை. அப்புருஷனோ அறையில் நி[illegible] விளக்கொளியில் அங்கே நடந்துள்ள காரியங்களைக் கவனித்திருக்க வேண்டும். இதுவுமன்றி பிறர் யாரும் அந்தப்புரத்திற்குள் பிரவேசிக்க முடியாதாகையால், அப்புருஷன் ஷாஜஹா

பாதுஷாவைத் தவிர வேறு யாராகவு மிருக்க முடியாது. இப்படிப் பல எண்ணங்கள் ஒன்றின் பின்னொன்றாக வேகமுடன் சாக்கியின் மனதிலுதித்தன. கொஞ்சம் மனதைத் திடப்படுத்திக்கொண்டு சாக்கி கடைக்கண்ணால் மறுபடியும் அந்நிலைக்கண்ணாடியை நோக்கினாள். முன்னால் கண்ட பிரதிபிம்பம் அவ்வண்ணமே அசைவற்றிருந்தது. இவ்வுருவம் பாதுஷாவாகவே யிருக்கவேண்டுமென நிச்சயித்துக்கொண்டனள். சமீபத்தில் சுவற்றில் பாதுஷாவின் படமும் தொங்கிக்கொண்டிருந்தது. சாக்கி அதையும் ஒரு முறை யுற்று நோக்கினாள். உடனே அவளது மார்பு படபடவெனத் துடித்தது. அவளது சப்த நாடிகளும் அப்படியே அசைவற்று நின்றன.

நன்றாய் நித்திரை செய்துகொண்டிருந்த பேகத்தைத் தாசி முத்தமிடத் துணிந்த காக்ஷியைக் கண்ணுற்ற காவலன் ஷாஜஹான் ஆச்சரியமுற்றான். ராஜராஜேச்வரி செலிமா மிக்க எழில் வாய்ந்திருப்பதால், ஸ்திரீகளும் அவள் சௌந்தரியத்தைக் கண்டு ஆசைகொள்ளுவது சகஜமேயென நினைத்தான். இப்புதிய தாசியை ஷாஜஹான் இதுவரைபார்த்ததில்லையாகையால், "நீ யார்? இந்நடு நிசியில் தனியே பேகத்தினருகிலுட்கார்ந்து என்ன செய்துகொண்டிருக்கின்றாய்?" எனக் கேட்டனன்.

சாக்கி யாது உத்தர மளிப்பாள்! அச்சமயம் மௌனமே உசிதமென எண்ணினாள்.

தாசி யாதொரு பதிலும் பேசாதிருக்கவே, ஷாஜஹானுக்குக் கொஞ்சம் கோபமுதித்தது. ஒரு வேளை தாசிக்குப் பைத்தியம் பிடித்திருக்குமென எண்ணினான். பிறகு கொஞ்சம் உரக்க, "தாசி! ஏன் பேசாது நிற்கின்றாய்? நீ யாரெனப் பகிரங்கமாகச் சொல். இங்கே என்ன செய்துகொண்டிருந்தாய்?" என வினவினான்.

"மஹாராஜா! நான் யாரென்று சொல்லாத பக்ஷத்திலோ?" எனக் கடிந்து கழறினாள் காரியை சாக்கி.

தாசியின் உன்மத்த வார்த்தைகளைக் கேட்ட மொகலாயமன்னன் ஸ்தம்பித்தனன். உடனே தன்னிடுப்பிற் தொங்கிக்கொண்டிருந்த கத்தியை உறையினின்றுங் கழற்றினான். விளக்கு வெளிச்சத்தில் கத்தி ஜ்வலித்தது. ஆனால் ஷாஜஹான் அதை உறையிலிட்டு, "ஸ்திரீயினது இரத்தத்தில் என் கத்தியை நனைத்து அதற்குக் களங்கத்தை யுண்டு செய்ய எனக்கிச்சையில்லை. உனது உன்மத்த வார்த்தைகளுக்கு இப்பொழுதே உன்னைக் காவற்காரர்களது கையில் ஒப்புவித்து உன்னைச் சித்திரவதை செய்கின்றேன் பார்" எனக் கோபத்துடன் பகர்ந்தனன்.

இச்சங்கடத்தினின்றும் தப்ப வழி யாதென இதுவரை யோசித்து நின்ற சாக்கி, கோபத்தால் இரத்தமேறிச் சிவந்த பாதுஷாவின் முகத்தைக் கண்டமாத்திரத்தில் தன்னுயிரைத் திருணமாயெண்ணினாள். மெல்லிய குரலில், "அரசே! இந்த ஸ்திரீயின் இரத்தத்தால் தங்களது வாளுக்கு ஒருவிதமான களங்கமு மேற்படாது. இதோ என்னைக் கொல்லுங்கள். நான் ஸ்திரீயல்ல—புருஷனே!" என்றனள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் பாதுஷாவின் கண்கள் சிவந்தன. மறுபடியும் வாள் உறையினின்றும் உடனே வெளி வந்தது. ஆயினும் அப்பொழுதுகூட மிக்க சிரமப்பட்டு மனதை அடக்கிக் கொண்டு, வாளை மறுபடியும் உறையிலிட்டுக் கோபாவேசத்துடன், "என்ன? புருஷனா? எனது அந்தப்புரத்தில்!! வாளால் மரணமடைவது சுகமேயாயினும் அது வீர புருஷனுக்கே தகுந்தது. நீ இவ்வாளால் மரணமடையப் புண்ணியஞ் செய்யவில்லை. பசியுடனிருக்கும் நாய்களை விடு

த்து உன்னைத் துண்டுதுண்டாகக் கடிப்பித்துச் சித்திரவதை செய்வதே உனக்குத் தகுந்த சிக்ஷை" என்றனன்.

நின்றுகொண்டிருந்த சாக்கி பாதுஷாவின் வார்த்தைகளைக் கேட்டு வேரோடு அறுபட்டு விழும் விருக்ஷத்தைப்போல் பாதுஷாவின் சரணங்களிற் திடீரென விழுந்தாள்.

அச்சமயம் சுந்தரி செலிமா சுகமாய் நித்திரை செய்துகொண்டிருந்தனள். பாதுஷா அவளைக் கோபா வேசத்துடன் உற்று நோக்கினான். இதைக் கவனித்த சாக்கியின் மனதில் சில எண்ணங்களுதிக்கவே, உடனே விரைவாகவெழுந்து பாதுஷாவை நோக்கி, "அரசே, உத்தரவு கொடுத்தால் என்கதையைச் சொல்லுகிறேன்" என்று கம்பீரஸ்வரத்துடன் வினவினாள்.

ஷாஜஹான் முன்னிருந்ததைவிடக் கடோர குரலுடன், ''சொல். ஆயினும் உனக்கு விதித்தமாண தண்டனையை மாத்திரம் ஒருகாலும் மாற்ற முடியாது. இதை நன்றாய்த் தெரிந்துகொள்" என்றனன்.

சாக்கி தன்னைத் தானே தைரியப்படுத்திக்கொண்டு மெல்லிய குரலிற் பகாலுற்றாள். "மஹாராஜா! தற்சமயம் தங்கள் காதலுக்குப் பாத்திரமாயிருந்து வரும் செலிமாபேகத்தை நான் எனது சிறுபிராயத்தில் என் பிராணனை விட அதிகமாய் நேசித்து வந்தேன். செலிமாவின் தந்தை என் மேல் மிக்கப் பிரீதி வைத்திருந்தார். இவளது தாய் உயிருடனிருந்திருக்கும் பக்ஷத்தில் நிச்சயமாயிவளை நான் மணஞ் செய்து கொண்டிருப்பேன். அரசே! இந்த ஐந்து வருஷ காலமாய் செலிமா இங்கே அந்தப்புரவாசியாயிருந்து வருகின்றனள். இவளை ஒரு முறையேனுந் தரிசிக்கவேண்டுமென்ற கவலையால் வியாகுலமடைந்திருந்தேன். ஆனால்இவளைச் சந்திக்கச்சந்தர்ப்பமேற்படாததால், மிக்க யோசனை செய்து தாசி வேஷந் தரித்துத் தங்களது அந்தப்புரத்திற் புகுந்தேன். நிர்தோஷி செலிமா என்னைக் கொஞ்சமேனுங் கண்டு கொள்ளவில்லை. என்னை வாஸ்தவமான ஸ்திரீயெனவே நினைத்திருந்தனள். இவளுக்கெதிரில் வந்தபோதெல்லாம், என்னைக் கண்டுகொள்ளுவாளென்ற பீதியால், முக்காடிட்டு முகத்தைமறைத்தேவந்தேன். செலிமாவும் தன்னிளமைப் பருவத்தில் என்னை நேசித்து வந்தனள். இவளை மணம் புரிந்து என் ஜன்மத்தைச் சுகமாய்க் கழிக்க ஒவ்வொரு நாளும் கனவு கண்டுகொண்டிருந்தேன். ஆனால், தாங்கள் என்னாசையைப் பங்கஞ் செய்தீர்கள். இந்த அபாக்கியனது எண்ணங்களை அடியோடு மண்ணிற் கவிழ்த்துவிட்டீர்கள்! மஹாராஜா! இந்நாள்வரை நான் இம்மனதை எவ்வளவோ கட்டுப்பாட்டுடன்வைத்திருந்தேன். ஆனால்இவ்வழகிய சந்திரனது ஒளி, வாசனைமிக்க புஷ்ப மாலைகள், செலிமாவின் ஒப்புயர்வற்ற வடிவழகு இவைகளால் என் மனம் வேறுபட்டதினாலும, ஏகாந்தமாய்த் தரிசிக்கச் சமயம் வாய்த்ததாலும் என் மனதைக் கட்டுப்படுத்த முடியாது என்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வெண்ணினேன். ஷர்பத்தில் ஒரு மருந்தைக் கலந்து இவளை மயங்கச் செய்தேன். தாங்கள் என்னைக் கொல்லுவது நிச்சயமாகையால், தங்களிடம் என் கதையைச் சொல்ல அவசியமில்லாவிட்டாலும், வீணில் நீங்கள் களங்கமில்லாத இச்செலிமாவைச் சம்சயிக்க நேரிடுமென்றே என் விருத்தாந்தத்தை வெளியிட்டேன். கூடிய சீக்கிரத்தில் நானென் ஆத்மாவை அல்லாவின் பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்கப் போகின்றேன். ஆயினும் செலிமாவின் பதிவிரதா தர்மத்தை நான் லவலேசமும் பங்கஞ்செய்தவனல்லவென்பதற்குக் கடவுளே சாக்ஷி. நிர்தோஷியாகிய செலிமாவினிடம் நீர் கொண்டுள்ள சம்சயத்தைத் தூர விலக்கும்பக்ஷத்தில் எனக்கு எவ்விதமான மரணங்கிடைத்தபோதிலுஞ் சரி. பரலோகத்திலாவது எனது ஆத்மா சாந்தி யடைந்திருக்கும்."

பாதுஷா எல்லா விருத்தாந்தத்தையுஞ் செவி சாய்த்துக் கேட்டு வந்தான். தன் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து செலிமாவைப் பாதுஷா சம்சயிக்காமலிருக்கிறாரா வென்பதை யறியும்பொருட்டு சாக்கி வேஷத்துடனிருக்கு மப்புருஷன் பாதுஷாவையே உற்று நோக்கி நின்றான். ஆனால் இதைக் குறித்து இவனது மனம் சந்துஷ்டியடையவில்லை. பாதுஷா உரத்த குரலில், 'மாஹூம்' என்றழைத்தனன்.

யாரும் பதிற் பேசவில்லை. ஆனால் மிக்க பயங்கர ரூபத்துடன் கருத்த நீக்ரோ தேசத்து ஸ்திரீ யொருவள் பாதுஷாவினருகில் பேச்சற்றுத் தரையை நோக்கி நின்றனள். இவளை நோக்கிப் பாதுஷா, "மாஹூம்! இத்துர்ப்பாக்கியனைப் பாதாளத்திலிருக்கும் சிறையிலடைத்துவை. இவனுக்குஅன்னமும் நீருங் கொடுக்காதே. பசியால் வருந்திப் பிராணனை விடும்படி இவனுக்குத் தண்டனை விதித்திருக்கிறேன்" என்றனன்.

மொகலாயரது அந்தப்புரத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் அடிக்கடி யுண்டாவது சகஜமே. மாஹூம் கொஞ்சமேனுந் தாமதியாது மொகலாய மன்னனது ஆக்ஞையை நிறைவேற்றினாள். இரும்பைப்போன்ற கரத்தால் அபராதியைச் சிறைக்கு அழைத்துச் சென்றனள். போகும்பொழுது, "அபாக்கியசாலியே! புலிக்குகையைத் தேடி இறக்கவா வந்தாய்? உன் பெயரென்ன?" என்று விசாரிக்க அப்புருஷன், "என் பெயர் மாஹரூன்" எனப் பதிலளித்தனன்.

அந்த நீக்ரோ ஸ்திரீ ஒரு கரத்தால் மாஹரூனைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கரத்தால் சிறைச்சாலையின் கதவைத் திறந்தாள். அச்சிறையில் எங்கும் இருள் மயமாயிருந்தது. மாஹூம், "சரி. நீ இங்கே இரு" என்றனள்.

மாஹரூன் வாஸ்தவமாகவே மரணத்தின் கதவண்டை யிருப்பதாகப் பீதி யடைந்தான். கால்கள் நடுக்கமுற்றன. உயிரை இழக்க ஆசையில்லாது யோசித்துநின்றான். மாஹூம் இலேசாக அவனைத் தூக்கி இருள் மூடி யிருந்த அறைக்குள் வீசி யெறிந்து கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு சென்றாள்.

(தொடரும்.)

பெண்கல்வி.

வ. மி. ஷம்சுதீன் ஸாகிப் அவர்கள்.

எல்லாம் வல்ல இறைவனால் சிருஷ்டிக்கப்பெற்ற ஜீவான்மாக்களில் மானிடர்களேமிகவும் சிறந்தவர்கள். "அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தலரிது." ஆறறிவு பெற்ற மானிடர்கள் அடைவதற்குரிய நான்கு பொருள்கள் உள. அவை அறம், பொருள், இன்பம், வீடு. ஒருவன் இப்புருஷார்த்தங்களை அடைய விரும்பினால் அவனுக்கு கல்விச் செல்வம், பொருட்செல்வம் இவ்விரண்டும் மிகவும் அத்தியாவசியமாக வேண்டுவன. இவ்விரண்டு செல்வத்தில் எது முக்கியமானது என ஆராய்ந்து பார்ப்பின், கல்விச் செல்வமே மிகவும் அவசியம் என்பதைச் சாமன்ய அறிவுடையோர்களும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

"வெள்ளத்தாலழியாது, வெந்தணலால் வேகாது, வேந்தாலும் கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது, கள்ளர்க்கோ பயமில்லை, காவலுக்கோ மிக வெளிதாய், கல்வி என்னும் உள்ளத்தே பொருளிருக்க ஊர்தோறும் பொருள் தேடி உழல்கின்றீரே" என்பதற்கிணங்க, பொருட் செல்வத்தை திருடர்களால் அபகரித்துக்கொள்ள முடியும், கல்விசெல்வத்தை அபகரிக்க முடியாது; பொருள் கொடுத்தால் குறை

யும், கல்வி கொடுத்தால் நிறையும்; சிலருக்கு பொருளால் ஹானி ஏற்படும், கல்வியால் கீர்த்தி யுண்டாகும். சிலகால் பொருள் துன்மார்க்கச் செயலுக்குவழி காட்டியாகஇருக்கும், கல்வி சன்மார்க்கத்திற்கு வழி காட்டியாகயிருக்கும். இதனால் எமது நபி (ஸல்) அவர்களும் 'ஓ! விச்வாசிகளே! நீங்கள் சீனதேசம் சென்றாவது கல்வியை பயிலுங்கள்' எனத்திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். கல்வி இல்லாத்வர்கள் ஏகதேசம்மிருகங்களுக்குச் சமானமானவர்கள். "விலங்கொடு மக்கட் அனைவர் இலங்குநூல் கற்றோரோடேனையவர்." கல்வியில்லாதவரை மனிதவர்க்கத்தில் சேர்ப்பதற்கில்லை. "கல்லா ஒருவன்குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்தபதராகும்மே." "மன்னனுக்கு தன் தேசமல்லாற் சிறப்பில்லை மாசாக்கற்றோனுக்கு சென்ற விடமெல்லாம் சிறப்பு." "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலார்." முனைப்பாடியார் கல்லாதவனை குருடனுக்கு ஒப்பிட்டுக்கூறியுள்ளார். "கண்ணுடையோர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்." இன்னும் இவைகளைப்போல் அநேக பெரியோர்களின் வாக்கியங்களைச் சொல்ல முடியும். பத்திரிகை இடந்தராது. மேற்கூறிய விஷயங்களிலிருந்து மானிட வர்க்கத்தார் ஆண் பெண் இரு பாலர்களுக்கும் கல்வி இகபரவாழ்விற்கு உயிர் தோழன்போல் உதவுகிறது என்பது வெளிப்படை. இனி நாம் இக்கல்வியானது ஆடவர்களுக்குமாத்திரம் உபயோகமானதா அல்ல மகளிர்களுக்கும் உபயோகமானதா என்பதை கவனிப்போம்.

ஒரு சாரார் ஆடவர்களைப்போல் பெண்கள் கல்வி கற்றால் அவர்கள் தம் கணவனுக்கு அடங்காமலும், தம் கணவனுடைய சொல்லை மீறி அநாசாரப் பழக்க வழக்கங்களுக்கு ஆளாகிவிடுவார்கள் என்கிறார்கள். என்னே! இவர்கள் மதி! கடவுள் மானிடவர்க்கத்தை ஆண், பெண் என்ற இரு பாகுபாட்டைத் தவிர மற்றெல்லா அம்சங்களிலும் ஒரேமாதிரியாகவே படைத்துள்ளார். தீரயோசித்து பார்த்தால் ஆண்களை விடப் பெண்கள் அநேக விஷயங்களில் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களிடம் காருண்ணியம், அன்பு, கஷ்டங்களை சகிக்கும் குணம், கபடமின்மை ஆகிய இவைகள் குடிகொண்டிருக்கின்றன. ஆடவர்கள் எல்லோரிடமும் இக்குணமிருக்குமென நாம் கூற முடியாது. ஆடவர்களை ஸன்மார்க்கத்திற் திருப்பி அவர்களை இகத்திலும், பரத்திலும் அதி உன்னத திசையிலாக்கி வைக்கும் கல்வியானது எப்படி மகளிரை மாத்திரம் துர்மார்க்கராக்கிவிடும்? இவர்களின் கூற்று, புத்திக்கும், யுக்திக்கும் பொருத்த மாகக்கூடயில்லை. இவர்களின் கூற்று எப்படி யிருக்கிறதென்றால் தேவாமிர்தத்தை மானிடர் புசிக்கின் இறந்துவிடுவார்கள் என்பதையொக்கும். கல்வி வாசனையே இன்னதென அறியாத மகளிரும், ஆடவரும் துன்மார்க்கராயிருக்க நீங்கள் காணவில்லையா? கல்வி கற்றவர்கள் யாவரும் சன்மார்க்கராயிருப்பதாக நான் சொல்லவில்லை, படித்த வகுப்பாரில் அநேகர் துன்மார்க்கச் செயல்களைச் செய்துவருவதை நாம் பார்க்கிறோம். இதனால் அவர்களில், கல்வியைக் குறைகூற முடியுமா? அஃது அவர்கள் தங்கள் மனதை அடக்கியாள முடியாமை தான் காரணம். பெண்கள் கல்வி அறிவு பெறாதவர்களாக யிருந்தால், எப்படித் தன் கணவனுக்கு மந்திரிபோல் இருந்து கொள்ள முடியும்? ஸ்திரீ ரத்தினங்களாக விளங்கியவர்கள் ஜீவிய சாத்திரங்களை படித்தறிவதெப்படி? தம் அருமைக் குழந்தைகள் கல்வி அறிவுடையவர்களாயிருக்க வேண்டுமானால், அக்குழந்தைகளின் தாய்மார்களும் படித்தவர்களாக இருக்கவேண்டுமன்றோ? தம்மக்களின் ஸன்மார்க்கத்திற்கும், துன்மார்க்கத்திற்கும் பெற்றோர்கள்தான் காரண பூதர்கள். இதனாலன்றோ "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்கிறார்கள். பரத நாட்டின் ஜோதியாய் விளங்கிய சீதை, தமயந்தி, முதலியவர்களும், முகம்மதிய ஸ்திரீ ரத்தினங்களாகிய ஆயிஷா, கதிஜா, ஜைனபு, பாத்திமா இவர்கள் எல்லாம் கல்வியிற் பாண்டித்தியமுடையவர்களன்றோ? இம்மாது சிரோன்மணிகளாகிய கற்புக்கரசிகளால், அவர்கள் தனக்கோ, அல்ல அவர்களின் மதத்திற்கோ, அல்ல தேசத்திற்கோ யாதொருவிதமான கெடுதல்களும் ஏற்பட்டதா? இல்லை. இனி இன்னுமொரு விஷயத்தைக் கவனிப்போம். இந்தியாவிலுள்ள பெரும்பாலோரான ஆடவர்கள் தங்கள் ஜீவனோபாயத்தின் பொருட்டு வெளி நாடு செல்கிறார்கள். அவர்களின் பதிவிரதா சிரோன்மணிகளில் அநேகர், தங்கள் உயிரினும் பெரிதாக நினைக்கும் தம் கணவனிடமிருந்து வரும் கடிதங்களைப் படித்து அவர்களின் க்ஷேம லாபங்களை அறிய முடியாமலும், இவர்களின் க்ஷேமலாபங்களை அவர்களுக்குத் தெரிவிக்க முடியாமலும் தவிக்கிறார்கள். சில சமயங்களில் படித்தவர்களுடைய உதவியை இவர்கள் நாடவேண்டி யிருக்கிறது. இவர்கள் படித்தவர்களாக இருந்தால் இவ்விதசங்கடத்திற்கு ஆளாகவேண்டியதில்லை. இது காலை எனது முஸ்லீம் சகோதரிகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முஸ்லீம் பெண் அநேகர் அறபியைத் தவிர, மற்ற தேசபாஷைகளைப் படிப்பது 'ஹராம்' மென நினைக்கிறார்கள். இவர்கள் இவ்வெண்ணத்தை அடியுடன் நீக்க வேண்டும், இன்றேல் இவர்களுக்குக் கதி மோக்ஷமில்லை. வடநாட்டின் கல்விக் களஞ்சியமெனப் பெயர்பெற்ற மௌலானா மௌல்வி அப்துல் பாரி கியாமுத்தீன் அவர்கள் [illegible] நடைபெற்ற 'மஜ்லிசுல் உலமா' மகாநாட்டில் அக்கிராசனம் வகித்துப் பின்வருமாறு பேசினார்:—

"இஸ்லாமியப் பெண்கள் கல்வி கற்பது மிகவும் அவசியம். அது அவர்களின் மார்க்க கடமை. என்னுடைய குடும்பத்தாருக்கு எப்படி குரானில் பாண்டித்யமோ, அப்படியே எனது தாய் பாஷையாகிய உருதுவிலும் பாண்டித்யமுண்டு. அவர்களுக்கு எழுதவும்படிக்கவும் தெரியும். இஸ்லாமியப் பெண்களுக்கு யாரைக் கொண்டு கல்வி பயிற்றுவிப்பது என்ற கேள்வி பிறக்கிறது. விருத்தாபியரைக் கொண்டோ அல்லது உபாத்தியாயினிகளைக்கொண்டோ கல்வி கற்பிக்கப்படலாம்."

இவ்விஷயத்தை எனதுசகோதரிகள் ஊன்றி கவனிப்பார்களாக!

இரண்டாவதாக தேச முன்னேற்றத்தைக் கவனிப்போம். ஒரு தேசம் முன்னேற்ற மடைந்து சுதந்திரமாக வாழவேண்டுமானால் அத்தேச மகளிர்கள் கட்டாயம் கல்வி அறிவுடையோர்களாக இருத்தல் வேண்டும். இன்றேல் அத்தேசத்திற்கு விமோசனமில்லை. உதாரணமாக சென்ற மகாயுத்தத்தில் மேல் நாட்டிலுள்ள ஆடவர்கள் போர்க் கோலம் பூண்டு தேசத்திற்காக உயிர் துறக்க யுத்த சன்னத்தமானபொழுது அத்தேசப் பெண்கள் தொழிற்சாலைகளிலும் இதர உத்தியோகவர்க்கங்களிலும் அமர்ந்து தேசஊழியம் புரிந்தனர். இவைகளை நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா? அவர்களுக்குப்படிப்பு வாசனையேஇல்லாமலிருந்திருந்தால் அவர்கள் இவ்வாறு உதவிபுரிய முடியுமா? மேல் எழுதிய விஷயங்களிலிருந்து சிந்தாமணியின் வாசகர்கள் ஆண் பெண் இருபாலருக்கும் கல்வி அவசியமென்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். கூடுமானவரை கல்வியைப்பற்றி சிறிது எழுதிவிட்டேன். இனி நம் நாட்டு பெண்களுக்கு எவ்விதமான கல்விவேண்டுமென்பதைக் கவனிப்போம்.

சிலர் பெண்களுக்கு மேல் நாட்டு ஸ்திரீகளைப் போல் அதிகமான படிப்புகளைக் கற்றுக்கொடுக்

கக்கூடாது என வாதிக்கிறார்கள். அப்படி அவர்கள் கல்வி கற்று பட்டதாரிகளாக விளங்கினால் மேல் நாட்டு ஸ்திரீகளைப்போல் அநாசார வழியில் இறங்கி விடுவார்களாம். நம் நாட்டு மகளிர்களுக்கு இல்லற தர்மத்தை நடத்தி வைக்கப்போதிய கல்வியே போதுமென்கிறார்கள். நாம் இவர்களின் கூற்றை ஒப்புக்கொள்ள முடியாது. நமது பெண்களுக்கு உத்தியோகக் கல்வி வேண்டாம். உயர்தரக் கல்வி அவசியமே. மேல்நாட்டுப் பெண்களைப் போல் நம் நாட்டுப் பெண்களும் அதிகமான கல்வியைக் கற்று ஆடவர்களைப்போல் சகல சுதந்திரத்துடன் தேசத்திற்கு உழைக்கவேண்டுவது மிகவும் அவசியம். அதிகமான கல்வியைக் கற்றுக்கொண்டதனால் நம் நாட்டு ஸ்திரீகளுக்கு யாதொரு பங்கமும் நேர்ந்துவிடாது. இந்தியாவிலுள்ள மகளிர் அனைவரும் கற்பை அவர்களின் சிறந்த பொக்கிஷமெனவும் உயிரைவிட மேலாகவும் கருதுவதால் அவர்கள் அனுசார வழியில் இறங்க ஒருபோதும் விரும்பார்கள். குடும்பக் கல்வியைக் கற்பதால் மட்டும் தேசத்திற்கு யாதொருவிதமான நன்மையையும் செய்ய முடியாது.

ஆதலால் எனது அன்புள்ள சகோதரிகளே! நீங்கள் உங்கள் வாழ்நாளை வீணே போக்காமல் உங்களுடைய மனதையும், விசால புத்தியையும், கல்வியைக் கற்பதில் செலவிட்டு, தேசத்திற்கு உழைக்க முன் வருவீர்களாக! நீங்கள் இல்லாவிட்டால் தேசத்திற்கு விமோசனமில்லை.

மார்க்கோபோலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் T. R. அனந்தநாராயண அய்யர்.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் ஆசியாக் கண்டத்தின் பெரும்பாகத்தையும், தார்த்தாரியரது ராஜ்யங்களையுங்கடந்து, கிழிந்தியத் தீவுகளின் வழியாய் சமுத்திர யாத்திரை செய்து தனது சொந்த தேசம் வந்து சேர்ந்த மார்க்கோபோலோ வென்பவர் நீரிலும் நிலத்திலும் செய்த யாத்திரைகள்.

முகவுரை

முதலாவது அத்தியாயம்.

பழைய காரணங்களை ஆராய்வதில் தேர்ந்தவர் அந்நாணயங்களை மிதமிஞ்சிச் சிலாகிப்பதும், அவ்வாராய்ச்சியிற் சிறிதும் கவனம் செலுத்தாதவர் அந்நாணயங்களை மாத்திரமேயன்றி அவற்றை யாராய்வோரையும் ஒருங்கே யிகழ்வதும் உலக வழக்கமாயிருக்கிறது.

பண்டைக்காலத்து ஆசிரியரது கதியும் இதுவே. “காரணமின்றி யொருவரை யிகழ்வது அழகல்ல” வென்று வாயால் மாத்திரம் ஓயாமல் பிதற்றிக்கொண்டு விஷயங்களைச் சிறிதும் ஆராயாது, அவற்றைப் பயனற்றவை யென்று கழித்துக் கட்டுவார் ஒருசாரார். பின்னு[illegible] சாரார் “நாம் எல்லா விஷயங்களை[illegible]யும் பக்ஷபாதமின்றிக் கவனித்து வருகிறோம்” மென்ற பாவனையுடன், “தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்” என்று தமது அபிப்பிராயங்களிலேயே அதிகப்பற்றுடையவராயிருப்பார். ஆகவே, முன்னவரை விஞ்சிய மூடர்களும் பின்னவரை முந்திய மூர்க்கர்களும் இராரென[illegible] சொல்லலாம்.

ஞானபிவிர்த்தியினால் பொதுவா[illegible] நன்மைவிளையுமாதலால், எங்கு அர் உய[illegible]பாகத்தினு ஒருகால் கெடுதி விளையுமோவெ[illegible]ன்று பயந்து

அவ்விருத்தியில் மனிதருக்குள்ள ஊக்கத்தைக் குறைக்காமல் நல்வழிப்படுத்துவதே நமது கடனாகும்.

ஞான மூலாதாரங்களை யாராய்வதில் காலவிரயமும் வீண்சிரமமுமே ஆகுமென்று பொதுவாகத் தோன்றினாலும், நம்மிலநேகர் அவ்வாறே நினைத்துத் தாமே ஞானம் நிறைந்தவரென்று நடித்துவந்தாலும் அது அவ்வாராய்ச்சிகளில் அவர்கள் ஊக்கங் கொள்ளாமையும் தேறுவதற்கு வேண்டிய துறைகளில் உழையாமையையுமே காட்டுகின்றது.

மார்க்கோபோலோவின் யாத்திரைகள் அதிப்ராதனமானவை. நமது கைக்கு வந்திருக்கும் பிரதிகளுள் குறைகளும் பிழைகளும் ஏராளமாகவிருக்கின்றன. ஆயினும் அவற்றில் நாம் கவனிக்கத்தக்க விஷயங்களிருப்பதால் அவை மிகச்சிறந்தவை யென்றே சொல்லவேண்டும்.

மேற்கிந்தியத் தீவுகளை கொலம்பஸ் கண்டுபிடித்ததுபோல், கிழிந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்தவரும் சீனாவின் அப்பாலுள்ள கடலையும் அங்கிருந்து கிழிந்தியத் தீவுகளைக்கடந்து நமது தேசம் வரையிலுமுள்ள அனுபாஸமான கடல் வழியையும்முதன்முதல் உள்ளபடி வருணித்தவரும் மார்க்கோபோலோதான்.

அவர், தாமுரைத்த விஷயங்களனைத்தும் உண்மைதானென்றும், அவற்றிற்குத்தாமே உத்தரவாதமென்றும் எவ்வளவோ உறுதி சொல்லியும், அவர்காலத்தவர் அவ்விருத்தாந்தங்களில் பெரும்பாகம் நம்பத்தகாதனவென்றும் அவை முற்றும் உண்மையல்ல வென்றும் ஆக்ஷேபித்து வந்தனர். இவ்வாக்ஷேபங்களால் [illegible] பிற்காலத்தவர் செய்த யாத்திரைகளினு [illegible] விசாரணைகளினாலும் ஆதாரமற்றவை [illegible]று ஏற்பட்டவளவில், கட்டுக்கதைகளெ[illegible] கருதப்பட்டு வந்தவைகளெல்லாம் மெய்ச்சரிதைகளேன்றே யொப்புக்கொள்ளப்படலாயின.

அக்காலத்திய வித்துவான்களால் அலக்ஷியம் செய்யப்பட்டு, உண்மையென்று ஒப்புக்கொள்ளப்படாமல், புராதன புஸ்தகசாலைகளில் புழுதிகளில் மறைந்து கிடந்த இந்நூலைத் தளரா முயற்சியுடைய ராமுஸியோ வென்னும் வித்துவான் வெகு பிரயாசைப்பட்டு அப்புழுதிகளினின்றும் தோண்டியெடுத்து,குருமார் எழுதியிருந்த கடும் லத்தீன் நடையிலிருந்து ஒருவாறு ஒழுங்குபடுத்தி இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் ஸ்திதிக்குக் கொண்டுவந்தார். ராமுஸியோ மஹா வித்வானானதால், அவரது கடாக்ஷம் பெற்ற எந்த நூலும் ஏற்றமுடையதென்றே சொல்லலாம். நாம் இந்நூலினிறுதியில் எழுதியிருக்கும் குறிப்புகளினால் இந்நூலின் சிறப்புகள் விளங்குமென்றாலும், அச்சிறப்புகளை முதன்முதல் வெளியிட்டவர் ராமுஸியோவேயாதலால், அவருக்கே இந்நூலின் மேன்மையையும் ஆக்கியோன் பெருமையையும் ஸ்தாபித்ததினால் வரும் எல்லாக் கீர்த்தியும் உரியதென்று மனதாரச் சொல்லுவோம். இந்த மஹான் மூலமாகத்தான் மார்க்கோபோலோவையும் அவரது குடும்பத்தாரையும் பற்றிய விவரங்களை நாமறிந்திருப்பது.

அவை இந்நூலை வாசித்தறிவதற்கு அத்தியாவசியமானவையன்றெனினும், படிப்பவருக்கு உதவியாகவும், உத்ஸாகந்தருவதாகவுமிருக்குமென்று கருதி, அவற்றை இங்கு சுருக்கமாக எழுதுகிறோம்.

இரண்டாவது அத்தியாயம்.

நமது நூலாசிரியரின் தந்தையான நிக்கோலோ போலோவும், அவரது தம்பியான மாபியோவும் கி. பி. 1250-ம் வருஷத்தில் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அன்னியதேச யாத்திரை செய்யப் புறப்பட்டு தார்த்தாரி தேசத்து

மஹாராஜனது ஸமஸ்தானஞ் சென்று, அவனது சபையில் அநேக வருஷங்கள் அமர்ந்திருந்து, 1269-ம் வருஷத்திலோ அதற்குக் கொஞ்சம் முன் பின்னாகவோ வெனிஸுக்குத் திரும்பி வந்தனர். இது இன்னூலின் ஆறும் அத்தியாயத்தில் விரிவாகச் சொல்லி யிருப்பதைக் காணலாம். அப்போது அவர்கள் ஸீனியர்* நிக்கோலோவின் மனைவியார் காலஞ்சென்றுவிட்டதையும், தாங்கள் யாத்திரைக்குப் புறப்பட்டபொழுது அம்மாதின் கர்ப்பத்திலிருந்த மகன் கல்வி கேள்விகள் நிறைந்த பத்தொன்பது வயதுள்ள யுவாவாக விருந்ததையும் அறிந்தனர். இவர்கள் திரும்பியும் தார்த்தாரி தேசம் சென்றபொழுது இவ்விளைஞரையும் கூட்டிச் சென்று, பின்னும் இருபத்தாறு வருஷங்கள் கழித்து 1295-ம் வருஷத்தில் க்ஷேமமாக வெனிஸுக்குத் திரும்பி வந்துசேர்ந்தனர். இவ்வாறு இவர்கள் திரும்பி வரும் வரைக்கும் வெனிஸிலிருந்த இவர்களது ஸ்நேகிதர்களுக்கு இவர்களைப் பற்றிய சமாசாரம் ஒன்றுமே தெரியாது.

கிரிஸாஸ்டம் முனிவர் வீதியிலுள்ள தங்கள் வீட்டுக்கு இவர்கள் வந்து சேர்ந்தபொழுது, தங்கள் சுற்றத்தாரும் சிநேகிதரும் தங்களைச் சுத்தமாய் மறந்து விட்டமையாலும், இத்தாலியருக் குரிய அடையாளங்களெல்லாவற்றையுமிழந்து, தாங்கள் பேசும் வார்த்தைகளிலும், தரித்த உடைகளிலும் தார்த்தாரியாரையே ஒத்திருந்தமையாலும், தாங்கள் வாஸ்தவமாகவே நெடுநாளாக நாடு நகரத்தையும் சிநேகிதர்களையும் விட்டுப் பிரிந்திருந்த வெனிஸ் நகரத்துக் கனவான்கள்தானென்று உலகத்தவருக்கு மெய்ப்பித்துத் தங்களுக்குரிய மரியாதையையும் கண்ணியத்தையும திரும்பிப் பெற விசேஷப் பிரயத்தனங்கள் செய்யவேண்டி யிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டுத் திகைத்து நின்றனர்.

* ஸீனியர் என்பது ஸ்ரீமான் என்பதுபோல் ஒரு மரியாதை வார்த்தை.

தங்களது நாட்டுரிமையையும் சுற்றத்தையும் ஸ்தாபிக்கும் நிமித்தம் இவர்கள் தங்களது உறவினருக்கு ஒரு பெருத்த விருந்து ஏற்பாடு செய்து அன்று மூவரும் விலையுயர்ந்த ஸாடின் பட்டுடைகள் அணிந்துகொண்டனர்.

விருந்தினர் அவரவர் ஆஸனத்தில் அமர்ந்த பின், இவர்கள், தங்களது ஸாடின் ஆடைகளைக் கழற்றித் தங்களது வேலைக்காரர்களுக்கு அளித்து, பின் சிவப்பு டமாஸ்க் பட்டாடைகள் அணிந்துகொண்டு விருந்தினர்களை யுபசரித்து விருந்தினிறுதியில் அவ்வாடைகளையும் முன்போலவே தங்களது வேலைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர்களெல்லாம் போஜன சாலையை விட்டகன்ற பின்னர் மார்க்கோபோலோவானவர் தம்முடையவும் தமது தகப்பன் சிற்றப்பனுடையவும் தார்த்தாரிய உடைகளை விருந்தினரெதிரிற் கொண்டு வந்து, அவற்றின் மடிப்பிலிருந்து அளவிடமுடியாத விலையுயர்ந்த நகைகளை யெடுத்துக் காட்டினார். அவைகளுள் சிலவற்றை அங்குக் கூடியிருந்தவர்கள் முன்னாளில் நன்றாகப் பார்த்திருந்ததினால் அவர்கள், 'இவர்கள் போலோவம்சத்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை' யென்று தீர்மானித்தனர்.

ஸீனியர் மாபியோ போலோ, வெனிஸ் நகரத்து மாஜிஸ்திரேட்டாக வெகு கண்ணியமாக உழைத்துத் தமது காலத்தை ஸுகமாகக் கழித்தார்.

இனி நமது ஆசிரியராகிய ஸீனியர் மார்க்கோவைப்பற்றி விசாரிப்போம். இவர் சொந்த நாடு திரும்பிவந்த சில மாதங்களுக்கெல்லாம் வெனிஸ் நகரத்தாருக்கும் ஜினோவா நகரத்தாருக்கும் யுத்தம் உண்டாக ஜினோவா நகரத்தாரின் கடற் படைத்தலைவனான லம்பா டோரியா வென்பவன் 70 படவுகள் நிறைந்த படையுடன் கர்ஸோலா வென்னும் தீவுக்கு

யுத்த ஸன்னத்தனாய் வந்து விட்டான். அவனைத் தடுப்பதற்காக வெனிஸ் நகரத்தார் ஆண்டிரியா டான்டோலோ வென்பவரை ஒரு பெருங் கடற்படையுடன் விடுத்தனர். அப்படையில் ஒரு படவுக்கு மார்க்கோ போலோவும் தலைவராயிருந்தார். இந்த யுத்தத்தில் வெனிஸ் நகரத்தார் தோல்வி யடைந்ததினால், இவர் கைது செய்யப்பட்டு ஜினோவா நகரத்திற் சிறைவாசஞ் செய்யவேண்டிவந்தது. இவரை விடுவிப்பதற்காக இவரது உறவினர்களும் நண்பர்களும் செய்த பிரயத்தனங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. இதைக் கண்ட இவரது தகப்பன், இவர் சிறை நீங்கி வெளிப்படுவாரென்ற நம்பிக்கை யில்லாதவராய்த் தன் சந்ததியே தன் ஆஸ்திகளை ஸ்வீகரிக்க வேண்டுமென்ற ஆசையுடன் இரண்டாந்தாரம் மணந்து மூன்று குழந்தைகளையும் பெற்றார்.

இவ்வாறு மார்க்கோபோலோ காராகிருஹவாஸம் செய்து வருகையில், ஜினோவா நகரத்துப் பெரிய மனிதர்களது பிள்ளைகளெல்லாம் இவர் செய்த கடல் யாத்திரைகளையும் அந்த யாத்திரைகளில் இவர் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் கேட்கத் திரள் திரளாக வருவார்கள். அவ்வரலாறுகள் அவர்களுக்கு மிகவும் ஆனந்தத்தை யளித்ததினால் அவர்களிலொருவன் இவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளை வெனிஸிலிருந்து தருவிக்கும்படி வேண்டிக் கொண்டான். அவை வந்தபின், அவற்றின் உதவியைக் கொண்டு மார்க்கோபோலோ சொன்ன விருத்தாந்தங்களை அவன் லத்தீனில் எழுதினான். அச்சரிதை பின்பு இத்தாலிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த இத்தாலியமொழி பெயர்ப்பு திரும்பவும் லத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டு ஸம்ஸ்கரிக்கவும் பட்டதினால் இன்னூல் முதன்முதல் அச்சிடப்பட்டபொழுது, "இதில் விபரீதமான பிழைகள் நிறைந்துள்ளன வென்று வித்வான்கள் கூக்குரலிடக் காணமாயிற்று.

மார்க்கோபோலோவினால் இன்னூலிற் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களனைத்தும் உண்மையென்று அவரது தகப்பனும், சாகுந்தருணத்தில் அவரது சிற்றப்பனும் உறுதிமொழி கூறினர்.

கடைசியாக மார்க்கோபோலோவுக்கும் விடுதலையாயிற்று. அதன் பின் அவர் வெனிஸுக்கு வந்து மணந்து மொரேடா, பாண்டினா, பெல்லேலாவென்ற பெயருடைய மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்றார். இவருக்கு ஆண் சந்ததி யுண்டாகவில்லை. இவர் தம்மை யறிந்தவர்களாலும் தம்முடன் ஸம்பாஷித்தவர்களாலும் விரும்பப்பட்டும் நன்கு மதிக்கப்பட்டும் ஜீவனம் செய்து காலம் கழித்தார்.

நல்லகுலம் ஏராளமான தனம் ஆகிய இவைகளால் ஏற்படக்கூடிய பெருமைகள் எவ்வளவோ இருந்தும் இவர் மிகத்தாழ்மையுள்ளவராகவே யிருந்தார். தனக்கு ராஜ்யத்தி[illegible] செல்வாக்கைப் பரோபகார நிமித்தம் [illegible]ரேயன்றி வேறு துறைகளில் [illegible] செலுத்தவேயில்லை.

மூன்றாவது அத்தி[illegible]ம்.

இன்னூலின் பல ப[illegible]புகள்.

இன்னூல் முதன்முதல் லத்தீ[illegible] இயற்றப்பட்டதென்றும், ஆசிரியர் மார்க்கோபோலோ தம்கைப்பட எழுதாவிட்டாலும் அவர் சொல்லக்கேட்டு எழுதப்பட்டதென்றும் சொன்னோம். இன்னூல் இத்தாலிய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டபின், லத்தீன் பிரதிகள் கவனிப்பாரற்று அரிதாகிவிட்டன. ஆகவே இத்தாலிய பாஷையிலுள்ள நூலே முதனூலென்று எல்லாரும் கருதி வந்தனர். பின்பு, பிரான்ஸிஸ் பெபின் என்னும் ஒரு பாதிரி இந்த இத்தாலி[illegible]

பாஷையிலிருந்த நூலைத் தமது மடாதிகாரிகளின் ஆணைப்படி லத்தீன் பாஷையில் ஸங்கிரஹித்து எழுதிவைத்தார். பிரஷ்யா நாட்டு அரசாது புஸ்தகசாலையிலிருக்கும் கையெழுத்துப் பிரதி இந்த லத்தீன் மொழி பெயர்ப்புத்தான். இதையேபிரஸித்திபெற்ற வித்துவானுனைரினீஸியஸ் என்பவர் அதி ஜாக்கிரதையுடன் பரிசோதித்து பேஸிலில் அச்சிடுவித்தார். இந்தப் பதிப்புகளுள் ஒன்றைத்தான் ஹாக்லேட் என்பவர் ஆங்கிலத்தில்மொழிபெயர்த்தனர் இதில் தவறுகள் மலிந்துகிடக்கின்றனவென்று பர்ச்சாஸ் என்பவர் வெகுவாகக் குறை கூறுகிறார். அவரது ஆக்ஷேபங்களெல்லாம் நியாயமானவைகளாகவேயிருக்கின்றன.

ராமுஸியோ வென்பவர் வெகு சிரமப்பட்டு, அநேக நூல்களை யாராய்ந்த பின், நம் ஆசிரியரது கூற்றின் உட்கருத்துகளை நன்கு விளக்கி அவை உண்மை தானென்று ரூபிக்க விரிவான உரைகளும் எழுதினார். இவ்விஷயத்தில் இவரது நேசரான ஸீனியர் சிவியென்பவர் தம்மிடமிருந்த லத்தீனில் முதன் முதல் எழுதப்பட்ட நூலின் கையெழுத்துப் பிரதியொன்றைக்கொடுத்து உதவிசெய்தார். இவ்வுதவி கிடைத்திராவிடில், இவருடைய இன்னூலை இப்போது நாம் படித்துக் களிக்கும்படி ஒழுங்காகவும் திருத்தமாகவும் வெளியிட முடிந்திராது.

இ[illegible] சொல்லிவந்த மொழிப்பெயர்ப்புகளைத்தவிர ஜெர்மன் பாஷையில் குறைந்தது இரண்டு மொழிபெயர்ப்புகளாவது உண்டு. 1502-ம் வருஷத்தில் இன்னூலின் போர்த்துக்கேசிய மொழிப்பெயர்ப் பொன்று லிஸ்பன் பட்டணத்தில் அச்சிடப்பட்டது. உலாந்த பஷையில் இன்னூலுக்கு மொழி பெயர்ப்புகள் எண்ணிறந்தவையாக விருக்கின்றன. இத்தனை பதிப்புகளும் மொழி பெயர்ப்புகளும் ஒன்றுக்கொன்று வேறுபடுவதே நான் அவைகளைப் பற்றி இங்கு பிரஸ்தாபிக்கக் காரணம். ஆதலால், ஆசிரியரின் உட்கருத்தை யறிவதற்குச் சரியான வழி மேற்குறித்த நூல்களெல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துப் படித்துப் பரிசோதனை செய்வது தானென்று விசிதமாக விளங்கும். இது லகுவான காரியமல்ல. தளராத உழைப்பும் முயற்சியும் வேண்டும். ஆயினும், இத்துறையிலும் அதிமேதாவியான ஜெர்மன்பண்டிதர் ஆண்டிரூ முல்லரும், பிரஞ்சுக்காரரான பீட்டர் பெர்ஜிரான் என்பவரும் நமக்குப்பேருபகாரம் செய்திருக்கின்றார்கள். ராமுஸியோவுக்குப் பின், இவ்விஷயத்திலுழைத்தவர்களெல்லாரினும் அதி ஸாமர்த்திய முடையவரும் கரைகண்டவரும் கடைசியாகச் சொல்லப்பட்ட பீட்டர் பெர்ஜிரான் என்பவர்தான்.

இவ்வளவுபேர்கள் இன்னூலின் விஷயமாய் உழைத்து வந்திருந்தபோதிலும் இன்னூலில் பின்னுமொரு பெருங்குறை யிருந்தது. அதென்னவெனில், இதில் சொல்லப்பட்டிருக்கும் ஸம்பவங்கள் அவை ஸம்பவித்த காலங்கள், எளிதில் விளங்காத நாடு நகரங்களின் பெயர்கள், ஆகிய இவைகளை ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டியிருந்ததேயாம். இக்குறையை நாம் [illegible] மொழி பெயர்ப்பில் நம்மால் கூடியமட்டில் நீக்கியிருக்கிறோம். ஆதலால் இப்புராதன நூலைப் படிப்பவர் இது நமது சக்திக்கெட்டியமட்டில் திருத்தமாகவும் பூர்த்தியாகவும் வெளியிடப்பட்டிருக்கிறதென்று அறிந்து திருப்தியடையலாம்.

நான்காவது அத்தியாயம்.

பழைய பிரதிகளிலுள்ள குறைகள்.

நமது ஆசிரியரது திறமையையும் யோக்கியதையையும் ஸந்தேகிக்க இடந்தந்த ஸகல ஆக்ஷேபங்களும், அவரது நூலை ஒரு பிரதியினின்றும் வேறொரு பிரதியை யெழுதியவர்களும், ஒரு பாஷையிலிருந்து வேறொரு பாஷையில் மொழி

பெயர்த்தவர்களும் செய்த தவறுகளினால் விளைந்தவையாம். ஆசிரியரது உண்மையான கருத்து இன்னதென்று தெரிந்து, அதை யனுசரித்து அவரது நூலும் திருத்தப்பட்டபொழுது, அவ்வாக்ஷேபங்களில் பெரும்பான்மையானவை அறவே யொழிந்தன. ஆதலால், நாம் அவற்றை இங்கு விசேஷமாய்க் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. நாம் கவனிக்கத் தக்க விஷயங்கள் வேறுள.

நமது ஆசிரியர், நாம் முன்னும் பின்னும் கண்டாவது கேட்டாவது அறியாத சில நாடுகளையும், அநேக நகரங்களையும் பற்றிச் சொல்லியுள்ளார் என்பது ஒரு ஆக்ஷேபம். இது யோசிக்கத் தகுந்ததுதான். ஏனெனில், இந்த ஆக்ஷேபம் நியாயமா யிருந்தால், இன்னூல் விஷயமாய் இதுகாறும் வித்வான்கள் செலுத்திய கவனமும் உழைப்பும் வீணாயின வென்றன்றோ கருதவேண்டும்?

இதற்கு நமது ஸமாதானமென்ன வென்றால்:—

ஒன்று, நமது ஆசிரியர் தாம் காதால் கேட்ட விஷயங்களைத்தான் நமக்குச் சொன்னார்.

இரண்டாவது, அவருக்குமேற்கண்ட விஷயங்களைச் சொல்லியவர்கள் முக்கியமாக தார்த்தாரி நாட்டார்கள்.

மூன்றாவது, அவர் சொல்லிய நாடு நகரங்களின் தார்த்தாரியப் பெயர்கள் நம் நாட்டாரது செவியில் விழும்பொழுது, கொச்சையாயும் புதுமையாயும் தோன்றுவது ஸகஜந்தான்.

மேலும், இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் ஸகாயங்களினால், இந்த ஸந்தேகத்தையும் நிவர்த்தி செய்துகொள்ளக்கூடிய பாக்கியம் நமக்கு வாய்த்திருக்கிறது. இன்னூலின் போக்கில் வரும் பூகோள சாஸ்திர விபரீதங்களான நாடு நகரங்களின் பெயர்களை நமது ஆசிரியர் சொல்லியவாறே நாமும் எழுதி யிருக்கிறோமென்றாலும், கீழ்நாட்டு ஆசிரியர்களது நூல்களை ஆதாரமாகக் கொண்டு அவ்விபரீதங்கள் ஒவ்வொன்றையும் கண்டவிடத்தில் ஆங்காங்கு நமது உரைகளில் விளக்கி யிருக்கிறோம். இதனால் மார்க்கோ போலோவின் வாய்மையையும் யோக்கியதையையும் ஸந்தேகிக்க சிறிதும் இடமில்லையென்றே ஏற்படுகிறது.

பின்னுமொரு ஆக்ஷேபம்: இவர் சொல்லும் விருத்தாந்தங்களுக்கும் மற்றஆசிரியர்கள் எழுதிய விருத்தாந்தங்களுக்கும் ஒற்றுமையில்லையென்பது—அல்லது மற்றைய ஆசிரியர்கள் இவர் சொல்லியிருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை யென்பதாம். ஆராய்ந்து பார்க்குமளவில், இந்த ஆக்ஷேபமும் மிகவும் அல்பமானதென்றே விளங்கும். ஏனெனில் மேற்கூறிய மாறுபாடுகளனைத்தும் ஆசிரியரிர் மொழிகளுக்கு விபரீதமான பொருள் கொண்டதினால் விளைந்த அனர்த்தங்களேயாம்.

ஆதலால் இன்னூலில் குற்றங்கள் கண்டுவிட்டதாகப் பாவித்து ஆசிரியருக்கும் அறிவிலிப்பட்டம் கட்டிவிட்டவர் துடுக்குமிக்கவரென்பதில் ஐயமில்லை.

கடைசியானதும் மற்றெல்லாவற்றையும் விடப் பெருத்ததுமான ஆக்ஷேபமென்னவென்றால் நமது ஆசிரியர் தமது நூலில் அநேக ஆபாஸங்களையும், பல நம்பத்தகாத ஸங்கதிகளையும் எழுதிவிட்டாரென்பது. இவ்விஷயமாய் நாம் இவர்பக்கம் வெகுவாய்ப் பரிந்து பேசலாமென்றாலும் ஆக்ஷேபம் நிவர்த்தியாகாது. நம்முடைய முயற்சிகளும் பயனற்றவையாகும்.

இவர் தாம் நேரில் கண்டதாகச் சொல்லும் ஸங்கதிகள் இக்காலத்தில் கண் கூடாகவும் உள்ளங்கை நெல்லிக் கனிபோலவுமுள்ள சான்றி

யங்களால் ரூபிக்கப்பட்டு நமக்கு வியப்பைத் தருகின்றன. ஆனதுபற்றி, அன்னியர் சொல்லக் கேட்டு எழுதிய மற்றைய அம்சங்களில் இவர் மோசம் போயிருக்கலாமென்று ஊகித்துத் தேறுவதே நமது கடனாகும். ஏனெனில், நாம் வாழும் நாகரீகம் நிறைந்த இக்காலத்தில் ஒருவரும் நம்மை எளிதில் ஏமாற்றவாவது தப்பு வழியில் நடத்தவாவது முடியாது. மார்க்கோபோலோவுக்கு இந்த பாக்கியம் இருக்கவில்லை. ஆதலால் நமக்கிருக்கும் ஸௌகரியங்களைப் பெறாதவரும் அஞ்ஞானாந்தகாரமும் ஞான சூன்யமும் நிறைந்து, கட்டுக் கதைகளெல்லாம் உண்மைகளாகக் கருதப்பட்டு வந்த காலத்தில் வசித்த வருமான இவரது தவறுகளெல்லாம் அவரது தௌர்பாக்கிய விசேஷமே யன்றி அவருடைய குற்றங்களல்லவென்று நாம் அவற்றைப் பொறுத்தல் வேண்டும்.

ஐந்தாவது அத்தியாயம்.

இந்நூலை யாராய்ந்த சில வித்துவான்களின் அபிப்பிராயங்கள்.

நம்மாசிரியர் பக்கம் இவ்வளவு ஆக்ஷேபங்களிருக்கினும், அவரது திறமையைச் சில பெரிய மனிதர்கள் அப்போதைக்கப்போது வியந்து கொண்டாடி யிருக்கின்றனர். இவர்களுள் முக்கியமாக (1) லத்தீன் பாஷையில் இந்த யாத்திரைகளை யெழுதியவரது சரித்திரம் தொகுத்த பிரஸித்திபெற்ற வித்துவானான வால்ஸியஸ்ஸையும் (2) பூகோள சாஸ்திர நிபுணரான ஸிபெஸ்டியான் மன்ஸ்டரையும் (3) பிரகிருதி சாஸ்திர வித்துவானான கோன்ராட் ஈஸ்னர் என்பவரையும் (4) பிழையில்லாச் சரித்திரமெழுதிய வியன்கிளேஸியஸ் என்பவரையும் (5) ஜோஸப் ஸகேலிகர் என்ற பிரஸித்திபெற்ற வித்துவானையும் வேறு அநேகரையும் ஸ்மரிக்கலாம். பாஸீக அரசர்களது சரித்திரமெழுதியவரும் பல நூல்களை யாராய்ந்தவருமான வில்லியம் ஷிக்கார்டு என்னும் ஜர்மானிய வித்துவான் நமது ஆசிரியரைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:—"வெனிஸ் நகரத்தவரான மார்க்கோபோலோ மிகச்சிறந்த ஆசிரியர். அவரெழுதிய விஷயங்களில் நம்பத்தகாதனவென்று இது வரை ஜனங்கள் கருதிவந்த அம்சங்களெல்லாம், இப்போது செய்யப்பட்டுவரும் ஆராய்ச்சிகளினால் உண்மையென்றே தினே தினே ரூபிக்கப்பட்டு வருகின்றன." நமது ஆசிரியரின் விஷயமாய் உழைத்து வந்தவரெல்லாரிலும் மார்டினி பாதிரியை விஞ்சிய திறமையுடனும் ஊக்கத்துடனும் உழைத்தவராவது, அவ்வாராய்ச்சியில் அவரினும் அதிகமாகத் தேர்ச்சி பெற்றவராவது இல்லை. இவர் சீனதேச சரித்திரம் என்ற மிகச்சிறந்த நூல் ஒன்று உலகத்தார் படித்து இன்புறுமாறு எழுதியிருப்பதினால், மற்றெல்லாரையும்விட இவரே நம்மாசிரியரது நூலின் குணதோஷங்களை யுரைக்கவல்லவர். "நமது ஆரியர் எழுதியிருக்கும் நாடுநகரங்களின் பெயர்கள் நமக்கு விளங்காத காரணத்தினால் நாம் அவரது வாக்கைச் சந்தேகிப்பது சிறிதும் நியாயமல்ல"வென்று இவர் வற்புறுத்திக் கூறுகிறார். ஏனெனில் "நமது ஆசிரியர் அப்பெயர்களைத் தார்த்தாரிய உச்சரிப்பை யனுசரித்து எழுதினார். அவருக்குப் பிற்கா[illegible] அப்பெயர்களைக் கூடியமட்டும் சீனரைப்[illegible] உச்சரிக்க முயலுகிறார்கள்."

இதுவரை யெடுத்துக்காட்டிய ஆதாரங்களுடன் முடிவாகப் பின்னுமொருவரது ஆதாரத்தையும் இங்குக்குறிப்போம். இந்த வித்துவான் மற்றைய ஆசிரியர்கள் எழுதிய நூல்களிலுள்ள பிழைகளையும் அபத்தங்களையும் கண்டுபிடிப்பதில் அதிசமர்த்தராயிருந்ததுமன்றி அவ்வாசிரியர்களின் அந்தஸ்து, கீர்த்தி முதலியவைகளைக் கவனியாது அவரது தவறுகளை நிர்த்தாக்ஷண்ணியமாய் எடுத்துக்கூறும் ஸ்வபாவ முள்ளவர்.

இவர் யாரென்றால் அதானேஸியஸ் கிர்ஷர் என்பவர்தான். இவர் தாமெழுதிய சீனசரித்திரத்தில் "கீழ்த்திசையில் நெடுந்தூரத்திலிருக்கும் தேசங்களை வருணித்த பூர்விக ஆசிரியர்களில் ஒருவராவது மார்க்கோபோலோவைவிட அதிக விரிவாகவாவது திருத்தமாகவாவது எழுதவில்லை" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். தவிர இவர் "மார்க்கோபோலோவின் நூலில் விளங்காதனவான விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன" வென்றும் அடுத்தபடியாக ஒப்புக்கொண்டு இக்குறைகளனைத்தும் நமது ஆசிரியர் பூமிசாஸ்திரமும் வானசாஸ்திரமும் கல்லாமையினால் ஏற்பட்டவை யென்று அதிதாராளமாகவும் ஒளியாமலுஞ் சொல்லியிருக்கிறார்.

ஆதலால், நமது ஆசிரியர் தமது இளம்பிராயத்திலேயே தம் தகப்பனுடன் தார்த்தாரி தேசம் சென்றதையும், தமது நூலிற் காணும் தவறுகளை நீக்குவதற் கவசியமான சாஸ்திரங்களைப் பயில அவருக்கு ஸௌகரியங்கள் இல்லாமலிருந்ததையும் நினைத்து, நூலாராய்ச்சியில் நிபுணரான மேற்கூறிய வித்துவான்களும் ஆசிரியர்களுஞ் சொல்லியவாறு இந்நூலில் காணக்கிடக்கும் வினோதமும் பிரயோஜனமுமுள்ள எண்ணிறந்த அம்சங்களையேற்றுக்கொண்டு விதிவசமாக ஏற்பட்ட குறைகளைக் கவனியாது தள்ளிவிடலாம்.

இந்நூலுக்குப் பீடிகையாக இவ்வளவு தூரம் எழுதவேண்டுவது அவசியமாயிற்று. இனி நம்மாசிரியரின் நூலை வாசிக்கத் தடையில்லை. அவர் முதன் முதல் தனது தகப்பனும் சிற்றப்பனும் செய்தயாத்திரைகளை விசதமாகக் கூறிப் பின் தம்முடைய யாத்திரைகளையும் வருணிக்கிறார். பின்னர் அவர்களெல்லாருங் கடந்துசென்ற நாடு நகரங்களைச் சாங்கோபாங்கமாக விவரித்துக் கடைசியாக ஸமுத்திர யாத்திரை செய்தபொழுது தாம் கேள்விப்பட்ட விசித்திரமான விஷயங்களையும் சொல்லுகிறார்.

(தொடரும்.)

இந்திய ஸ்திரீ ரத்னங்கள்.

(464-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீமான் C. N. அனந்த சுப்பன்.)

இவ்வளவு உபசாரத்துடன் ஓர் அந்தணரை பகவான் நடத்தினார். ஸ்ரீ கிருஷ்ணபகவானது நிலைமை என்ன? இவ்வேதியரின் நிலைமை என்ன? ஒருபெரிய சக்கரவர்த்தி: உலகத்தை ஸ்ருஷ்டித்த பரமாத்மா: பிராமணர் சாமனியமானவர்; பகவானது ஸ்ருஷ்டியால் உண்டாக்கப்பட்டவர்: என்றாலும் எவ்வளவு மரியாதையுடன் நடத்தப்பட்டார். அந்தணருக்கு அக்காலத்தில் அவ்வளவு பெருமை இருந்தது! (இக்காலத்தில் அந்தணர்களின் நிலைமையைப்பற்றி என்னென்று கூறுவது?)

இவ்வாறு விசேஷத்தைக் கேட்கவே வேதியர் தாம் கொண்டுவந்த கடிதத்தைப் பகவானிடம் கொடுத்தார். பகவானும் அந்த லிகிதத்தை மிகவும் சந்தோஷமாகப் பிரித்துப்பார்த்தார். பின்வருமாறு எழுதப்பட்டிருந்ததை வாசித்தார்.

என் அன்பிற்கு நாயகமானவரே!

நான் ஓர் ஏழைப்பெண். விதர்ப்பநாட்டரசனது ஏகபுதல்வி. தாங்கள் என்னை அறிந்திருக்கமாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். ஆனாலும் நான் தங்களை நன்கு அறிவேன். தங்களது அழகிய தேசத்திலிருந்து வந்த பல பெரியோர்

களால் நான் தங்களைப்பற்றியும், தங்களது வடிவழகைப்பற்றியும், தங்களது பெருமையைப்பற்றியும் கேட்கும்படியான பாக்கியம் எனக்குக்கிடைத்தது. நான் என்று தங்களைப்பற்றி முழுமையும் தெரிந்துகொண்டேனோ அன்று முதலே தங்களை மணக்க வேண்டுமென்று நிச்சயம் செய்துகொண்டுவிட்டேன். அடியேனது உள்ளமானது தங்களையே காதலித்திருக்க இதை அறியாது மூர்க்கனாகிய என் தமயன் தன் நண்பனாகிய சிசுபாலன் என்னும்படியான தங்கள் விரோதிக்கு என்னைக் கொடுத்து விவாகம் செய்வதாக நிச்சயித்திருக்கிறான். பலவிதமான காரணங்களால் எனது பெற்றோர்களும் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித்திருக்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றிப் பிராமணர் தங்களுக்கு விவரமாகத் தெரிவிப்பார்கள். விவாக நாளோ நெருங்கிக்கொண்டுவருகிறது. அந்தோ! நான் என் செய்வேன்? எவ்வாறு உய்வேன்? எனக்கு முற்றும் ஆகாத அந்தப் பாவி சிசுபாலன் என்னை மணந்துகொண்டு விடுவானே என்ற அச்சமானது என்னை வாட்டுகிறது. இதற்கு நான் என் செய்வேன்? ஆ! என் அரிய காதலரே! அழகிற்கு இருப்பிடமானவரே! என்னைத் தாங்கள் கைவிடுவீரா? விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். எப்பொழுது நான் என் உயிரைத் தங்களுக்கென்று தத்தம் செய்துவிட்டேனோ அப்பொழுதே இந்தக் கேவலமான உடலும் தங்களுக்குச் சொந்தமாய் விட்டதல்லவா? ஆகையால் நானே தாங்கள், தாங்களே நான். தங்களுடைய உயிராகிய எனக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால் அதைத் தங்களுக்கே நேர்ந்ததாகக் கருதுகிறேன். எப்படியாவது தாங்கள் என்னைக் கூட்டிக்கொண்டு போய்விடுமாறு வேண்டிக் கொள்கிறேன். இதற்கு ஒரு தந்திரம் இருக்கிறது. அதாவது நான் கௌரீ பூஜை செய்வதற்காக வீட்டை விட்டு விவாகத்திற்கு முந்தின நாள் வெளியே வருவேன். அன்று அச்சமயத்தைப் பார்த்து என்னை அழைத்துக் கொண்டு போய் விடவேண்டுமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் நான் நாணமின்றி இவ்வாறு எழுதுகிறேனே என்று ஒரு வேளை நினைத்தாலும் நினைக்கக்கூடும். அதற்காக நான் என்ன செய்யக்கூடும்? தாங்கள் இந்த உலகத்தை ஸ்ருஷ்டித்திருக்கிறீர்கள். தங்களைப்பார்த்து சந்தோஷிக்காமலிருக்க யாருக்குத் தான் மனம் வரும்? உலகம் அநித்தியம்; நிலையற்றதல்ல. மனிதன் என்றும் இந்த உடலோடு இருப்பதில்லை; செய்யவேண்டியது நற்கருமங்கள்; மற்ற விஷயங்களில் மோஹம் வைக்கலாகாது; ஒவ்வொருவனும் நிலையாயும் சாஸ்வதமாயும் பெறுதற்கரிதாயும் இருக்கும்படியானது மோக்ஷம் தான் என்று நினைத்து உலக ஆசைகளைப்போக்கி என்று தீர்மானித்துக் கொண்டு காட்டிற்குச் சென்று கந்தமூலாதிகளை உட்கொண்டு தவம் செய்யும்படியான மகரிஷிகளும் முனிவர்களும் தங்களைக் காணவேண்டுமென்றுதான் செய்கிறார்கள் என்றால் கேவலமான அற்பப் பெண்ணாகிய என்னைப்பற்றி என்னென்று கூறிக்கொள்வது? ஆகையால் ஒவ்வொரு கணமும் மனதில் தங்களையே நினைத்துக்கொண்டிருக்கும்படியான என்னை, வாயால் தங்கள் திருநாமத்தையே ஸ்மரித்துக் கொண்டிருக்கும்படியான என்னை, நான் குறித்த நாள் அன்று வந்து அழைத்துச் செல்லவேண்டுமாகக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு வரத் தவறினால் என் உயிரானது தங்கள் பாதாரவிந்தங்களை வந்து அடையும் என்பதைமட்டும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சத்தியம்.

இப்படிக்குத் தங்களையே நம்பி யிருக்கும்,
உருக்குமணி.

இந்நிருபத்தை வாசித்ததும் கிருஷ்ணன், "ஆ! ஆ! என்னே உருக்குமணியின் அன்பு! 'அன்பு' என்றால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்! உருக்குமணியைப்போல் அன்புடைய ஸ்திரீயை நான் இனி காணப்போவதில்லை. எவ்வாறு உருக்குமணியானவள் என்னைப்பற்றிக் கேள்விப்பட்டு என்னை நேசிக்கிறாளோ அதே மாதிரியே நானும் அவளைப் பல பெரியோர்களால் கேள்விப்பட்டு நேசித்து வருகிறேன். என் மீது ஆசை வைத்திருப்பவர்கள் அநேகர் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். என்றாலும் நான் உருக்குமணியையே என்னுடைய நாயகியாகக் கொள்வது என்று தீர்மானித்து விட்டேன். தவிர இந்த அன்பான நிருபமானது ஏற்கனவே நான்செய்த தீர்மானத்தை ஸ்திரப்படுத்துகிறது" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு அந்தணரைப் பார்த்து "பிராமணோத்தமரே! நான் தங்களுக்கு வணக்கமாகத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் நான் உருக்குமணியின் இஷ்டப்படி அவளையே விவாகம் செய்து கொள்ளுவதாகச் சொல்லுங்கள். இதை நம்பும்படியாகவும் சொல்லுங்கள். தவிரவும் நான் அவள் குறித்த தினத்தன்றே வந்து கூட்டிக்கொண்டு செல்வதாகவும் அவளிடத்தில் தெரிவியுங்கள்" என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டார்.

இங்கு இவ்வாறு இருக்க வேதியரை அனுப்பிவிட்டு உருக்குமணி தனக்குள் சற்று மனம் சோர்ந்தாள். நிருபம் கண்ணனுக்கு அனுப்பியது ஒரு வேளை குற்றமாயிருக்குமோ என்று அஞ்சினாள். தன்னைப்பற்றித் தவறாகப் பகவான் நினைத்துவிடுவாரோ என்று மனம் கலங்கினாள்; தான் நிருபத்தில் எழுதிய கட்டளைகளை ஏற்றுக்கொள்வாரோ அல்லது மறுப்பாரோ என்று சந்தேகித்தாள். தனக்குள் "ஓ! கமலக்கண்ணா! என் அன்பைக் கவர்ந்தவரே! என் ஆசைக்கு இருப்பிடமானவரே! என் எளிய அன்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீரோ? நான் கேட்டுக்கொண்டபடி என்னை அழைத்துச் செல்வீரோ? தாங்கள் என்ன செய்தாலும் சரி; என்னை வெறுத்தாலும் சரி; அல்லது அங்கீகரித்தாலும் சரி; என் அன்பானது தங்களை விட்டுச் செல்லாது. இது வாஸ்தவம்: அன்பைப்பற்றி நான் என்னென்று உரைக்கப்போகிறேன்!

"அன்பின் வழி தெரியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்குவதே.
ஆசைப்பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து நான்
அற்றேன் அலந்தேனென
என்புலன் மயங்கவே பித்தேற்றிவிட்டாய்
இரங்கியொரு வழியாயினும்
இன்பவெளமாக வந்துள்ளங்களிக்கவே
எனை நீ கலந்ததுண்டோ?
தன் பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்மூகை தனக்குமுண்டோ?
தமியனேற்கிவ்வண்ணந் திருவுள மிரங்காத
தன்மையால் தனியிருந்து
துன்பமுறி னெங்ஙனே அறியாத நின்னன்பர்
அகம் வந்து வாய்க்கு முறையாய்?"

என்று பாடிக்கொண்டே கண்ணீர் சொரிந்தாள்.

இவ்வாறு சில நாட்களே செல்ல விவாகத்திற்காகக் குறித்த நாள் வந்துவிட்டது. நகர முழுதும் பற்பலவிதமான அழகிய தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அநேக இடங்களில் விலை உயர்ந்த முத்துப் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. மாடங்களிலிருந்தும் கோபுரங்களிலிருந்தும் வந்த சந்தனப் புகையானது வானத்தை அளாவிற்று. உருக்குமணியின் விவாகம் என்று கேள்விப்பட்டவுடன் ஷேடி திருமணத்திற்குவாராத அரசர்கள் இல்லை. எல்லோரும் வந்திருந்தனர். பற்பலவிதமான புஷ்பங்களாலும், பச்சைத் தோரணங்களாலும், கமுகு, வாழை முதலிய அழகிய மரங்களாலும், பற்பலவிதமான முத்துக்

களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த நகரமானது தேவர்கள் வசிக்கும்படியான இந்திர லோகத்தையும் தோற்கடிக்கும்படியான நிலைமையில் இருந்தது. எங்கு பார்த்தாலும் சங்கீதக் கச்சேரிகள்; வாத்திய கோஷங்கள். உருக்குமணியையும் மங்கள ஸ்நானம் செய்வித்தனர். மாப்பிள்ளையாகிய சிசுபாலன் மிகவும் கம்பீரமாகக் காணப்பட்டான்; சந்தோஷ சாகரத்தில் மூழ்கி இருந்தான். உருக்குமணி ஸ்நானம் செய்துவிட்டு கௌரீ பூஜைக்காக வெளியே வந்தாள். மனதில் "ஐயோ! இன்னும் பகவான் வரவில்லையே! என்செய்வேன்? அந்தப் பிராமணர் போய்ச் சேர்ந்து லிகிதத்தைக் கொடுத்தாரோ இல்லையோ? தெரியவில்லை. விடிந்தால் கல்யாணம். பாவி சிசுபாலன் வந்தும் சேர்ந்தாய் விட்டது" என்று விசாரப்பட்டுக் கொண்டிருக்கப் பிராமணரும் வந்து சேர்ந்தார். அவரால் விஷயம் முழுவதையும் அறிந்துகொண்டாள் உருக்குமணி: உடனே சற்று தைரியம் கொண்டாள்; மனம் சற்று சாந்தியையும் சந்தோஷத்தையும் அடைந்தது. பூஜை செய்துவிட்டுத் திரும்பினாள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தேரில் வந்துகொண்டிருந்தார். பகவான் உருக்குமணியைப் பார்த்ததும் தேரை நிறுத்தி அவளைத் தேரில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார். இங்கே உருக்குமணியை இவ்வாறு அந்தக் கிருஷ்ணன் தைரியமாக வந்து தூக்கிச் செல்கிறாரே என்று பற்பலவாறு பேசிக்கொண்டிருந்தார்கள். சிசுபாலனுக்கு உண்டான ஆத்திரத்திற்கு அளவே இல்லை. என் செய்வான்? உடனே பகவானுடன் சண்டைக்குச் சென்றான். தனக்கு அவமானமானதை நினைத்துத் துக்கித்தான். தனது ஏமாற்றத்தை நினைந்துநினைந்து வருந்தினான். உருக்குமணியின் தமயனாகிய உருக்குமிக்குத் தீராக் கோபம் உண்டாய்விட்டது. தனது இரதங்களையும் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனிடம் யுத்தம் செய்யப் புறப்பட்டான். பகவானைப் பார்த்து "இடையர்கள், இடைச்சிகள் முதலியவர்களை ஏமாற்றியும் அவர்களுக்குத் தெரியாமல் வெண்ணெய் திருடியும் பிழைக்கும்படியான மாடோட்டியாகிய கிருஷ்ணா! உனக்கும் இவ்வளவு தைரியமா? என்னுடைய தங்கையாகிய உருக்குமணியை—இவ்வளவுபேருக்கும் பயப்படாமல்? உன்னை விட்டேனா பார்!" என்று கூறிக்கொண்டு யுத்தம் செய்ய ஆரம்பித்தான். பகவானுக்கும் கோபம் அதிகரிக்கவே சற்று ஓங்கி யுத்தம் செய்ய ஆரம்பித்தார். அவனைக் கொல்லவும் தயாராய் இருந்தார். அச்சமயம் உருக்குமணி பகவானை அணுகி "ஓ! காதலரே! தாங்கள் இவ்வாறு செய்யக்கூடாது. தங்களுக்கே இவ்வளவு கோபம் வந்துவிடுமாயின் எங்கள் கதி என்ன? தங்கள் பிரியத்திற்கு நான் பாத்திரமாகி நீங்கள் இப்படி என்னை அழைத்துச் செல்லுதல் எனக்கு சந்தோஷமேயாயினும் தமயனைக் கொல்லுவித்துப் பிறந்த வீட்டைப் பாழ் செய்தாளென்கிற அபவாதம் என்னைத் தாக்காமல் எப்படியாவது என் தமயனுக்கு உயிர் பிச்சை தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். மன்னிக்கவும்" என்று வேண்டிக்கொள்ள அவ்வாறே பகவானும் அதற்கு இசைந்தார்.

கடைசியில் உருக்குமணியின் பெற்றோரும், உருக்குமியும் உட்பட ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு உருக்குமணியைக் கொடுக்க சம்மதித்தார்கள். எல்லோரும் மிகவும் சந்தோஷத்துடன் உருக்குமணிக்கும் பகவானுக்கும் விவாகத்தை நடத்தினார்கள். எல்லாம் இனிது நிறைவேறியது.

பகவானுடைய சோதனை.

விவாகம் முடிந்ததும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உருக்குமணியைத் தங்கள் இருப்பிடத்திற்குக் கூட்டிச் சென்றனர். ஒரு நாள் இரவு பகவானும் உருக்குமணியும் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள். பகவான் மிருதுவான பஞ்சணை விரித்த ஒரு மஞ்சத்தின்மீது படுத்திருந்தார். தென்றற் காற்றானது ஆனந்தமாக வீசிக்கொண்டிருந்தது. மனதிற்கு மிகவும் இன்பத்தைத் தந்தது. மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய புஷ்பங்களின் நறுமணத்தை அந்த இளங்காற்றானது வாரிக்கொண்டு காதலர்களுக்குக் களிப்பை ஊட்டுவதுபோல் வீசிக்கொண்டிருந்தது.

உருக்குமணி பகவானது தாள்களின்கீழ் உட்கார்ந்திருந்தாள். பாதங்களை உருக்குமணியானவள் தனது புஷ்பத்தினும் மெல்லிய கைகளால் வருடிக்கொண்டிருந்தாள். இவ்வாறு வருடிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவளது நெற்றியினின்றும் நீர்த்துளிகள் கீழே விழுந்தன. அதைத்தனது முந்தானையால் அடிக்கடி துடைத்துக் கொண்டிருந்தாள். இது அவள் படும் கஷ்டத்தை சற்றுதெரிவிப்பதுபோல்தோன்றிற்று.

இந்த நிலைமையைக்கண்டு பகவான் உருக்குமணியைப் பார்த்து "காதலியே! நீ எவ்வாறு இப்பொழுது கஷ்டப்படுகிறாய் பார்! நீயோ உன்னுடைய தகப்பனார் வீட்டில் மிகச் செல்வமாக அன்னம்போல் வளர்க்கப்பட்டவள். கஷ்டம் என்பதைச் சற்றும் நீ அறியாதவள். இவ்வளவு சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்ந்துவந்த நீ என்னை மணந்ததன் ஒரு காரணமாக எவ்வளவு கஷ்டப்படுகிறாய் பார். அவ்வாறு இல்லாது உன் தமயனாகிய உருக்குமியின் இஷ்டப்படி சிசுபாலனை நீ மணக்கச் சம்மதித்திருப்பாயாயின் இந்தக் கஷ்டங்களெல்லாம் நீ படவேண்டியதில்லையே? நீ ஏன் அவ்வாறுசெய்திருக்கக்கூடாது?" என்றுகேட்டார் வேடிக்கைக்காகப் பகவான். இந்தப்பேச்சானது உருக்குமணிக்கு நாராசம்போல் தோன்றிற்று. பகவான் தன்னை வேடிக்கைக்காகப் பரிசோதிக்கிறார் என்பதை அறியாள். உடனே விம்மி விம்மி அழத்தொடங்கினாள். மனவேதனை பொறுக்கமுடியாமல் கட்டிலின்மீது உட்கார்ந்திருந்த உருக்குமணி உடனே மூர்ச்சையாய்க் கீழே விழுந்து விட்டாள். பிறகு பகவான் எடுத்து அவளைத் தேற்றினார்.

இந்த ஒரு வார்த்தையானது உருக்குமணியின் மனதை எவ்வளவு புண்படுத்தியிருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

உருக்குமணியின் சரிதத்தால் நாம் அறிந்துகொள்ளக்கூடிய நீதிகள் இன்னும் பல உள. இடமில்லாத ஒரு வருத்தத்தினால் அவைகளை ஒன்றும் கூறாது இம்மட்டே இவ்வியாஸத்தை முடித்துக்கொண்டு அடுத்தமாதம் 'தமயந்தி'யைப்பற்றி இனிது ஆராய்வோம்.

புருராஜன்.

ஒரு சரித்திர சம்பந்தமான நாடகம்.

ஸ்ரீமான் K. நாராயணஸ்வாமி ராவ், B.A.

(449-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 3.

களம் 4. பாசறையின் ஒரு புறம்.

ஒருவன்:—அப்பா! என்னயுத்தம்! என்ன யுத்தம் அப்பா! இந்த பாரதவீரர்களுடைய தைரியத்தை என்னென்று சொல்லுவேன்! நம்முடைய சேனை அவர்களை நாற்புறமும் சூழ்ந்தபிறகும் அப்பாரத வீரர்கள் என்ன தீரத்துடன் யுத்தஞ்செய்தார்களப்பா; தங்கள் உயிரை யிழந்தாலும் இழக்கின்றார்களேயன்றித் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள போர்க்களத்தி னின்றும் முதுகுகாட்டி ஓடமாட்டேனென்கிறார்களே!

மற்றொருவன்:—வீரர்கள்தான் இவ்வளவு தைரியமுள்ளவர்களெனின் அவர்களுடைய அரசன் என்ன தைரியசாலி தெரியுமா? ஐம்பது யவன வீரர்கள் ஒன்றுசேர்ந்து அவனைச் சிறைப்படுத்துவது இவ்வளவு கடினமாகி விட்டதே!

ஒருவன்:— அதிமாத்திரமா! அப்பா, வணங்காமுடி மன்னன் என்று நான் கேட்கிறேன்! ஆனால் இந்தப் புருராஜனைப் போன்ற வணங்காமுடி மன்னனை நான் ஒருபோதும் கண்டதில்லை. இவனுடைய சேனை முற்றும் அழிந்தும், இவனே கைதுசெய்யப்பட்டிருந்தும், இவன் ஒருவருக்கும் கீழ்ப்படியாமலிருக்கிறானே! அடேயப்பா! அந்த அம்பிராஜனுக்கும் இவனுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! நம் சேனாதிபதியைக் கண்டவுடன் அம்பிராஜன் சாஷ்டாங்கமாகத் தெண்டமிட்டானே. தான் சிறைப்பட்டிருந்தும் புருராஜன் மைத்ரேயன், ஹிரோதத்தன் இவர்களை என்ன இகழ்ச்சியாகப் பேசினான் தெரியுமா?

மற்றொருவன்:— ஏனப்பா, இவன் வணங்காமுடித்தனமெல்லாம் இன்னும் எத்தனை நாள் வாழ்வு! இன்றைக்கோ நாளைக்கோ அவன் கொலையாளியின் வாளுக்கு இரையாவது நிச்சயம். அப்படியிருக்க அவன் வணங்கா முடித்தனம் அவனை எவ்வளவு தூரம் காப்பாற்றுமென்று நினைத்தாய்? அதிருக்கட்டும், நம் சேனா வீரர்களை அவன் எதற்காக இகழ்ந்து பேசவேண்டும்?

ஒருவன்:— சுத்த வீரர்களைப்போல் போர் புரியாமல் இரவிற்கரந்து வந்து நாலா பக்கங்களிலும் தாக்கினோமாம்! அப்படி அயோக்கியத்தனமாகச் சண்டை செய்வதெனில் இவன் இந்தியா முழுவதையுமே மூன்று வாரங்களில் பிடித்து விடுவானாம்! யுத்தத்திற்கும் முறையுண்டென்று என்னென்னமோ சொல்லுகிறானாம்.

மற்றொருவன்:—இவன் என்னவேண்டுமென்றாலும் சொல்லிக்கொண்டிருக்கட்டும். அவனை அலெக்சாண்டர் நாளைப் பொழுதுவிடிவதற்குள் கொன்றுவிடுவது நிச்சயம்! —ஆ! அதோ என்ன ஆரவாரம்? திரண்ட கூட்டமாக இருக்கிறதே!

ஒருவன்:— நண்பா, அந்த புருராஜனைத்தான் நம் சக்கிரவர்த்தி முன்னிலையில் அழைத்துச் செல்கிறார்கள் போலும்! உன் கால் காயப்பட்டிருக்கிறதே; உன்னால் வர முடியுமா? நாமும் சென்று பார்ப்போம்.

மற்றொருவன்:— மெள்ள மெள்ள நடந்து பார்க்கிறேன். அந்தச் சுத்தவீரன் இன்னும் சில நாழிகைகளில் உயிரற்ற பிணமாய் விடுகிறானோ என்னவோ?

ஒருவன்:— எனக்கேதோ அலெக்சாண்டர் அவனைக் கொல்லமாட்டாரென்று தோன்றுகிறது. அவனைக் காயப்படுத்தாமல் பிடிக்க வேண்டுமென்று நமக்குக் கட்டளையிடவில்லையா? அவனுடைய குணம் சத்துருக்களும்கண்டு மெச்சத்தகுந்ததாக இருக்கிறது.

மற்றொருவன்:—சரி, வா. கூட்டத்துடன் கூட்டமாக நாமும்சென்று வேடிக்கை பார்க்கலாம்.

ஒருவன்:—சரி, வா. அவனை ஒரு முறை பார்த்தாலே பேடியும் வீரனாவானென்பதில் ஐயமில்லை.

(செல்லல்.)

(காட்சி முடிகிறது.)

அங்கம் 3.

களம் 5.

இராணுவ ஸ்தலம்.

(அலெக்சாண்டரின் முன் புருராஜன் கைதியாகக் கொண்டுவரப்படல்.)

அலெக்சாண்டர்:— ஹே, கர்வமுள்ள புருராஜரே! இப்பொழுது உமக்குக் கர்வ பங்கம் ஏற்பட்டதா? உம் சைன்யத்தைப் பிரமாதமாகப் புகழ்ந்தீரே. நம்முடைய படைக்கலப் பயிற்சியைப் பரீக்ஷித்தீரா? இப்பொழுது என்ன சொல்லுகிறீர்?

புருராஜன்:— நான் உம்முடைய படைக்கலப் பயிற்சியைப் பரீக்ஷிக்கவே வந்தேன். நீர் சுத்த வீரனென்று தவறுதலாக எண்ணிவிட்டேன். சுத்த வீரர்கள் ஒருவரோடொருவர் யுத்தஞ் செய்வதெனில் நேரில் நின்று கைகலப்பதே யுத்த தர்மமாகும். யவனர்களெல்லோரும் சுத்த வீரர்களென்று எண்ணி மோசம்போனேன். இரவில்கள்வர்களைப்போல் கரந்து வந்து கொள்ளை யடிக்கும் கொடியவர்களென்று நான் கனவிலும் எண்ணவில்லை. அதனாற்றான் எனக்கு இக்கதி சம்பவித்திருக்கிறது. இப்பொழுது வேண்டுமென்றாலும் நாமிருவரும் மல் யுத்தம் செய்வோமா? என்னுடைய பராக்கிரமத்தைப் பாருங்கள்.

அலெக்சாண்டர்:— (தனக்குள்) ஆ! என்னே இவனுடைய மனோதிடம்! இவனன்றோ சுத்தவீரன். (உரக்க) பேசுவதில் நீர் வெகு சாமர்த்தியமுள்ளவராகக் காண்கிறீர். ஆனால் இவ்வண்ணம் கரந்து வந்து ஆற்றைக் கடக்காவிடின் நாங்கள் ஆற்றைக் கடக்கும்பொழுதே எங்களை நாசமாக்கி விடுவீரே யென்று பயந்துதான் இவ்வண்ணம் செய்ய நேர்ந்தது.

புருராஜன்:— மன்ன, நான் தற்காலம் தங்கள் கைதியாகவே யிருப்பினும் என்னுயிரே போனாலும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பாதகனல்லன். தங்கள் பேச்சு எனக்கு வியப்பைத் தருகிறது. சைன்யம் ஆற்றைக் கடக்கும்பொழுது நான் தாக்குவேனென்று தாங்கள் ஏன் நினைக்க வேண்டும்? அப்படிச் செய்தல் வீரர்களுக்கழகாகுமோ? ஒருக்கால் தாங்கள் அப்படிச் செய்யக்கூடியவர்போலும்! ஆதலாற்றான் தங்களுக்கு அவ்விதம் தோன்றியது போலும்! யுத்தம் செய்வதென்றாலும் அதற்கும் யுத்த தர்மங்களில்லையா?

அலெக்சாண்டர்:—(புன்சிறிப்புடன்) யுத்தத்தில் நியாயம் பார்த்தால்முடியுமா? அவரவர்கள் ஜயிக்கக்கூடிய வழியைத் தேடவேண்டியதுதானே?

புருராஜன்:— தாங்கள் சுத்த வீரராக இருந்தும், இவ்வித எண்ணங்களைக் கொண்டிருத்தல் வியப்பாக இருக்கிறது. யுத்தத்திற்கும் நியாயங்களும் தர்மங்களும் ஏற்பட்டிருக்கவில்லையா? யுத்தஞ் செய்ய முறையே யில்லையெனின், தாங்கள் என்னிடம் தூதனுப்பியிருக்கவேண்டாமே. நானும் தங்கள் தூதனை அவமானப்படுத்தி யிருக்கவாவது கொன்றிருக்கவாவது கூடுமே! ஆனால் தங்கள் பேரில் பிசகில்லை. இக்காலத்தில் எல்லோரும் தங்கள் தங்கள் முன்னேற்றத்தையே கோருகிறார்கள். நியாயத்தை யார் கவனிக்கிறார்கள்? பதினைந்து வருஷ காலமாக நான் அன்புடன் பாராட்டி வந்த ஜயதேவனே எனக்குத் துரோகம் செய்துவிடவில்லையா? காலம் கலிகாலமென்பதைமறந்துவிட்டேன். இனித் தங்கள் ஆக்ஞையை எதிர்பார்க்கிறேன்.

அலெக்சாண்டர்:— ஹே புருராஜரே, உம் முடிகுலைந்தும் நீர் உம்முடைய கர்வத்தை யொழிக்கவில்லையே!

புருராஜன்:— என்னுடனுடன் பிறந்தது என்னுயிருடன் தான் போகுமன்றோ? நான் நியாயத்தைத் தானே எடுத்துச் சொன்னேன்.

அலெக்சாண்டர்:— நீர் இப்பொழுது என் கைதியல்லவோ?

புருராஜன்:— அதில் தடையென்ன?

அலெக்சாண்டர்:— யவனர்கள் சத்துருவை உயிருடன் கைது செய்தால் அவர்களை எப்படி நடத்துவது வழக்கமென்பது உமக்குத் தெரியுமோ?

புருராஜன்:— தெரியும்.

அலெக்சாண்டர்:— இப்பொழுது உம்மை நாங்கள் எவ்விதம் நடத்தவேண்டுமென்பது உமது கோரிக்கை?

புருராஜன்:— ஓர் அரசனைப்போலவே.

அலெக்சாண்டர்:— (புருராஜனை அணைத்துக்கொண்டு) ஹே சுத்தவீரரே! மெச்சினேன்! மெச்சினேன்! உம்மைப்போன்ற சுத்த வீரரை நான் கண்டதேயில்லை! நண்பரே, என் நட்பை ஏற்றுக்கொள்ளவேணுமாய்க் கோருகிறேன். நான் உம்முடைய நட்பைப் பெற வேண்டியே உம்மிடம் தூதனுப்பினேனன்றி உம் ராஜ்யத்தை யடையவேண்டியல்ல. இனி இப்பாரத நாட்டில் உம்மை விட எனக்கு ஆப்த நண்பர்கள் கிடையாது. முன் எனக்கு அரசர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை தெரியவில்லை யென்றீர். அது உண்மையே. ஆனால் உம்மைப்போன்ற அரசர்களை நான் கண்டதேயில்லை. அது தான் அதற்குக் காரணம். நீரும் மற்றொரு அம்பிராஜாவாக இருப்பீரென்று எண்ணிவிட்டேன். இதோ உம்முடைய ராஜ்யத்தை உம்மிடமே திருப்பிக் கொடுத்துவிட்டேன். நான் தந்திரத்தால் உம்முடைய சேனையை வென்றேன். ஆனால் நீர் உம்முடைய தீரமான ஒழுக்கத்தால் என் உள்ளத்தையே வென்று விட்டீர்.

புருராஜன்:— (ஆச்சரியத்துடன்) ஆ! மகாராஜ், உம்மைப்போன்ற பெருந்தன்மையுள்ள வீரர்களை நானும் கண்டதில்லை. தங்களுடைய நட்பையடைய நான் என்ன தவம் செய்தேனோ? ஆனால் நாம் இருவரும் நண்பர்களாக இந்தக்கொடிய யுத்தமா காரணமாகவேண்டும்? என் வீரர்களில் 12,000 பேர் மடிந்துவிட்டனரே! நாம் யுத்தம் புரியாமலே நண்பர்களாகி யிருக்கலாமே. ஆ! என்னைத் துரோகம்செய்த என் யானைப்படைத் தலைவன் சுகமாக இருக்க, எனக்காகத் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் யுத்தம் புரிந்த வீரர்கள் மடிவது கலிகாலத்தின் கொடுமையே!

அலெக்சாண்டர்:— புருராஜரே, உம்முடைய கஜதேவனை நான் தகுந்தபடி சிக்ஷித்துவிட்டேன். தாங்கள் பணியும் அரசனைத் துரோகம் செய்தவர்களையும், மன்னனைச் சமரிலே விட்டோடினவர்களையும் அவமானப் படுத்தி யமனுலகுக்கனுப்ப வேண்டுமென்பதே என் கொள்கை. அவ்வாறே கஜதேவனையும் தண்டித்துவிட்டேன்.

புருராஜன்:— ஆ! அப்படியெனில் கஜதேவன் மாண்டுபோனனோ?

அலெக்சாண்டர்:— ஆம்.

புருராஜன்:— அடடா! அவன் தன் காலவித்தியாசத்தால் ராஜத் துரோகியாய்விடினும், அவன் சுத்தவீரன். அவன் துரோகியாக மாறினது மிகவும் ஆச்சரியமே!

அலெக்சாண்டர்:— புருராஜரே! என்னே உம்முடைய பெருந்தன்மை! உம்முடைய நட்பு எனக்குக் கிடைத்தது அதிர்ஷ்டவசமே. இனி நாம் நமது நட்பை மற்ற விதங்களிலும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். புருராஜரே, நான் சொல்வதில் உமக்குக் கோபம் உண்டாகாதெனில் ஒருகேள்விகேட்கப் பிரியப்படுகிறேன்.

புருராஜன்:— எனக்கு அகௌரவமில்லாத எந்தக் கேள்வி கேட்டாலும் நான் எதற்காகக் கோபித்துக்கொள்ளவேண்டும்?

அலெக்சாண்டர்:— உமக்குக் கலியாணமாயிற்றோ?

புருராஜன்:— இல்லை. ஏன்?

அலெக்சாண்டர்:— நம் யவனமாதொருத்தியைத் தாங்கள் மணஞ்செய்து கொண்டால் நம் நட்பு நிலைத்திருக்குமே யென்று எண்ணினேன்.

புருராஜன்:— மகாராஜ், மெத்த சந்தோஷம். என் மனதுக்குவந்த ஓர் உயர்குல யவனமாதை மணஞ்செய்து கொள்வதில் எனக்கு ஆக்ஷேபமில்லை.

அலெக்சாண்டர்:— ஆ! மெத்தசந்தோஷம். இப்பொழுதுதான் உம்முடைய நட்பை முற்றிலுமடைந்தேன். ஏ! ஹிரோதத்தா, பாலினி, மைத்ரேயா, புருமகாராஜாவுக்கு மரியாதை செய்யும்படி நம் சேனையைத் திட்டம் செய்யுங்கள். (போர்வீரர்கள் ஏகோபித்துத் தங்கள் படைக்கலங்களைச் சப்தித்து ஜயஜய வென்றுகோஷஞ் செய்தல்).

அலெக்சாண்டர்:— வாருங்கள். எல்லோரும் புருமகாராஜரை சகல மரியாதைகளுடன் அவர் தலைநகருக்கு அழைத்துச் செல்வோம். அதற்குமுன் எல்லோருமாக புருமகாராஜரை வாழ்த்துவோம்!

அலெக்சாண்டரும் மற்றெல்லோரும்:— ஜய! விஜயீபவா! ஜய! விஜயீபவா! ஜய! விஜயீபவா!

(காட்சி முடிகிறது.)

[முற்றிற்று.]

சுபம்! சுபம்! சுபம்!

நீங்கள் யார்?

ஸ்ரீமான் T. S. K. ஸ்வாமி.

நீங்களின்று ஒன்றுமறியாக் குழந்தைகளாயிருக்கின்றீர்கள். நாளைப்பாலிகைகளாவீர்கள். இன்னும் இரண்டு நாட்களிற் பெண்களாவீர்கள். நாலு நாட்களில் நீங்களும் ஸ்திரீகளாவீர்கள். இன்றோ தோஷமற்ற பாலிய சேஷ்டைகளைச்செய்து உங்கள் பெற்றோர்களது வீடுகளில் ஆனந்தமாய்க் காலத்தைக் கழித்து வருகிறீர்கள். உங்கள் சகோதர சகோதரிகளோடும், அக்கம் பக்கத்து வீட்டிலுள்ளவர்களோடும் சிரித்தும், விளையாடியும் சுகமாய்க் காலம் கழிக்கின்றீர்கள். புக்ககத்திற்குச் சென்றபின்னரும் உமது சத்குணங்களால் அங்கும் ஆனந்தமயமாகச் செய்வீர்கள். பிறகு நீங்கள் புத்திரவதிகளாகி உமது சொந்த வீடுகளையும் சந்தோஷப்படுத்துவீர்கள் என்பதிலையமில்லை. உலகத்திற்குச் சுகத்தைக் கொடுக்கக் கருதியே ஈசுவரன் உங்களை சிருஷ்டி செய்திருக்கிறார். ஆனந்தம், சௌக்கியம், பாக்கியம் இவைகளை நீங்களே பூர்ணமாகக் கொடுக்கக் கூடியவர்கள். இவைகளை உண்டுசெய்யுந் திறமையும் உங்களி

டமே யிருக்கின்றது. ஆனால் இவைகளை யாரறிவர் ?

இவ்வுலகம் ஒரு நாடகமேடை. சம்சாரம் ஒரு நாடகம். ஜனங்களோ அந்த நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள். நன்றாய் வேஷங்களைத் தரித்து உத்தம ரீதியுடன் நடிப்பவர்களுக்கு நாடகமேடையில் நல்ல கீர்த்தி கிடைப்பதுமன்றி, அவர்களால் நாடகத்திற்கும் நல்ல பெயருண்டாகின்றது. பிரிய சகோதரிகளே ! உலக ரூபமாயிருக்கும் நாடகமேடையில் சம்சார ரூபமாயிருக்கும் நாடகத்தில் நீங்களும் பற்பல வேஷங்களைத் தரித்து நடிக்கவேண்டுமென்பதை அறிந்தீர்களா ?

புருஷ பாத்திரங்களாலல்லாது ஸ்திரீ பாத்திரங்களாலேயே நாடகத்திற்கு ஜீவனும் சாரமுமுண்டாகின்றது. ஸ்திரீபாத்திரங்கள் தங்கள் காரியங்களை அழகாய் அபிநயித்து உத்தம ரீதியுடன் நடிக்கும் பக்ஷத்தில், நாடகம் நன்றாயிருப்பதுமன்றி அதைப்பார்ப்பவர்களுக்கும் பிரீதியுண்டாகும். இந்த உலக ரூபமாயிருக்கும் அரங்கமேடையில் சம்சார ரூபமாயிருக்கும் நாடகத்திற்கு ஸ்திரீகளின் யோக்கியதையினாலேயே மேன்மையும் கண்ணியமும் உயர்வுமுண்டாகின்றன. இதுமாத்திரமல்ல. இந்த நாடகத்தில் இவர்கள் சமயோசிதமாய் வேஷந்தரித்து நடிக்கும்பக்ஷத்தில் நாடகத்திற்கு நற்கீர்த்தி கிடைக்கின்றது.

பிறந்த அகத்தில் சஞ்சலபுத்தியுள்ள பாலிகைகளின் வேஷந்தரித்து உங்கள் பெற்றோர்களையும் சகோதர சகோதரிகளையும் சந்தோஷப்படுத்தவேண்டியிருக்கிறது. புக்ககத்தில் நாட்டுப் பெண், ஓர்ப்படி முதலிய வேஷங்களைத் தரிக்கவேண்டிவரும். பிறகு சொந்தவீடுகளில் கிரமப்படி பத்தினீ, கிருஹிணீ, தாய், மாமியார் முதலிய வேஷங்களைத் தரிக்கவேண்டும். வேஷந்தரிப்பது ஓர் ஆசாமியேயாயினும், வேஷமும் வேஷத்தின் காரியமும் அநேகமாயிருப்பதால், மிகக் கடினமே. இவ்வளவு வேஷங்களையும் சரியாய்த் தரித்துக் காரியங்களையும் சரியாயறிந்தாலல்லாது நாடகத்திற்கு ஜீவனுண்டாகாது. இவ்வேஷங்களில் நீங்கள் செவ்வனே நடித்தால் எல்லோரும் உங்களைப் புகழுவார்கள். நாடகத்திற்கு நல்ல பெயருண்டாகும்.

இந்த உலகரூப நாடகமேடையில் சம்சார ரூப நாடகத்தில் வேஷந்தரித்து அபிநயிக்க வேண்டுமாயின் காளிதாசன், பவபூதி, ஷெல்லி, பைரன், ஷேக்ஸ்பியர் முதலிய நாடக கர்த்தாக்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியது யாதொன்றுமில்லை. இரவும் பகலும் உங்கள் நேத்திரங்களுக்கு முன் நிற்கும் சம்சாரமே உங்களுக்கு வேண்டியவற்றைக் கற்றுக் கொடுக்கும். இந்த சம்சாரத்தில் மனதைச் செலுத்தியிருந்து, ஒவ்வொரு காரியத்தையும் மனப்பூர்வமாய் அப்பியாசஞ் செய்துவந்தால் உங்களது வேஷங்களைத் தகுந்தபடி தரித்து நடிக்கலாம். ஆனால் எப்போதும் கண்களையும் காதுகளையும் திறந்தே வைத்திருக்கவேண்டும். அந்தக்கரண சுத்தியாயிருக்கவேண்டும். இப்படிச்செய்யுங்கால், நீங்கள் உட்காரும்பொழுதும், நிற்கும்பொழுதும், தூங்கும்பொழுதும், உண்ணும்பொழுதும், எக்காரியத்தைச் செய்யும்பொழுதும் சம்சாரத்தில் நீங்கள் வேண்டியதைக் கற்றுக்கொள்ள வழியுண்டு.

சம்சாரத்தில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களிலும் நீங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் உலக நடவடிக்கைகளைச் சம்சயமின்றிக் கற்றுக்கொள்ளலாம். நற்கிரந்தங்களை வாசிப்பதால் சம்சாரத்தில் நல்ல மார்க்கத்தைக் கைப்பற்றலாம். நல்ல கிரந்தங்களில் சகவாசம் வேண்டுமாயின் எழுதவும் படிக்கவுங் கற்றுக்கொள்ளுவது அவசியமே. ஒவ்வொரு ஸ்திரீயும் உயர்ந்த வழியில்

சம்சாரத்தைச் சுகமாய் நடத்தவேண்டுமாயின் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளுவது அத்யந்த அவசியமே. அப்பொழுதே நீங்கள் பிறந்த வீட்டில் நல்லபுத்திரியாகவும், புகுந்த வீட்டில் நற்பத்தினியாகவும், கிருஹிணியாகவும், பிறகு புத்திரவதியானபின் நல்ல தாயாராகவும் ஆகலாம்.

பிரிய சகோதரிகளே ! ஈச்வரனது விசேஷ அநுக்கிரஹத்தால் நீங்கள் ஸ்திரீகளது ஜன்மத்தையடைந்து தன்யர்களாயிருக்கிறீர்கள். தேசத்திற்கு ஆதார ஸ்தம்பங்களாயிருக்கும் பிரஜைகளை நிர்மாணிப்பவர்கள் நீங்களே. இது மாத்திரமல்லாது அவர்களை தேசபலிஷ்டர்களாகச் செய்வதற்கும், உன்னத மனத்தோடிருக்கக் கற்பிப்பதற்கும், நற்கீர்த்தியைச் சம்பாதித்து மஹத்தான காரியங்களைச் செய்யத் தூண்டுவதற்கும், உங்களது கரங்களிலேயே வேண்டிய சக்திகள் அடங்கியிருக்கின்றன. தேசத்தை உன்னத தசைக்குக் கொண்டுவரும் சாமர்த்தியம், பாக்கியத்தை அதிகரிக்கும் சக்தி, இவைகளைப் பரமேச்வரன் உங்களது கையிலேயே வைத்திருக்கிறான். ஆகையால் உங்களது ஜன்மமே சிரேஷ்டமென்பதிற் சந்தேகஞ் சிறிதளவுமில்லை. இந்த உன்னதப் பதவியைப் பரிபாலிக்கும் பொருட்டுக் குழந்தைப் பருவமுதல் சாந்தமுடனும் பொருமையுடனுமிருக்க வேண்டுமென்பதை நீங்கள் எப்பொழுதாவது யோசித்துப் பார்த்தீர்களா? உங்கள் பொருப்பான காரியத்தைச் சரிவரவும் நல்வழியிலும் நிர்வகிக்க வேண்டியிருப்பதால், புருஷர்களைவிட உயர்ந்தகல்வியை நீங்கள் சம்பாதித்திருக்க வேண்டும் என்பதை யுணருங்கள். தற்காலம் வழங்கும் ஆடவரின் கல்வியால் நீங்கள் உங்களுக்கேற்ற பயிர்ச்சியை யடையவே முடியாது இருப்பதை நன்கு கவனித்தீர்களா? பெருமையும் பொறுப்பும் வாய்த்திருக்கும் உங்கள் மேன்மையான நேரத்தை ஆடவர்களைப்போலக் கல்விச் சாலைகளில் நெடுநாள் செலவழிக்க முடியாதென்பதை சிந்தித்தீர்களா ?

சிறுபிராயமுதற்கொண்டே, அதாவது பெற்றோர் வீட்டிலிருக்கும்பொழுதே, நீங்கள் கல்வி கற்க ஆரம்பிக்கவேண்டும். பெற்றோர்களது வீட்டில் நல்ல புத்திரி, பத்தினீ, தாய் முதலிய வேஷங்களை அப்பியசித்து, கணவனது வீட்டிற்குச் சென்றபிறகும் அவ்வப்பியாசங்களைச் செய்துவரவேண்டும். ஈச்வரனது ஆசீர்வாதத்தால் உங்களது வயிற்றில் புத்திர ரத்தினங்களுண்டாகும் பக்ஷத்தில் நீங்கள் அவர்களுக்கும் இவ்விதமான பயிற்சியையே கொடுக்கவேண்டும் புத்திரவதிகளானபின் நீங்கள் சுமக்கவேண்டிய பாரத்தை யோசித்துப் பாருங்கள். அச்சுபதினம் முதற்கொண்டு நீங்களே உங்களுக்குக் குரு. சந்ததிக்கும் நீங்களே குரு. இதுவுமன்றி தேசத்திற்கே குரு. நீங்கள் எவ்விதமாய் நடந்து சந்ததிகளைக் கற்பிக்கிறீர்களோ அவ்விதமாகவே தேசத்திற்கும் நன்மை ஏற்படுகின்றது.

ஜானகி குமாரன், பார்வதி குமாரன், பாகீரதி குமாரன், இவ்விதமாகவே யசோதை, காவேரி, கோதாவரி முதலிய ஸ்திரீகளது குமாரர்களெல்லாம் கண்ணிய முள்ளவர்களாகவும் நல்லவர்களென்று புகழ்பெற்று மிருக்கிறார்கள். இப்பெருமை தாய்மார்களுக்கே யான்றோ ? ராதாவின் குமாரன் வாசுதேவன் தனது தாயின் மேன்பார்வையால் மிக்கக் கீர்த்தியடைந்துள்ளான். பார்வதி குமாரன் கோபாலன், கோமதி குமாரன் கணபதி, சுந்தரி குமாரன் கிருஷ்ணன் முதலியவர்கள் தம்தம் தாய்களின் நற்போதனையால் நல்ல பதவிக்கு வந்திருக்கிறார்கள் என்று ஒவ்வொருவரும் சொல்லுவார்கள். நல்ல வழியிற் போதனை செய்யும் பக்ஷத்தில், அவர்கள் அக்குடும்

பங்களுக்குக் கீர்த்தியைச் சம்பாதிப்பதுமன்றி, ஊருக்கும் நல்ல பெயரைக் கொடுக்கின்றார்கள். உங்கள் ஊர் எவ்விதமாய் உன்னத பதவிக்கு வந்ததென்பதைப் பார்த்து அருகிலுள்ள ஊர்களும் உன்னத பதவிக்கு வர எண்ணும்பொழுது, தேசம் ஏன் விருத்தியடையாமலிருக்கும்? சகோதரிகளே! உங்களது குழந்தைகள், சபைகள், ஊர்கள், தேசம் இவைகளை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவருவது உங்கள் கரத்திலேயே யிருக்கிறது.

சிவாஜியின் தாய் ஜீஜாபாய் சிவாஜியைப் பெற்று மஹாராஷ்டிர தேசத்திற்குக் கீர்த்தியையும், அழியாப் புகழையும் வருவித்தாள். நெபோலியன் போனபார்ட்டின் தாய் நெபோலியனை ஈன்றதினாலேயே அவளது ஜன்மம் சார்த்தகமாயிற்று. பிரிய சகோதரிகளே! நீங்களும் அவ்விதமாகவே ராஜா ராம் மோஹன் ராய், பாபு பங்கிம் சந்திர சாடர்ஜீ, மைக்கேல் மதுசூதன், பாபு ரொமேஷ் சந்திர தத், மகரிஷி ரபீந்தரநாத் டாகூர், தேவேந்திரநாத் டாகூர், ஸ்வாமி விவேகானந்தர், ஸ்வாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி, நியாயமூர்த்தி காசிநாத திரியம்பக் டிலங், நியாயமூர்த்தி மஹாதேவ கோவிந்த ரானடே, நியாயமூர்த்தி ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர், பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மெத்தா, ராஜா ஸர் டி. மாதவ ராவ், மஹாத்மா காந்தி முதலிய நர ரத்தினங்களைப்போல் புத்திரர்களைப் பெற்று, தேசத்திற்கு நன்மையை உண்டாக்குங்கள். இப்படிப்பட்ட நர ரத்தினங்களைப் பெறும் தாய்களை உண்டாக்க ஒவ்வொரு தேசமும் வழிதேடவேண்டும். முயற்சி செய்யும்பக்ஷத்தில் நீங்களும் கீர்த்தியுடன் நல்ல தாய்மாராகலாம்.

நல்ல தாயாகவேண்டினால் குழந்தைமுதற்கொண்டு விரதம் ஆரம்பிக்கவேண்டும். உங்களது பெற்றோர்களது வீட்டில் இந்த மஹா விரதத்தை ஆரம்பஞ்செய்து, பதியின் கிரஹத்திற்குச் சென்றபிறகு இந்தவிரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். இந்த விரதத்திற்குப் பெற்றோர்வீட்டில் தாய், தந்தை, சகோதர சகோதரிகள், பதியின் வீட்டில் பதி, மாமனார், மாமியார், மைத்துனர், நாத்தனார், ஓர்ப்படிகள் இவர்களது சகாயங் கிடைக்கும். குழந்தைப் பருவத்தில் நடந்த விளையாட்டுகளை மறந்துவிடவேண்டும். சஞ்சல புத்தியை ஒழிக்கவேண்டும். நன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். கெடுதியைக் கனவிலுங் கருதாதிருக்க வேண்டும். நல்ல சந்ததிகளைக் கொடுக்கும்படி பரமேச்வரனை இரவும் பகலும் சிந்தியுங்கள். பகவானும் உங்களது விரதத்தைப் பூர்த்தி செய்வார். உங்களது கர்ப்பத்தில் நர ரத்தினங்கள் ஜனிக்குமென்பதிற் சந்தேகமில்லை. உங்களது வாழ்க்கைக்குச் சாபல்ய முண்டாகும். குலத்திற்குக் கீர்த்தியுண்டாகும். தேசமும் விர்த்தியடையும்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

கதையாம் கதை.

ஒரு சிறு கதை.

நான் சொல்லப்போவது கதையுமன்று, கட்டுரையுமன்று; ஆனால் உண்மையுரையென்றாலோ அதுவுமாகா. பின்னையென்னவென்றாலோ நிஜமுமில்லை, பொய்யுமில்லை, நடந்ததுமில்லை, நடவாததுமில்லை. இதுதான் சொல்லமுடியும். மேலே கேட்காதீர்கள்! போனால் போகிறதென்று நான் சொல்லுகிறேன். வாய் பொத்தி நின்று கேட்டுப்போங்கள்.

விசாலாக்ஷிக்கு வயது பதினேழு, பதினெட்டு இருக்கலாம். அவளுக்கு நான்கு ஐந்து வயதுள்ள ஒரு குழந்தையுண்டு. இருவருமாக வீட்டின் பின்புறத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தனர். தாயார் ராத்திரி சமையலுக்கு வேண்டிய கறிகாய்களை ஆய்ந்து நறுக்கிக்கொண்டிருக்க அச்சிறுவனவன் பக்கத்தில் உட்கார்ந்து காய்கறிகளினின்று உதவாததென நறுக்கி எறியப்பட்ட காம்புகளையும் மேற் தோல்களையும் வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். பாலகன் முகத்தில் யாதொரு மாசு மருவுமின்றிக் கண்ணுக்கு வெகு அழகாய் துறுதுறு எனக் கைக்குக் கிடைத்த காம்புகளை அடுக்கி விதவிதமான உருவங்களாய் அமைப்பதும் அவற்றைக் கலைப்பதுமாயிருந்தான். தாயாரோவெனில் கையானது பரபரவென்று காய்களை நறுக்கிக்கொண்டிருக்கக் கண்களில் நீர்மல்கப் புறக்கடையிலோடும் சால்வாய்ப் பக்கம் சோர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தேகம் அப்போது இளைத்திருந்தாலும் ஒரு காலத்தில் நல்ல கட்டுச் சரீரமாக இருந்திருக்க வேண்டுமென்றும் இனியும் முகத்தில் தற்போது காணப்படும் கவலைக்குறி நீங்குமானால் தேகம் பழைய ஸ்திதிக்கு வந்துவிடக்கூடுமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாகும்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கறிகாய்களெல்லாம் நறுக்கியாய் விட்டது. பக்கத்தில் எருமுட்டையில் மூட்டப்பட்ட நெருப்பும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அஸ்தமிப்பதற்கு இன்னும் சற்றுப் பொழுதே இருந்தது. அவள் இருந்த இடம் குக்கிராமம். பொழுது போனால் விளக்கு ஏற்றுவதும் இலை போடுவதும் அநேகமாய் ஒரே காலத்தில் நடந்துவிடும். மணி கிட்டத் தட்ட ஆறாய் விட்டது. காயை நறுக்கி வைத்தவள் பரபரவென்று பக்கத்திலிருக்கும் நெருப்பை அடுப்பிலிட்டுச் சமையல் செய்யத் தொடங்காமல் அரிவாள்மணையின்மீது உட்கார்ந்த வண்ணமே சற்று நேரம் இருந்து அருகிலிருந்த குழந்தையை எட்டியிழுத்து அணைத்துக்கொண்டு அடிக்கடி அதன் முகத்தை உற்று நோக்கியபடி இருந்தாள். அவள் முகத்தில் சந்தோஷக் குறிபொன்றும் தென்படவில்லை. கண்களில் ஜலம் ததும்பிக் கொண்டிருந்தது.

தன்னைக் கட்டி மறுபடியும் மறுபடியும் அணைத்துக் கொள்வதின் அர்த்தம் அச்சிறுவனுக்குப் புலப்படவில்லை. ஆனால் தாயார் அணைத்துக்கொள்வதும் அவ்வாறு அணைத்துக்கொண்டவுடன் இறுகத்தழுவிய நிலையை விடாமல் அப்படியே சற்று ஒன்றுஞ் செய்யாமல் ஸ்தம்பித்து நிற்பதையுங் காண, அச்சிறுவனுடைய மனதில் என்னதோன்றிற்றோ? உடனே அவன் தன் விளையாட்டு முகத்தை மாற்றித் தாயாரிடம் பரிவும் இரக்கமுங் கொண்டவன் போல் தானும் எந்த வஸ்துவையுங் குறித்துப் பார்க்காமல் கீழ் நோக்கி ஒரே பார்வையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். சூரியனுடைய ரத்த வர்ணமான கோளம் சுற்றியிருக்கும் மேக மண்டலங்களையும் அதற்கு நேரே இருக்கும் நடுவானங் கீழ் வானம் யாவற்றையும் பற்பல நிறங்களுடன் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தது. விசாலாக்ஷி மெள்ள மெள்ளத் தன் கைகளைக் கீழே நழுவ விட்டுப் பக்கத்திலிருந்த நெருப்பைக் கையிலெடுத்துக்கொண்டு சூத்திரப் பதுமை போல் சுரணையற்றுச் சமையலறைப் பக்கம் போயினள். சிறுவனும் சற்று வாடிய முகத்துடன் நின்றுவிட்டு உடனே ஏதோ விளையாட்டு ஞாபகம் வரத் தெருப்பக்கம் ஓடிப்போய்விட்டான்.

கூடத்திலிருந்து விசாலாக்ஷியின் தாயார் "அடி, குழந்தாய், பொழுது போயிற்றே; நெருப்பு மூட்டக்கூடாதா? என்றைக்குத்தான் நீ மூஞ்சியைத் தொங்கப் போடாமல் இருக்கப் போகிறாயோ? வெறுமனே கவலைப்படுவதினால் என்ன லாபம்? ஈச்வரன் கண்ணைத் திறந்து பார்க்கவேண்டும். அவன் என்னமோ நல்ல பிள்ளைதான், நம்ப அதிர்ஷ்டம் இப்படியிருக்கிறது. போனால் போகிறது, உன் தலைவிதிப்படியாகிறதென்று அனுப்பிவிடலாமென்றாலோ தைரியம் உண்டாகவில்லையே. நீ போகிறேனென்று சொன்னாலும் எங்களுக்கு மனம் வரவில்லையே. இத்தனை புருஷப் பசங்களுக்கு நடுவிலே நீ ஒரு பெண் குழந்தை. உன்னையனுப்பிவிட்டு நாங்கள் எப்படியிருப்பது? பட்டணத்துக்குப் போகலாம். இந்த அரிசி பருப்பை வைத்துக்கொண்டு அங்கேதான் நம் வீட்டில் வசித்துக் கொண்டிருக்கலாம். அங்கே வந்து இருந்துவிடேன் என்றால்மாட்டேனென்கிறான்."

விசாலாக்ஷியின் தகப்பனார் தெருத் திண்ணையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார். அவர் மனைவி கூடத்திலிருந்து தெருப் பக்கம் வந்தாள். "லக்ஷ்மணனுக்கும் டாக்டர் பரீக்ஷைதான் தேறிவிட்டதாமே. இனிமேல் எங்கே போகப் போகிறானும்? ஏன் பட்டணத்தில் தம் அகத்தில் போர்டு போட்டு டாக்டர் வேலை பார்க்கக்கூடாது? அதெல்லாம் அவனுக்குப் பிடிக்குமா? பெரிய சிங்கநாதமாச்சே! அக்கா வரவேணும்; தங்கை வரவேணும்; இன்னும் பெரியப்பா வரவேணும்; எல்லாரையும் கூட்டி உட்கார வைத்துக்கொண்டு நம்ம விசாலம் வடித்து வற்றல் குழம்பு இடவேண்டுமாம்? குழந்தை உடம்பு என்னத்துக்காகும்? இல்லாவிட்டால், ஊரில்போய் அப்பா அம்மாவோடு இருக்கவேண்டுமாம். ஏனென்றால் ஊரில் வேலையே இல்லையே; மாட்டிலே ஒரு ஒன்பது மாடாச்சு. ஆள்காரனிலே பத்து ஆளாச்சு. மாமியார் மாமனார்தான் வயதானவர்கள். புஷ்பத்தைக் கொண்டு அர்ச்சனை செய்யவேண்டும். இப்படிக்கெல்லாம் ஆடிக்கொண்டிருந்தால் அப்புறம் விசாலம், விசாலமென விசாலத்தைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொள்வானா? நன்னா ஆச்சு!"

"ஏண்டி, நாம்தான் எத்தனையோ தாம் சொல்லியாயிற்று. நேரிலேயும் சொன்னோம். அவனுக்கு வேண்டியவர்களைக் கொண்டும் சொல்லச் சொன்னோம். அவன்தான் ஒரே பிடிவாதமாக மாட்டேனென்கிறானே! எத்தனை நாள் குழந்தை நம்மண்டையிருப்பாள். அவள் அகமுடையானிடம் போய் இருக்கவேண்டாமா? இப்படியே இருந்து விட்டால் நாம் என்ன சாசு

வதம்? நாம் கண்ணை மூடிக்கொண்டால் அவள் கதியென்ன?" என்றார் தகப்பனார்.

"கதியென்ன கதி, இருக்கிறதை வைத்துக் கொண்டு ஸம்ப்ரமமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாள். இல்லாவிட்டால் அவளைப் போய் அந்தப் பாழும் வீட்டிலேயே மடியச் சொல்கிறீர்களா? நமக்குத்தான் அம்பதினாயிரத்துக்குக் குறைவில்லை யென்கிறீர்களே. அவளுக்கென்ன, சந்தோஷமாயிருக்கிறாள். நான் கூட ஒவ்வொரு வேளை அனுப்பிவிடலாமா என்று தான் நினைத்துக்கொள்கிறேன். ஆனால் அது எப்படி முடியும்? நம்ம குழந்தை நம்ம இடத்தில்தான் இருக்கவேண்டும். வேணுமானால் அப்பப்போ வந்துகொண்டு போய்க் கொண்டிருக்கிறான்."

"அது தான் நடப்பதில்லையே. ஏன் வீண் பிடிவாதம் பிடிக்கிறாய்? என்னமோ பரீக்ஷையாய் விட்டது. இனிமேல் அவன் ஸம்பாதிப்பதென்று ஏற்படும். அப்போது நம்ம குழந்தைக்குக் கொஞ்சம் மரியாதை ஏற்படும்."

"ஆஹா அந்த வீட்டிலா? நன்றாய் வாழலாம். உங்களுக்கேனோ இப்படிப் புத்திகெட்டுப் போகிறது. மனதைத்தான் ஒருமாதிரி தீர்மானம் பண்ணிக்கொண்டு விட்டோம். நடுவிலே யாராவது ஒவ்வொன்று சொல்லிக்கொண்டிருந்தால் அதைக் கேட்டுக்கொண்டு இப்படியேன் கூத்தாடுகிறீர்கள்? இந்த விஷயத்தில் நீங்கள் பேசாதிருங்கள். இது பெண்கள் விவகாரம். புருஷாளுக்குத் தெரியாது. நச்சு, நச்சென்று பேசிக்கொண்டிராதேயுங்கள்."

"சரிதான், சரிதான்; ஈச்வரன் விட்ட வழியாகிறது. நீ சொல்வதைப் பார்த்தால் ஒரு விஷயத்துக்குச் சரியாய்த்தான் தோன்றுகின்றது" என்று சொல்லிப் பெரியவர் ஸந்தியவந்தனத்திற்குக் குளத்துக்குப் போய்விட்டார்.

நாராயண அய்யரும், ஈசுவரய்யரும்.

குளத்தங்கரையில் நமது நாராயணய்யருக்கு ரொம்ப ஸ்நேஹிதமான ஈசுவரய்யர் ஸந்தியாவந்தனஞ் செய்து ஜபத்துக்கு உட்காரப்போகிற சமயம். நமது நாராயணய்யரும் கைகால் சுத்தி செய்து கொண்டு ஈச்வரய்யரிடம் சிறிது விபூதிக்காகவந்தார். ஈச்வரய்யர் ஸம்படத்தை யெடுத்து விபூதியை நாராயணய்யர் கையில் போட்டுக் கொண்டு "என்னடா நாராயணா, என்னமோ கேள்விப்பட்டேனே. உன் மாப்பிள்ளை லக்ஷ்மணனென்னமோ சீமைக்குப்போய் மேலே பெரிய டாக்டர் படிப்புப் படிக்கப்போகிறானாம். யாரோ நம்ம ஜாதியில்லை; நம்ம குலங்கோத்திரமில்லை. பெரிய உத்தியோகத்திலிருக்கிறாராம். பெண் மெட்ரிகுலேஷன் படிக்கிறாளாம். அவர் என்னமோ மேற் கண்ட படிப்புக்குச் சீமைக்குச் செல்வதற்குப் பணம் தருவதாகச் சொன்னாராம். இது என்னடா கூத்து! இதெல்லாம் நன்றாயில்லையே. நான் சொல்கிறேனெனக் கோபம் வேண்டாம். என்றைக்கும் கொண்டவன் சாக்குக் கொண்டவனைத்தான் அடைய வேண்டும். அதுவும் பால்யம். அவனும் பையன் நல்லவன்; நம்ம விசாலமும் நல்ல புத்திசாலி. என்னதான் நம் அகத்துக்குக் குழந்தையாயிருந்தாலென்ன? அதுகளுக்கு இறக்கை முளைத்தால் பறந்துபோக வேண்டியது தானே. உனக்காவது நாலைந்து பசங்கள். எனக்கு ஒரே பெண்தான்: ரொம்ப ஆசைதான். அவளை என் வீட்டிலேயே என் செல்வக் குழந்தையாயிருந்துவிடு என்று நிறுத்திக்கொண்டு விட்டால் அவளுக்கு என்ன சுகமாயிற்று? எந்தெந்த வயதில் எங்கெங்கே இருக்கவேண்டுமோ அங்கங்கே இருந்தால் தானே நியாயமாயிருக்கும். அதுதான் இல்லையெனில், என்னடா சாசுவதம் நீயும் நானும்! கல்லாலடிச்சு வைக்கப்பட்டிருக்கோமா? நீ கண்ணை மூடிக்கொண்டால் அப்போது விசாலம் அவனண்டைபோய் நின்றால் அவர்கள் ஏச மாட்டார்களா? கொஞ்சங்கூட நன்றாயில்லை. உலகத்தார் என்ன சொல்லமாட்டார்கள்?

"இன்னும் பத்து வருஷங் கழித்து அவர்களுக்கும் புத்திவருவதென்று வைத்துக் கொள்வோம். இத்தனை நாட்கள் தூர இருந்துவிட்டு அப்போ போய் திடீரென ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய் வாழமுடியுமா? ஸ்திரீ ஜாதிக் கொன்றுந்தெரியாது. இன்றைக்கு இப்படிச் சொல்லுவார்கள். நாளைக்கு லக்ஷ்மணனுக்கு வேறு கலியாணம் ஆய்விட்டதென்றால், அப்பவும் வந்து 'நான்தான் பெண்ஜன்மம், பின்புத்தி; உங்கள்புத்தி எங்கேபோயிற்று. குழந்தை கதி இப்படியாயிற்றே! அடுத்தாத்து ஈசுவராதாதா கூடச் சொன்னாராமே. விலாசத்தை அப்போதே கொண்டுவிட்டு விட்டிருந்தால் இப்படிக் கண்ணுங் கண்ணீருமாய் நிற்கவேண்டாமே? எல்லாம் உங்களால்தான் குட்டிச்சுவராயிற்று' என்று தூறுவார்கள். யோசித்துப்பார். நான் என்னமோ என் மனதிலிருப்பதை யதார்த்தமாய்ச் சொல்லிவிட்டேன். உன் பந்துக்கள் ஒருவரும் இப்படிச் சொல்ல மாட்டார்கள். 'அதைத்தான் சொல்லி நாம் என் நிஷ்டூரப்படவேண்டும். நம்மைக்கேட்டால் சரிதான் அம்மா! குழந்தையை அப்படி எப்படி அனுப்பிவிட முடியும்? சொல்கிறவர்களுக்கென்ன? சுலபமாய் சொல்லிவிடுவார்கள். நேரில் பட்டாலல்லவோ தெரியும்' என்று முகஸ்துதியாய் இப்போது சொல்லிவிட்டு நாளைக்கு 'வேண்டும் இவளுக்கு' என்பார்கள்.

"'அதிசியமாய் இவள்தான் பெண்ணைப்பெற்றுவிட்டாளாம். நாமெல்லாம் பெண்ணை வைத்துக்கொண்டிருக்கவில்லையா? நம்ம பெண்கள் வாழ்க்கைப்பட்டிருக்கு மிடங்களிலெல்லாம் மெத்தையும் மாடியும் ஆள்காரருமாக இருந்து அகமுடையான் பெண்சாதி இரண்டுபேர் தான் குடித்தனம் பண்ணுகிறார்களோ? என்னமோ இல்லாத அதிசயம்! மலையில் விளைந்தாலும் குந்தாணியில் வந்துதானே மசிந்தாகவேண்டும். அப்போது புத்தியில்லாமல் இருந்தால் இப்போது அனுபவிக்கிறார்கள். அதற்கு யாரென்ன செய்கிறது? ஆனால் விசாலம் நல்ல பெண். தாயார் தகப்பனார் வார்த்தையைக் கேட்டு இப்படி அவஸ்தைப்பட வேண்டியதாயிற்று. அவளுக்கு இந்த மாதிரி கஷ்டப்படவேண்டியதில்லை. விதி யாரை விட்டது; ஒன்றான ஈசுவரனை விட்டதா' என்று இரண்டு வார்த்தைகள் சொல்லிவிட்டு 'அம்மா! கிணற்றுத் தவளைக்கு நாட்டு சமாசாரமென்னத்துக்கு, அவரவர்கள் அசத்து சமாசாரம் அவரவர் வீட்டுடன் இருக்கிறது நம் அகத்துப் பொறிதான் நமக்கு தலைமேல் இருக்கிறதே!' என்று பேசி விடுவார்கள்.

"ஆகையினால் இதெல்லாம் ஸ்வயமாய் யோசித்துச் செய்யவேண்டும். அடே நாராயணா! கடைசியாகச் சொல்கிறேன் கேள்; விசாலம் நல்ல குழந்தை; இப்படியே இருந்துவிட்டால் பெற்றவர்களே அவளுக்குச் சத்துருக்கள் ஆவீர்கள். நாளைக்கு அவளே அம்மாதான் என்னமோ புத்தியில்லாதவள், பாரியோசனை கிடையாது; அப்பா நாலு புருஷாளுடன் பழகுகிறவராயிற்றே, அவருக்கென்ன புத்தியில்லாமற் போய்விட்டதென்று உன்னைத்தான் சொல்லுவாள். ஜாக்கிரதை! நான் என்னமோ சொன்னேனென்று இருக்கவேண்டாம். அடுத்த வைகாசிமாதம் குழந்தை நடராஜனுக்கு ஐந்தாம் வயது பிறக்கிறது. வித்தியாப்யாஸம் செய்து வைக்கவேண்டும். அந்த சாக்கை வைத்துக்கொண்டு விசாலத்தையும் பையனையும் அவர்கள் வீட்டுக்குக் கொண்டு போய்விடு" என்று பேசிமுடித்துத் தன் சாயங்கால காயத்ரி ஜபம் நூற்றெட்டுக்கு ஒன்று குறையாமல் கிரமப்படிச் செய்து முடித்ததாக நினைத்துக் கொண்டு "உத்தமே சிகரே தேவீ," யென்று சொல்லிக்கொண்டே ஈசுவரய்யர் எழுந்துவிட்டார்.

இதன் நடுவில் ஒரு சின்ன குட்டிக் கலகம். ஈசுவரய்யரும் நாராயணய்யரும் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அந்த ஊர் நியூஸ்பேபர் பாட்டி குளத்திற்கு ஜலம் மெள்ள வந்திருந்தவள் போது போயிற்றே இருட்டிவிடுமே என்பதைக்கூட நினைக்காமல் யதா சாவகாசமாகக் குடத்தைத் திருப்பித் திருப்பித் தேய்த்துக் கடைசியில் ஜலமெடுத்துக்கொண்டு சென்றாள்.

நாரயணய்யரும் கையில் வாங்கின விபூதியை நெற்றியிலணிந்து கொண்டு, கையிலெடுக்கும் ஜலம் வாயை யெட்டாதபடி ரொம்ப சிரத்தையாய்த் தான் பிராம்மணிகத்தைக் காப்பாற்றுவதாக நினைத்து ஸந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு ஈசுவரய்யர் சற்றுதூரம் போனார் என்று கவனித்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

விசாலாக்ஷியின் தாயார் வாசலில் நின்று கொண்டிருந்தாள். நாராயணய்யர் உள்ளே நுழைந்து கைத்தடியைக் கீழே வைப்பதற்கு முன்னமே, "நம்ம அகத்து ஸமாசாரம் எல்லாம் அம்பலத்தில்தானா நடக்க வேண்டும். குளத்துக்குப்போனேனும். நம்ம பாட்டுக்கு ஸந்தியாவந்தனத்தைச் செய்தோம், இரண்டு காயத்ரியைச் செய்தோமென வராமல் ஊராருடனெல்லாம் நம்ம அகத்துக் கதையைச் சொல்லிக்கவேண்டும். அவரவர்கள் சொன்னதை யெல்லாம் காதிலே போட்டுக்கொண்டு இங்கே வந்து பிரஸங்கம் செய்வது! நன்றாய் ஊரார் வாயில் அகப்பட்டு அரைபடுகின்றோம்" என்று வழக்கப்படியில்லாமல் சிறிது சாந்தமாகவே பேசினாள்.

ஸகோதரிகளே! என்ன இவ்வளவுடன் விட்டுவிட்டாளென்று அதிசயப்படுவீர்கள். காரணமிருக்கிறது. நாம் சொன்னோமே நியூஸ்பேபர் பாட்டி; மொத்தத்தில் நல்லவள். அவள் கலகம் செய்வது சண்டை மூட்டிவைக்கவேண்டுமென்று அல்ல. அவள் ஸ்வபாவம் அது. அவளுக்குக் காதில் கேட்டதை வாயால் சொல்லாவிட்டால் தலை வெடித்துப் போய்விடும். பெரியவாள் தங்கள் காதால் ஒரு நல்ல விஷயங்கள் கேள்விப்பட்டால் அதை நாலுபேருக்குச் சொல்லி அவர்களும் தங்களைப்போல் ஆனந்தமடைந்து சீரடையவேண்டும் என்ற உத்தேசங்கொண்டு எல்லோருக்கும் விஷயங்களை யெடுத்துரைப்பதில்லையா? உலகு இன்புறக் கண்டு தாம் இன்புறுவர் கற்றறிந்தோர். நம்ம பாட்டிக்கு விசாலத்தினிடத்தில் ரொம்ப ஆசை. அவள் தன் புருஷனைச் சேர்ந்து என்றைக்காவது ஒரு நாளைக்குச் சுகமடைவதை நாம் பார்க்க மாட்டோமா என்று பெரிதும் ஏங்கிநிற்பவள். ஆதலால் தான் குளத்தங்கரையில் நடைபெற்ற ஈசுவரய்யருடைய உபந்நியாசத்தைப் பின்னும் பலப்படுத்தி விசாலாக்ஷியின் தாயாரிடம் ரொம்ப தூரம் கல்லுங் கரையும்படி காதில் ஊதினாள். விசாலாக்ஷியின் தாயாரும் ஸ்வபாவத்தில் சாந்தமுடையவள். ஆனால் ஒன்றுந் தெரியாதவள். காரிய காரியங்களின் சாதகபாதகங்கள் அவளுக்குத் தெரியாது. ஏதோ ஐந்து பிள்ளைகள் நடுவிலே ஒரு பெண். அதுவே உலகமென நினைத்துப் பாமரமான ஆசை வைத்துவிட்டாளே யொழிய வேறொன்றில்லை. நம் தோட்டத்தில் அழகிய புஷ்பம் புஷ்பித்தால் அதற்குரிய ஸ்தானமாகிய கூந்தலில் வைத்து அழகு பார்ப்பது நியாயமென்னும் உண்மையை அவள் உணராதவள். நம்முடைய தோட்டத்தில் பூத்த புஷ்பத்தை நம் கையிலேயே இடைவிடாது வைத்துக்கொண்டால்தான் அதன் அழகை நாம் அனுபவித்ததாகும் என்று நினைக்கும் மூடாத்மா. ஏதடா! கையில் வைத்துக்கொண்டால் வாடி வதங்கிக் கசங்கிவிடாதா என்ற நினைவே தோன்றாதவள்.

இரவு சாப்பாடாயிற்று. விசாலாக்ஷியின் தாயாரும் தகப்பனாரும் தெருத் திண்ணையில் நிலவில் பேசிக்கொண்டிருந்தனர்.

"அவாள் ஒரு கடிதமாவது எழுதினால்தானே? நாமே எப்படி வலுவில் அழைத்துப் போகிறது?"

"இதற்கு முன் இரண்டு தடவை தங்களுக்குக் கடிதம் எழுதினார்கள். நாம் போகாமலிருந்து விட்டோம்."

"ஆமாம். அதெல்லாம் தான் போச்சே. அதைப்பற்றி என்ன?"

"இப்போது ஒரு கடிதாசு வந்தால் நமக்கும் ஒரு மாதிரியாய்ப் போய்விடும். நீங்கள் புருஷர்கள்; இதெல்லாம் கவனிக்க மாட்டீர்கள்."

"இந்த வயசிலே உனக்கும் எனக்கும் மரியாதை இல்லாவிட்டால் என்ன கெட்டுப்போகப் போகிறது? போனதெல்லாம் போச்சு. இனிமேலாவது குழந்தை புருஷனண்டை போய் இருப்பதைக் கவனிக்கவேண்டும்."

"செய்யுங்களேன்."

இந்த ஸம்பாஷணையின் ஸாராம்சம் அடுத்த நாள் ஈசுவரய்யர் காதுக்கெட்டியது. அவர் மாப்பிள்ளையும் நாராயணய்யர் மருமகனும் இரண்டுபேர்களும் டாக்டர்கள். இருவரும் ஒரே வருஷம் பரீக்ஷையிற் தேறினவர்கள்; ஒரே நகரத்தில் தான் வைத்தியக் கல்லூரி உபாத்யாயர்களாக நியமிக்கப்பட்டனர்; லக்ஷ்மணனுடைய தகப்பனாருக்குப் பிள்ளை சீமைக்குப் போவதில் சற்றும் இஷ்டமில்லை. அவனுக்கு வேறு கல்யாணம் செய்துவைப்பதென்பது அவர் மனதிற்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஏனெனில் அவர் விசாலாக்ஷியின் குணத்தை நன்கறிந்தவர். எப்படியாவது பிள்ளையையும் நாட்டுப் பெண்ணையும் கூட்டி வைத்து அவர்கள் சுகமாக வாழ்வதைக் காணவேண்டுமெனப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தார். லக்ஷ்மணன் மாத்திரம் விசாலாக்ஷியின் நல்ல குணத்தையும் பதிபக்தியையும் அறியாதவனா? அவன் மறு விவாகம் செய்து கொள்ளப் போகிறானென்ற வதந்தி நடுவிலிருக்கிறவர்கள் கட்டிவிட்ட வதந்தி. அவனுக்கு மாத்திரம் சீமைக்குப் போய் வந்துவிட்டால் இந்த ஐரோப்பிய ஐ. எம். எஸ். டாக்டர்களின் கீழ் அவஸ்தைப் படாமலிருக்கலாமே என்ற எண்ணம் உண்டு. 'சரி, லக்ஷ்மணன் நல்ல யௌவன வயதுள்ளவன், கண்ணுக்கு அழகாயிருக்கிறான், பெண்சாதி முகத்தைப் பார்த்து நாலு வருஷமாயிற்று. இரண்டு வீட்டாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது. பரீக்ஷையில் தேறி உத்தியோகமும் கிடைத்துவிட்டது. சீமைக்குப் போக அபிப்பிராயப்படுகிறான். அதற்கு வேண்டிய திரவிய சகாயஞ் செய்வதாகச் சொன்னால் ஏன் இரண்டாவது விவாகம் செய்து கொள்ள மாட்டான்?' என்று இவ்வாறெல்லாம் யோசித்துப் பெண்களை வைத்துக் கொண்டு, அதுவும் வயதான பெண்களை வைத்துக்கொண்டு, அல்லாடுபவர்கள் தரப்பில் உழைக்கும் சில கனவான்கள் கயிறு கட்டி விட்டனர். இவர்கள் இவ்வாறு விடுத்த விளம்பரப் பத்திரிகை நமது ஈசுவரய்யர் காதுக்குமெட்டியது. அவர் இந்த வதந்தி பொய் வதந்தியாகத் தானிருக்கலாமென்று நினைத்தபோதிலும் ஒரு வேளை நிஜமாய் விட்டால் நாராயணன் பெண்ணினுடைய நிலை என்னாகுமென்று பயந்தே குளத்தங்கரையில் நாராயணய்யரிடம் அவ்வளவு தூரம் யதார்த்தமாய்ப் பேசினார்.

தாம் கண் மூடு முன் எப்படியாவது இந்தத் தம்பதிகளை யொன்று சேர்த்து வைப்பதெனத் தீர்மானித்துக்கொண்டு ஈசுவரய்யர் லக்ஷ்மணன் தகப்பனாருக்குக் கடிதமெழுதி நடராஜனுடைய வித்தியாப்பியாஸத்திற்கு ஒரு முகூர்த்தம் பார்த்து நாராயணய்யருக்குக் கடிதம் எழுதும்படி செய்துவிட்டார்.

ஸம்பந்தி எழுதிய கடிதம் தமக்கென இல்லாமல் பொதுவாய் பந்துகளுக்கு எழுதப்படும் முகூர்த்தப் பத்திரிகையை யொப்ப இருந்ததைப்பற்றி நாராயணய்யருக்குச்சிறிது வருத்தம் தான். பெண்சாதியிடம் சொல்லிக்கொண்டார். அதற்கு அந்தம்மா, "ஆமாம்; அவர்கள் நேரே வெற்றிலை பாக்கு வைத்தழைப்பது போல் வருந்தி யழைத்த போதெல்லாம் நாம் சிங்கநாதம் பண்ணினோம். இந்தத்தடவை இவ்வளவாவது ஒரு காலணா (நமது காருண்ய கவர்ன்மெண்டார் இந்தப் பழமொழியைக் கூடப் பொய்யாகச் செய்துவிட்டார்கள்) கார்டாவது எழுதினார்களே. இதுவே அதிசயம்தான்" என்று உடனே மாப்பிள்ளை வீட்டாருக்குப் பரிந்து கொண்டு வந்துவிட்டாள்.

வேண்டிய வேஷ்டி, புடவைகள், பக்ஷணம், பண்ணியாரவகைகளொன்றுங் குறையாமற் தயார் செய்து சேகரித்து எடுத்துக் கொண்டு பெண்ணையும் போனையுமழைத்துக்கொண்டு சகாயத்திற்கு ஈசுவரய்யரையும் கூட்டிக்கொண்டு நாராயணய்யரும் அவர் மனைவியும் ஸம்பந்தி ஊருக்குச் சென்றார்கள்.

குறித்த தினத்தன்று வித்தியாப்பியாஸம் நடந்தேறியது. மணையில் உட்கார்ந்திருந்தபோது தம்பதிகள் ஒருவரையொருவர் பார்க்கவேயில்லை. ஆனால் இருவரும் நடுவிலிருந்த நடராஜன் முகத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தனர். நடராஜனுக்குப் பொருள் விளங்கவில்லை. அவன் மாற்றி மாற்றி இருவர் முகத்தையும் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அன்றிரவு எல்லோரும் படுத்துக்கொண்ட பிறகு விசாலாக்ஷி மார்பு படபடவென்றடித்துக்கொள்ள அடிமேல் அடிவைத்து அதி தீனமாய் நடந்து லக்ஷ்மணனுடைய அறைக்குட் சென்றாள். தான் வந்திருப்பது தெரியாமல் சற்று நின்று அப்புறம் அவரருகில் சென்று நமஸ்காரம் செய்தனள். அடிபணிந்தவளை லக்ஷ்மணன் கைகொடுத்து எழுப்ப இருவர் கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப் பெருகியது. துக்கத்தைச் சகிக்க மாட்டாதவர்களாய் ஒருவரையொருவர் நேராய் முகமெடுத்துப் பார்க்கமுடியாமல் நாலு வருஷமாய் அடைபட்டிருந்த துக்கமெல்லாம் ஒருவாறாக வெளிவந்து கண்கள் உலர்ந்தபின் அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள். இவ்வாறு கண்ணோடு கண்ணினை நோக்குங்காலை வாய்ச் சொற்கள் ஏதும் எழவில்லை யெனச் சொல்லுதலும் வேண்டுமோ?

இல்லறமல்லது நல்லறமன்று.

மங்களம்.

குறிப்பு:—இந்தக் கதைக்கு என்ன பெயரிடலாமென்று திண்டாடிக் கொண்டிருக்கையில் எனது நண்பரொருவர் இதற்கு முந்தின தாள்களைப் படித்துக் கொண்டிருந்தனர். விசாலாக்ஷியின் தாயாரைச் சேர்ந்த மனுஷியாள் யாரோ அடுத்த அறையிலிருந்து கதையைக் கேட்டுக் கொண்டிருப்பதாக அறிந்தேன். கதைமுடிந்தவுடன் 'கதையாம் க...தை. புண்ணியமா புருஷார்த்தமா, புராணமா, இல்லை, ஒரு பக்த விஜயமா! என்ற வார்த்தைகள் என் காதிற் பட்டன.

திலகவதி.

தற்கால இந்து குடும்ப வாழ்க்கைக்குரியவற்றை எடுத்துரைக்கும் நாவல். சென்னை சர்வகலாசாலை போதகாசிரியர் ராவ் ஸாகேப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A. M.R.A.S. F.R.H.S. அவர்கள் முன்னுரையுடன் கூடியது. Cr. 8vo. 320பக்கம் கொண்டது. விலை ரூ. 1-4.

சௌதரி வி. பாலம்மாள், சிந்தாமணி பத்திராதிபர் லலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

அகலிகை.

ஏ. சொக்கலிங்கம் பிள்ளை.

(440-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேவர்கள் இந்திர சாபத்தை யழிதல்.

கௌதமர் சாபத்தால் இந்திரனடைந்த பெருங் கேட்டையுணராத தேவர்கள் வழக்கம் போல இந்திரனை வணங்கும்படி அவன் சபையை யணுகினர். ஆங்கு இந்திரனைக் காணாது, இந்திராணியுடன் அந்தப்புரத்திருப்பானெனக் கருதி, இந்திராணியை வினவ, அவளும் அமரர்கோனிங்கில்லையெனக் கூறினள். அதனைக் கேட்ட தேவர்கள் மிகவும் அஞ்சுற்றவர்களாய் உலகமுற்றுந் தேடினார்கள். எவ்விடத்தும் தம் தலைவனைக் கண்டாரில்லை. பின்னர் தேவர்கள் தங்கள் குருவாகிய பிரகஸ்பதி பகவானிடம் வந்திருந்த நாரத முனிவரது திருவடிகளைத் தொழுது "சுவாமி! தேவரீர் மூவுலகங்களினுஞ் சஞ்சரிப்பவராதலின், இந்திரன் வரலாற்றைத் தேவரீரே கூறுதல் வேண்டும்" என இறைஞ்சி நின்றனர். உடனே நாரதரும் இந்திரனுக்கு நேர்ந்த துன்பங்களை யெடுத்துக் கூறினர். அதனைக் கேட்ட விண்ணவர் "இந்திரனுக்கு அச்செயல் தகுந்ததோ" என்று மனம் வருந்தி மயங்கினர். பிறகு தேவர்கள், நாரதர் பிரகஸ்பதியாகிய இருவருடனே கௌதமரிடஞ் சென்று, அவரது திருவடிமலரைப் பல மலர்களாற் பன் முறையு மருச்சித்துப் பணிந்து எதிர் நின்று, என்பும் மனமும் நெகிழ்ந்துருகும்படி பண்ணோடு பல துதிகளைப் பாடிப் புகழ்ந்து இன்மொழியோடு தோத்திரித்தனர். கௌதம முனிவர் அவ்வாறு புகழ்ந்து பழிச்சுந் தேவர்களை நோக்கி "தேவர்காள்! உங்கள் தோத்திரங்களைக் கேட்டனம். உங்களுக்கு எம்மாலாகவேண்டுவனவற்றைக் கூறுமின்" என்றனர். அதற்குத் தேவர்கள் "மாதவரேறே! தேவரீரை யடைந்தவர்கட்குத் தாழ்விருக்கின்றதோ? செய்தற்கரிய குற்றத்தைச் செய்த இந்திரன் முன்போலப் பொன்னுலகமர்ந்து அரசுபுரியுமாறு தேவரீரிட்ட சாபத்தை விலக்கியருள்புரியவேண்டும்" என்றிரந்தனர். அதனைச் செவியுற்ற கௌதம முனிவர் "தேவர்காள்!

"அறிவிலாதவன் வஞ்சகன்றுட்டனுசாக்
குறியிலாதவன் கொண்ட தன்னுயிர் பிறவுயிர்க்குஞ்
செறியுமாதர விரக்கமில்லாதவன் செப்புந்
தறுகணாளனைச் சாற்றலு நினைத்தலுமாகா."

ஆயினும் பெரும்பாவியான ஒருவன்மீது பலர் கிருபை வைப்பார்களாயின் அவன் புனிதனாவான். அதுபோல நீங்களெல்லோருங் கூடிக் கருணை செய்வதால் அப்பெரும்பாவியாகிய இந்திரனும் புனிதனாவான். அன்றியும் ஒருவன் செய்த குற்றத்திற்காகக் குற்றமற்ற மற்றவர்கள் துன்புறுதல் நன்றன்று; ஆனால், எம சாபமும் வீணாதற் கூடாது. இந்திரன் செய்த குற்றத்திற்குத் தண்டனை யில்லாமற் போதல் ஆகாது. ஆதலால், உங்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சாபத்தை யொருவண்ணமாகமாற்றுவோம்" எனக்கூறி "இப்போது இந்திரனடைந்துள்ள புண்ணுருவம் அவன் கண்ணுக்குமாத்திரம் தோற்றி, அவன் செய்த குற்றத்தை அடிக்கடி நினைப்பூட்டி, அவனுக்கு வருத்தத்தையும் அருவருப்பையுமுண்டாக்கும். அவ்வுருவம் பிறர் பார்வைக்கு அழகிய கண்களாகவே தோற்றும்; அதனால், இனி இந்திரனை எல்லா உலகும் ஆயிரங்கண்ண

னென்றே அழைக்கும். இப்போது அவன் நாணமின்றித் தேவருலகஞ் "செல்வானாக" என்று அநுக்கிரகித்தனர். அதனைக் கேட்ட நாரதரும், பிரகஸ்பதியும், தேவர்களும் "தவத்தாற் சிறந்த முனிவர் பெருமானே! உமக்கிருக்கும் பொறையுங் கருணையும் எம்மால் அளவிடற்பாலதோ? அதுவே போல எங்களுள மகிழ்ச்சிக்கும் அளவுண்டோ? கிருபாநிதியே! யாங்கள் அமராவதி நகர் செல்வதற்கு விடை தரல்வேண்டும்" என்று கூறி எல்லோரும் விடை பெற்றுச் சென்றனர்.

4-வது அத்தியாயம்.

முற்காலத்தில் அயோத்திமாநகரில் தசரத வேந்தர் தமது புதல்வர் நால்வர்களுக்கும் விவாகஞ் செய்யக் கருதி மந்திரிமார், புரோகிதர், இனத்தார், நகரமாந்தரிற் பெரியோர் முதலியோரை அழைத்து யோசனை செய்துகொண்டிருந்தனர். அத்தருணத்தில் கௌசிக முனிவர் தசரதரைக் காணும்பொருட்டு அரண்மனை வாயிலில் வந்து நின்றனர். அதனைக் கண்ட வாயிலாளர் தசரதரிடம் ஓடி "அரசே! காதி மைந்தரான கௌசிக முனிவர் எழுந்தருளியிருக்கின்றனர்" என்று தெரிவித்தனர். உடனே தசரதர் தாழ்ந்த பள்ளத்தைநோக்கிச் செல்லும் வெள்ளம்போல விரைந்துபோய் அவரது திருவடித்தாமரைகளில் வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு அவரை வணங்கிச் சிறந்ததோர் பீடத்திலெழுந்தருளச் செய்து, வசிஷ்ட முனிவருடன் அவரது ஸ்ரீபாதங்களுக்கு விதிப்படி அருச்சித்துப் பத்தி வினயத்துடன் கைகூப்பித்தொழுது "அடிகளே! தேவரீர் வரவால் அடியேன் தீவினை முற்றும் இன்றோடு என்னைவிட்டு நீங்கின. உம்மைப்போன்ற தவமுனிவர்கள் எந்த இடத்திற்கு எழுந்தருளுவார்களோ அந்த இடத்திற்கே எவ்வகைச் செல்வங்களும் உடன் வருகின்றன. தேவரீர் அடியேன்பால் எழுந்தருளிய காரிய மின்னதென்று அருளிச் செய்வீர்களாயின் அதனை இப்போதேநிறைவேற்றக் காத்திருக்கின்றேன்" என்றனர். அதனைச் செவியேற்ற விசுவாமித்திரர் "அறிவிலும் ஆற்றலினுஞ் சிறந்த புரவலரேறே! யானியற்றுந் தவங்களுக்கும் வேள்விகளுக்கும் திதி மைந்தரான மாரீசன் சுபாகு வென்னும் இராக்கதர் நாடோறும் இடையூறு செய்து வருகின்றனர். ஆதலால், நின்மக்கள் நால்வருள் பூவை வண்ணத்திருமேனியுடைய ஸ்ரீராமபிரானை என்னுடன் அனுப்புவீராயின் அவன் அவ்வசுரர்களை யழித்துவிடுவான். யானும் எனது தவங்களையும் வேள்விகளையும் விக்கினமின்றி நிறைவேற்றுவேன். அதனால் உமக்குப் புகழும் புண்ணியமு முண்டாகும்" என்றனர். காவலனும் அதனைக் கேட்டு ஆறுத்துயரமுற்றுச் சிறிது நேரம் பேசாதிருந்து பின்னர் ஒருவாறு துயரம் நீங்கி "ஐயனே!

"பரிதிவான் வரவுகாணப் பங்கய விதழலர்ந்து
எரியொளிமாயுங்காலையிரவினிற்குவிதல்போலக்
கரிவெனராமனெல்லிற் களிப்புடனாடி மாலை
விரிதரவிழிகண்மூடி விளங்குவன் கமலக் கண்ணன்."

"சூரியனது வரவைக்கண்ட தாமரையிதழ்கள் மலர்ந்து சூரியன் மறைந்த இராக்காலத்தில் அவ்விதழ்கள் குவிதலைப்பொருந்தும்; அதுபோல, நீலமேனியனான இராமன் பகற்காலமெல்லாங் களிப்புடன் விளையாட்டாலயர்ந்து மாலைப்போதில் உணவருந்தி உறக்கமுற்றுக் கண்வளர்வான்; ஆதலால், அவனை எல்லோரும் கமலக்கண்ணனென்றழைப்பார்கள். அவனோ இன்னும் படைப்பயிற்சி சிறிதுமறியான். இராக்கதரோ இரவிற்றிரியும் வன்கண்ணர். அவன், அவர்கள்மேற் போர்செய்ய வல்லவனல்லன். அவன் இளஞ்சிறுவனாயிருந்தபோது அவனைப் பாலராமனாகப் பார்த்தேன். இப்போது அவன்கையிற் கோதண்டந்தாங்கி விளையாடி

வருவதால் அவனைக் கோதண்டராமனாகப் பார்க்கின்றேன். இனி அவனுக்குக் கலியாண முடித்து அவனைக் கலியாணராமனாகப் பார்ப்பேன். கூடியவிரைவில் அவனுக்கு இராஜ்யப்பட்டங்கட்டி அவனைப் பட்டாபிராமனெனச் செய்வேன். ஆதலால் தேவரீர் பின்னோடு அவனை எவ்வாறு அனுப்பத்துணிவேன்? அவ்விராக்ஷதர் மேற்செல்லும் போருக்கு யானே தக்கவனாவன். அவர்கள் செய்யும் இடையூற்றுக்கும் இடையூறுகனின்று யானே தேவரீரியற்றும் வேள்வியைக் காப்பேன்" என்றனர்.

அதனைச்செவியுற்ற கௌசிக முனிவர் கோபத்தோடெழுந்து நின்று "வேந்தே! கார்வண்ணப் பெருந்தகையை ஞானக்கண்ணாற் பாராது ஊனக்கண்ணாற்காணும் நீ சிறியனென்று இகழ்ந்து கூறினாய். அவனது பெருந்தகைமையை நீ யெத்துணையும் அறியாய்; ஞானக்கண்ணுடையவரே யறிவர். காட்டகத்திற் றவஞ்செய்வாரறியும் அவனது சிறப்பினை, நாட்டகத்தாரால் சேவிக்கப்பெற்ற நீயோ அறிவாய்? வில்லுங்கையுமா யிருக்கின்ற நீயோ அவனது மகிமையை யறிவாய்? புல்லுங்கையுமா யிருக்கின்ற நானே அறிவேன்! தலையுஞ்சடையுமாயிருக்கின்ற நானறியும் அத்துணையும் தலையும் முடியுமாயிருக்கின்ற நீ யவனை யறியமாட்டாய்! சிங்காதனத்திலிருக்கின்ற நீயோ அவனது பெருமையை அறிவாய்? பத்மாசனத்திலிருக்கின்ற நானே அறிவேன்! ஆதலால், உனக்குச் சம்மதமாயின் உனது குருவான வசிஷ்ட முனிவருடன் ஆலோசித்து அனுப்பக் கடவாய்" என்றனர். தசரதரும் அதனைக் கேட்டுக் கவலையுற்றவராகி அந்தரங்கத்தில் தமது ஆசாரியரை யழைத்து "அடிகளே! அடியேன் என் செய்யக் கடவேன்? இராமனது பிரிவை யானெவ்வாறு பொறுத்திருப்பேன்? அருந்தவரே! அநேக மாயிரம் ஆண்டுகளுக்குப் பின் அளவற்ற தவப்பயனாற் பிறந்த மைந்தனன்றோ? மைந்தர் நால்வரும் தேவர்களுக்குச் சமமானவர்களேயாவர். அவர்களுள் இராமனே ஆற்றலுள்ளவன். ஒருகால் அவன் முனிவருடன் செல்ல ஒருப்பட்டானாகில் அவனைப் பிரிந்து அடியேன் உய்யுமாறெங்ஙனம்? முனிபுங்கவருரையை மறுத்துக் கூறுவேனாயின் அவரது சாபம் என்னைப் பொருந்துவது உண்மை; ஆதலால் எனக்கு நன்மையுண்டாகும் விதத்தை நவிலக்கடவீர்" என்றனர்.

அதனைச் செவியேற்ற வசிஷ்ட முனிவர் "அரசே! இப்போது உனக்கு இரகசியமொன்றுரைக்கின்றேன்; அதனை யுன் மனத்துள் அடக்கிக் கொள்வாயாக. நம் இராமனை மானிடப்பிறப்பை யுடையவனென்று எண்ணவேண்டா. பார்மகளின் பாரந்தீர்க்கப் பகவானான திருநெடுமாலே உனக்கும் கௌசலைக்கும் பிள்ளையாகப் பிறந்திருக்கின்றான். அந்த ஸர்வேச்வரனது சயனமாகிய அநந்தனே இலக்குமணனாகப் பிறந்திருக்கின்றான். அவன் ஸ்ரீ இராமபிரானையே அநுசரித்திருப்பன். பரதனும் தம்பி சத்துருக்கனனும் அப்பகவானது ஆழி சங்கங்களின் அம்சங்களாகப் பிறந்தனர். அன்னோன் பெரிய பிராட்டியே ஸ்ரீமானான ஜனகராஜன் புதல்வியாய் ஸீதை யென்னும் பெயருடன் விளங்கிவருகின்றனள். கௌசிகமுனிவரும் ஸ்ரீராமனுக்கு அந்த ஸீதா பிராட்டியைச் சேர்ப்பிக்க வேண்டி வந்திருக்கின்றார்; அன்றியும் அம்முனிவரிடமிருந்தே அளவில்லாத கல்வியும் பேறுகளும் உன் புதல்வனுக்கு நேருங்காலம் சமீபித்தது; ஆகையால், நீ கௌசிக முனிவரை அன்புடன் ஆராதித்து இலக்குமிநாதனான ஸ்ரீராமனோடு இலக்குமணனையுங் கூட்டி அனுப்பக்கடவாய்" எனலும் அரசர் பெருமான் மிக்க சந்தோஷத்தை யடைந்தான்.

(தொடரும்.)

மோட்சம் அல்லது உலக விடுதலை.

(ஸ்ரீமதி உருக்குமணியம்மாள்.)

முக்தியென்ற பதத்திற்குப் பரியாயமாக மோட்சமென்ற பதமும், மற்றும் பல சொற்களும் வழங்கப்படுவது உலக வழக்கம். இவ்விரண்டு பதங்களுக்குக்கூட விடுதலை என்பதே பொருளாகும். ஆஸ்திக மதத்தைத் தழுவிப் புனர் ஜன்மத்தினிடத்தில் பூர்ண விச்வாஸமுடைய ஒவ்வொரு இந்துவின் வாக்கிலும் இப்பதங்கள் எதிரொலியாகத் தொனித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். மோட்சத்தை விரும்பாத எவனும் இவ்வுலகிலிரான்; சகஜமாக இதனிடத்தில் அனைவருக்கும் விசுவாஸம் அதிகமாய் இருந்துகொண்டே யிருக்கிறது. ஒவ்வொரு மனிதரும், இதனைப் பெறுவதற்கு அல்லது அடைவதற்குச் சிறிதாகவோ பெரிதாகவோ சக்திக்கியன்றபடி முயற்சிக்கின்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால், இதன் தத்துவத்தை யுணர்கின்றவர்கள் மாத்திரம் நிரம்பக் குறைவான எண்ணிக்கையுடையவர்களா யிருக்கின்றனர். முக்தியெனப்படுவது மரணத்திற்குப்பின் அடையக்கூடியதே அல்லாமல், ஜீவனோடிருக்கும்போது அடையக்கூடியதல்லவென்பது சிலருடைய மதம்; புண்ணிய லோகமென்றும், பாவ உலகமென்றும் தனித்தனியாக இரண்டுலகம் இருந்து வருகிறதென்றும், அவைகள்தான் சுவர்க்கம், நரகம் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றனவென்றும், புண்ணிய பாபங்கள் செய்தவர்களுக்கு அவைகள் கிரமமாகப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றனவென்றும் நம்புகின்றவர்கள் மற்றுஞ் சிலர். பலர் பலவிதமாக எண்ணிக்கொண்டிருந்தாலும் பரமார்த்தம், அதாவது உள்ளுறை, யொன்றேதான்; புண்ணிய லோகத்தில் சம்பூர்ணமான சுயேச்சையுடன் தேவையான இன்பத்தை அநுபவிக்கக்கூடியவர்கள் புண்ணியவான்களென்றும், நரகத்திற் பலவிதமான நிர்ப்பந்தங்கட்கு உட்பட்டு நிரங்குச பரிபாலத்தினால் அளவற்ற கஷ்டங்களை அநுபவிப்பவர்கள் பாபிகளென்றும் ஜனங்கள் நம்புகின்றனர். இதனால், பரிபூரண இன்பத்தைத் தருவதான புண்ணிய லோகத்தையே அனைவரும் விரும்புவார்களே யல்லாமல், நிர்ப்பந்தமான நிரம்பக் கஷ்டமுள்ள நரகத்தை விரும்பமாட்டார்கள். முதலாவதான சுவர்க்கத்தில் இன்பமும், இரண்டாவதான நரகத்தில் துன்பமும் உள்ளதென்பது யாவரும் நன்கறிந்த உண்மையே. இன்பமானதொன்றை யாவரும் விரும்பக்கூடியது இயல்பே எனினும், அதனை அடைவதற்கு மாத்திரம் அநேகர் அநேக மார்க்கங்களை ஆய்ந்து கொண்டிருக்கின்றனர்; சிலர் தவம் செய்ய வேண்டுமென்றும், வேறு சிலர் தீர்த்த யாத்திரை, மூர்த்திசேவை, தானம், தர்மம், உபவாஸம், பாராயணம் முதலானவைகள் செய்யவேண்டுமென்றும், மற்றுஞ்சிலர் மகான்கள் தரிசனம், தெய்வப் பிரார்த்தனைகள் இயற்றவேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகின்றனர். அவரவர்களுக்குத் தோன்றுகிறபடி அவர்கள் கருதுவதற்கு ஒழுங்கிருக்கின்றன. பலவித மார்க்கங்கள் எத்தனையிருந்தாலும் அத்தனையும், சகிப்புத்தனம், தியாகம், அஹிம்சை, சத்தியம், தர்மத்தை வளர்த்தல் முதலானவைகளில் பிரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. ஜனங்கள், இவைகளில் கடைத்தேறுவார்களானால், முத்தியடையக் கூடுமென்பது நிச்சயம். அத்தகைய கிரமமான வழியை அடைவதே மோட்ச சாதனம் எனப்படும்.

ஜன்மாந்தரத்தில் முக்தியைச் சம்பாதிக்கும் இச்சையினால், வாழ்நாள் முழுவதையும் கழிப்பது பிரமையே அல்லாமல் வேறல்ல. முக்தியென்பது விடுதலை என முதலிலேயே கூறியிருக்கிறேன்; விடுதலை கோருதலென்றால் இதுவரையிலும் ஏதோ நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்துவிட்டு இப்போது அதிலிருந்து விலகிக்கொள்ள முயற்சிப்பதென்பதே அதன் வெளிப்படையான அர்த்தம். சுயேச்சை என்றால் பூரணமான சுதந்திரம் என்பது பொருள். இது ஜன்மத்தோடு உண்டானது; "சுதந்திரம் பிறப்புரிமை" என்று காலஞ்சென்ற ஒரு பெரியாருங் கூறினர். அதனைக்காப்பாற்றிக் கொள்வதற்கே யாவரும் சகஜமாக அபேட்சிக்கின்றனர் என்பதும் விளக்கமாகத் தெரிகின்றது. சுதந்திரமே சுவர்க்கலோகமெனப்படும் என்ற லோகோக்தி இதனால் ஸ்திரப்படுகிறது. ஆனால், சுதந்திரம் அடைவதே மோட்சமென்றும், அதற்கு விரோதமாயுள்ள நிர்ப்பந்தச்செயலே நரகமென்றும் வேறாகச் சொல்ல வேண்டுவதில்லை. அப்பிரத்யட்சமான பரலோக விஷயம் அங்கிருந்து கிடைப்பினும் பூலோகத்தில் மாத்திரம் சுவர்க்கம் நரகங்கள் ஜனங்கள் கண்களுக்கேன் காணப்படுவதில்லை?

மானவனின் ஜீவிதகாலத்தில் சுயேச்சை அவசியமானதா? இல்லையா? அவசியமானதென்றால், இப்பொழுதிருக்கிறதா? இல்லையானால், அதனைச் சம்பாதிப்பதற்குரிய மார்க்கமென்ன? என்ற விசாரத்தை முழுதும் மறந்து மரணத்திறுதியில் எங்கேயோ முக்தியிருக்கிறதென்றும், அதனைமாத்திரம் கைப்பற்றவேண்டுமென்றும் ஜனங்கள் பிரமிப்பது ஏன்? பிரத்யட்சத்தில் அடையாத சுதந்திரம் பின்னால் அடையப்போவதாக எண்ணுவது விபரீதமல்லவா? பிழைத்திருந்த நாட்களில் இகலோக சுவாதந்திரியச் சிந்தனையை மறந்து இறந்தபின் பரலோகத்தில் சுதந்திரவாழ்வு பெறப் பார்ப்பதின் அர்த்தமென்ன? முக்தி சாதனையினால் அடையக்கூடியதல்லாமல் மேலெழும்பித் தாவிக்குதித்து எட்டிப்பிடிப்பதல்ல. அது சாத்தியப்பட்டதுமன்று. இகலோக சுகத்தை இம்மையில் அடையக்கூடாத ஆத்மா பரலோக சுதந்திரத்தைமட்டும் மறுமையில் எப்படி அடையக்கூடும்? கூரையேற இயலாதபோது உயர்ந்த கோபுரத்தைக் கடத்தல் சாத்தியமோ? ஜீவிதகாலமனைத்தும் சுதந்திரமில்லாமையையும், நிர்ப்பந்தத்தையும்வளர்ப்பதான கஷ்ட நஷ்டங்கட்கு உட்பட்ட மானவர்கள் ஜீவன் இழந்தபின், அச்சுதிந்தரத்தை அடைவதற்கு எங்ஙனம் யோக்கியதையுடையவர்கள் ஆவார்கள்? ஆத்ம சுதந்திரமே மோட்சசாம்ராஜ்யம் என்கிற சித்தாந்தத்தை யங்கீகரிக்கிறபொழுது, சுதந்திரமாகிய இன்பத்தை முதலில் இகலோகத்திற் பெற்று நன்றாக அநுபவித்தற்குப் பின்பல்லவா பரலோகத்தில் பேரின்பத்தைப் பெற ஆசைப்படவேண்டும்? "அறையில் ஆடியபின்னரன்றோ அம்பலத்திற்குச் செல்லுதல் உசிதம்!" உட்கார்ந்துதானே படுத்தல் வேண்டும். உடலில் உயிர் இருக்கும்போதே சுதந்திரம் அல்லது விடுதலையைப் பெறுவது தேசத்திற்கும், ஜனசமூகத்திற்கும் நன்மையைச் செய்வதுபோலாகும். ஆகவே, தேசத்திற்கு முந்தி சுதந்திரம் உண்டானால் தேசியர்கள் மோட்ச சாம்ராஜ்யத்தில்ஆனந்தப்பட ஆசைப்படுவர்; ஆயின், அதனைப் பிரகிருதத்தில் சம்பாதிப்பதெவ்விதம் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

ஐஹிக மோக்ஷமென்றால்—ஸ்வய நிர்ணயம்; சம்பூரண ஸ்வபரிபாலனம்; பத்திரிகா சுதந்திரங்கள் ஜன்ம சுவாதந்திரியம் அல்லது பிறப்புரிமை முதலான சம்ரட்சணங்களேயல்லாமல் வேறல்ல. இத்தகைய மோட்ச இன்பநிலையைப் பெறுவதற்குத் தேசங்களனைத்தும் ஜாதிகளனைத்தும், இச்சிக்கின்றன. தேசம் க்ஷேமம் அடைய வேண்டுமென்றிருந்தால், சத்வர ஸ்வராஜ்ய சம்பாதனம் அவசியம் செய்யப்

படவேண்டும். அதனைச் செய்வதற்குரிய மார்க்கம் யாது?

மோக்ஷத்திற்குச் சாதனம் அவசரமென்று மேலே கூறினேன்; சாதனைக்குரிய மார்க்கம் எத்தனையிருப்பினும், அத்தனையிலும், கடின சகிப்புத் தன்மை—தியாகம்—அஹிம்ஸை—தர்மவளர்ப்பு இவைகளே பிரதானம் என்றும் சொல்லியிருக்கிறேன். மேற்குறித்த மார்க்கத்தில் தேசீய வாதிகளனைவரும் கிரமசிக்ஷையடைந்தாலன்றி மோட்சம் எளிதான காரியமாகமாட்டாது. அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கியுள்ள சாமானிய ஜனங்களுக்குக் கருணோபாயத்தையும், மோட்ச மார்க்கத்தையுமேகாட்டி உத்தரிப்பதற்குப் பிரதானமாக உபதேசிக்கக்கூடியவர்கள் அவசியமாக வேண்டும்; குருவானவர் உபதேசிக்கக்கூடிய தத்துவமார்க்கத்தை அநுசரித்து நடக்கக்கூடிய சிஷ்யர்களனைவரும் மோட்ச சாம்ராஜ்யத்தைக் கொள்வது பரமதர்மம்.

பாதகண்டத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிற விஷமச்செயலைகளைத் தெரிந்து இப்பொழுது கோரமான நரகக் கூபங்களில் வீழ்ந்து அழுந்திக் கொண்டிருக்கிற தேசத்தினுடைய மாறாத லைச் சுவர்க்கத்துக்குச் சமானிமாகச் செய்ய நினைந்து, சாமான்ய ஜனங்களுக்கு மோட்சமார்க்கத்தை உபதேசிக்க வெளித்தோன்றிய உத்தமனே காந்திமகாத்மா! பொறுமை, சமத்துவம், அன்பு, ஒற்றுமை, அஹிம்ஸை முதலிய தியாகங்களுடன் கூடியிருத்தலென்ற தீட்சையே சிஷ்ய கோடிகளுக்கு அவர்கள்மோட்சசாதனத்திற்காக உபதேசிக்கும் தத்துவம். பௌதிக திருஷ்டியுடன் மகாத்மாவின் காரியக்கிரமங்களைப்பற்றி மதிப்புரை கூறுகின்றவர்களுக்கு, எத்தகைய பிரமையுண்டாயிருப்பினும், அத்யாத்மிக திருஷ்டியுடன் பரிசீலனை செய்கின்ற மகனீயர்களுக்கு இந்த உத்யுக்தமனைத்தும், பாரத ஜாதீய முக்திக்கேயல்லாமல், பிரபஞ்சத்தினது சாந்திக்கும்—புனர் நிர்மாணத்திற்கும்—சர்வமான நன்மைகளுக்கும்—தர்மோத்தாரத்திற்கும் மூலசாதனமென்று தோன்றாமற்போகாது. ஆனதினால், மகாத்மாவின் சந்தேஸாநுவர்த்தர்களாய் தேசீயரனைவர்களும், மதசாங்கிக, ராஜகீயாதி கட்சிகளனைத்தையும் கட்டிவைத்துவிட்டு ஒருமுகமாகத் திரண்டு ஐஹிக மோட்சத்தைப் பெற்றுப் பாதகண்டத்தைப் பூலோக சுவர்க்கமாகச் செய்து பிரபஞ்சத்திற்கு மார்க்க தரிசிகளாக விளங்கவேண்டுமென நிரந்தரமாகப் பிரார்த்திக்கின்றேன்.

சிறுவர்க்கான பக்கங்கள்.

(தற்காலம் நமது சிறுவர் சிறுமியர்கள் அவசியம் படித்தறிந்துகொள்ளவேண்டியன பூர்வ கிரந்தங்களேயாம். சிறுவர்கள் எளிதில் ஸ்ரீராமாயணக் கதையை யறிந்துகொள்ளும்படி பாலராமாயணம் என்ற சிறிய கிரந்தத்தைத் தமிழில் எழுதி வெளியிட்டிருக்கும் நமது சகோதரி பி. மங்களாபாயி அம்மாள் அவர்கள் நமது சிந்தாமணியைத் தமது கதைகளைக் கொண்டு அலங்கரிக்க மனமிசைந்துள்ளதால் இம்மாதமிருந்து சிறுவர்க்கான பக்கங்கள் என்ற பகுதியைச் சேர்த்து வெளியிட வாரம்பித்திருக்கிறோம். சிறுவர்க்கென்ற பகுதியில் இவை வெளிப்பட்டபோதிலும் பெரியவர்களுக்கும் உபயோகமுள்ளனவாகவே இருக்குமென்பதிற் தடையில்லை. பாரதம், பாகவதம் என்றால் இன்னவையென்றே அறியாமலிருப்பவர்களுக்கு அவைகளிலுள்ள கதைகளும் அவற்றைப் படிப்பதினாலுண்டாகும் நீதிபோதங்களும் எளிதிற் தெரியும்படி இக்கதைகளை எழுத முன் வந்த சகோதரியாருக்கு எமது மனமார்ந்த வந்தன மளிக்கின்றோம்.—ப. ர்.)

மகாபாரதத்திலுள்ள இனிய கதைகள்.

(ஸ்ரீமதி. பி. மங்களாபாயி.)

எல்லா உரிமைகளும் ஆசிரியருக்கே.

முகவுரை.

சிறுவர்களே ! சிறுமிகளே !!

நானிப்பொழுது சொல்லப்போகுங் கதைகள் மகாபாரதத்திலிருப்பவை. இக்கதைகளுக்கு 'உபாக்யானங்கள்' அல்லது எளிய கதைகள் என்று பெயரிடலாம். கௌரவ பாண்டவரது கதையைப்போலவே இவையும் மிகவும் வேடிக்கையாக இருக்கும். நீங்கள் கவனத்துடனே படிப்பீர்களாகில் அப்போதுதான் உங்களுக்கு நன்றாய் விளங்கும். இக்கதைகள் படிப்பதற்கு இனிமையைத் தருவதுமாத்திரமேயன்றி இவைகளிலிருந்து கிரகிக்கவேண்டிய விஷயங்களும் பல இருக்கின்றன. இவற்றிலிருக்கும் அநேகம் கதைகள் வெவ்வேறு ரிஷிகளாற் பற்பல சந்தர்ப்பங்களில் பலருக்கு உபதேசஞ் செய்யவேண்டுமென்ற உத்தேசத்தைக் கொண்டே சொல்லப்பட்டவை. ஆகலால் நான் உங்களுக்கு வற்புறுத்திச் சொல்லுவதென்னவென்றால், இக்கதைகளை ஒரு காதினாற் கேட்டு மறு காதினால் விட்டுவிடாதீர்கள். எந்தக் கதையையும் நாம் கேட்டால் அதிலிருந்து எடுத்துக்கொள்ளக்கூடிய விஷயங்களை அவசியமாய் எடுத்துக்கொள்ளவேண்டும். சாமானியமான நாய், பூனை முதலிய அற்பப்பிராணிகளின் கதைகளிலிருந்தும் கூட நாம் கற்கவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ யிருக்கின்றன. அப்படியிருக்க, இக்கதைகளோ பிரத்தியக்ஷமான மானிடர்களது கதைகள். அம்மானிடரும் அந்நியர்களன்று. நமது தேசத்தவர்களே; நமது தர்மத்தையே அநுசரித்து, நமது தர்மத்தையே போதிக்கப்பட்டவர்கள்; பல விஷயங்களிலும் முற்றிலும் நம்மைப் போன்றவர்களே. அவர்கள் முன் காலத்தியவர்களானதாலென்ன? ஆகவே அவைகளின் ருசியும் கற்பனையும் குறைந்துபோமோ? அப்படியொன்றுமில்லை. அவையினின்றும் இன்னும் கற்கவேண்டிய அருங்கற்பனைகள் எவ்வளவோ யிருக்கின்றன. ஆகவே இப்பொழுது நீங்கள் மனமிசைந்து இதை கவனமாகப் படித்துப் பிறகு நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்வீராகில், உங்களது பொழுதையும் நல் விஷயங்களில் போக்கினது மல்லாமல் உங்களுக்குப் பல நன்மைகளும் புத்திக்கூர்மைமையு மேற்படுவதை நீங்களே நன்குணர்ந்து கொள்ளுவீர்கள்.

1 ஆருணியின்கதை.

ஆருணியென்பவன் தௌமிய முனிவரின் சிஷ்யர்களில் ஒருவன். முற்காலத்தில் மாணாக்கர் கல்வி கற்கக் குருவினிடம் போயிருப்பார்கள். அப்பொழுது சிஷ்யர்களிடம் எவ்வளவு பக்தியுளதென்று குருவானவர் அறிந்து அவ்வவரது பக்திக்கேற்றவாறு வித்தை யளிப்பார். இந்த விதம் பரீக்ஷை பார்க்கும்பொருட்டுக் குருவானவர் தமது சிஷ்யர்களை ஏதாயினும் சகஜமற்ற (அவகடமான) வேலைகளைச் செய்யச் சொல்லுவார். அவ்வாறே செய்து முடித்தால் குரு சந்தோஷமடைந்து அவர்கள் மீது கிருபை செய்வார். அதுபோல ஆருணியைப் பரீக்ஷிக்கும்பொருட்டு தௌமிய முனிவரும் அவனைப் பார்த்து, 'குழந்தாய் ! ஆருணீ, வாய்க்காலுக்குப்போய் அணைபோட்டு, நிலத்திற்கு நீர் பாய்ச்சு' என்றார். குருவின் கட்டளைப்படி ஆருணி வாய்க்காலுக்குப் போய் அணை போடலானான். வெள்ளத்தின் வேகம் பலமாயிருந்தபடியாலே அது அடங்கவேயில்லை. ஆருணி பற்பல விதமாகவும் முயன்று பார்த்தான்; அணைபோட முடியவேயில்லை. அணைபோட்டடைக்கா விட்டால் குருவோ மிகவும் கோபித்துக்கொள்ளுவாரென்று பற் பல வித

மாக யோசிக்கலானான். கடைசியில் ஒரு யுக்தி தோன்றியது. அவன் தானாகவே போய் அவ்வெள்ளத்தின் குறுக்கே படுத்துக்கொண்டான். ஆகவே அதனால் தண்ணீரும் அணை போடப்பட்டது. ஆனால் அவன் எழுந்து போக முடியாது. ஏனெனில் எழுந்தால் தண்ணீர் வெளியே போய்விடும். அதனால் குருவின் கோபத்திற் காளாகுவோமென்று பயந்து அவன் அப்படியே கிடந்தான். சூரிய அஸ்தமனமும் ஆகிவிட்டது. இன்னும் ஆருணி வரவில்லையே யென்று தௌமிய முனிவருக்குக் கவலையுண்டாயிற்று. அப்பொழுது அவர் அவனைத் தேடும் பொருட்டு தானே நிலத்திற்குப் போய் பெருங் கூச்சலிட்டுக் கூவினார். குருவின் குரலைக் கேட்டு ஆருணி யெழுந்து நமஸ்கரித்து, கைகட்டி நின்று நடந்த சங்கதியைச் சொன்னான். தன்னிடத்தில் அவனுக்குள்ள அத்தியந்த பக்தியைக் கண்டு முனிவர் மெத்தவும் மனமகிழ்ந்து, அவனை ஆசீர்வதித்து, அவன் [illegible] கிருபை செய்தார். அன்றுமுதல் [illegible] அவனுக்கு 'உத்தாலகன்' என்ற [illegible]கிற்று. உத்தாலகன் என்றால் [illegible] யுடைத்துக்கொண்டு எழுந்தவன் என்று பொருள். குருவினிடமிருந்து மேலான கல்விகற்ற பிறகு, ஆருணி தன்னில்லமடைந்தான்.

2. உபமன்யுவின் கதை.

உபமன்யு என்பவனும் மேற்கூறிய தௌமிய [illegible]னிவரது சிஷ்யர்களுள் ஒருவன்தான். அவனை[illegible]ம் பரீக்ஷை பார்க்கும் பொருட்டு முனிவர் [illegible]வனை மாடுகளை மேய்த்து வரச் சொன்னார். 'அப்படியே' என்று சொல்லி உபமன்யு மாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டிற்குச் சென்றான். [illegible]னந்தோறும் அஸ்தமிக்கும்வரை மாடுகளை [illegible]மயவிட்டு அஸ்தமிக்கும் முன்னதாகவே வீடு திரும்புவான். இவ்விதமே சில நாட்கள் கழிந்தன. மத்தியான காலத்தில் உபமன்யு பிக்ஷை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இதுமட்டும் குருவிற்குப் பிடிக்கவில்லை. [illegible]ஷ்யன் பிக்ஷை வாங்கி குருவினிடஞ் சேர்[illegible]வேண்டும்; அவர் கொடுப்பதைப் பெற்று[illegible]ண்டு களித்திருக்கவேண்டும்; இதுதான் சிஷ்[illegible]ளின் தர்மம என்று தௌமிய முனிவர் [illegible]னார். உபமன்யுவும் அதன்படியே தான் வாங்கும் பிக்ஷையை அப்படியே குருவினிடம் கொடுத்து வந்தான். குருவோ அதினின்றும் ஒரு சிறிதும் அவனுக்குக் கொடுப்பதேயில்லை. அப்பொழுது அவன் மறுபடியும் பிக்ஷையெடுத்துச் சாப்பிடலானான். அப்பொழுது குருவானவர் 'அடிக்கடி பிக்ஷையெடுக்கப்போவது நன்றாகயில்லை. அதனால் ஜனங்களுக்கு வீண் கஷ்டமேற்படுகிறது' என்று கடுமையாகச் சொல்லி, அவன் மறுபடியும் பிக்ஷையெடுப்பதையும் நிறுத்திவிட்டார். அப்போது உபமன்யு பட்டினி கிடக்கலானான். இவ்விதம் எத்தனை நாள் பட்டினி கிடக்க முடியும்? பசியினால் ஜீவன் துடிக்கலாயிற்று. அப்போது அவன் பசுக்களின் பாலைப் பருகலானான். அதையும் குருவானவர் தடுத்தார். பிறகு கன்றுகள் குடித்துக்கொண்டிருக்கும்பொழுது அவைகளின் வாயினின்று ஒழுகும் நுரையைச் சாப்பிடலானான். அப்போதும் 'எச்சிலைத் தின்பது தர்மவிரோதம் என்று' குரு அதையும் தடுத்தார். பிறகு காட்டில் முளைத்திருக்கும் எருக்கஞ் செடியின் பாலைக் குடித்து பசியை யடக்கலானான். இவ்வாறு நடந்து கொண்டிருக்கும்போது, ஒருநாள் அவ்வெருக்கம்பால் அவனது கண்களில் விழுந்தபடியால் அவன் குருடனானான். ஆகவே தட்டித் தடவிக்கொண்டே நடக்கும்பொழுது ஒரு கிணற்றில் விழுந்துவிட்டான். சூரியாஸ்தமனமாகியும் உபமன்யு வீடு திரும்பவில்லை. ஆகவே தௌமிய முனிவருக்கு கவலை மேலிட்டது. வெகுநேரம்வரையில எதிர்பார்த்து, அவன் வாராததினால் முனிவர் தானாகவே அவனைத் தேடப் புறப்பட்டு ஒவ்வோர் இடத்திலும் உரத்த குரலோடு கூப்பிடலானார். அப்போது உமன்யு குருவினது குரலைக் கேட்டு 'சுவாமி! நான் குருடன். வழி தெரியாமல் இக்கிணற்றில் விழுந்திருக்கிறேன்' என்று உரக்கப் பதில் கிணற்றிலிருந்தபடியே சொன்னான். அப்போது தௌமியர் அவனைக் கண்டு அக்கிணற்றினின்றும் அவனை வெளியே யெடுத்து சகல சங்கதிகளையும் கேட்டறிந்தார். அவனுடைய பக்திக்காகவும் குருவாக்கிய பரிபாலன விஷேசத்திற்காகவும் வெகு சந்தோஷமடைந்து உபமன்யுவின் பார்வையை முன்போல் வரும்படியாக அநுக்கிர[illegible] கலைகளையுங் கற்று [illegible]

பூஜைக்குகந்த போட்டோ படங்கள்.

நம்மால் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

இது வரை வெளிவராத நூதன மாதிரி.

முருகன், ஷண்முக கடவுள், தண்டாயுதபாணி, பாரத மாதா உருவமாய் அமைந்த ஸரஸ்வதி, விக்னேச்வரர், ராதா கிருஷ்ணன், குழந்தை கிருஷ்ணன், யசோதா கிருஷ்ணன், திருப்புகழியற்றிய அருணகிரி நாதர், கீர்த்தனங்களியற்றிய தியாகராஜ ஸ்வாமிகள், அகஸ்தியர் பெருமான், பட்டிணத்தார், சென்னைக்கு விஜயம் செய்த பொழுது எடுத்த மகாத்மாவின் படம்.

		ரூ	அ.	பை
முழு செட்டு	...	6	0	0

தனிக்காப்பி.

			ரூ	அ.	பை
சாதாரணம் போட்டோ	1-க்கு	...	0	12	0
,,	½ டஜன்	...	4	0	0
,,	1 டஜன்	...	6	0	0
வர்ண போட்டோ	1-க்கு	...	1	0	0
,,	½ டஜன்	...	5	0	0
,,	1 டஜன்	...	9	0	0

ஸர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை.

ஆரோக்கிய தீபிகை.

சித்திர சகிதமாகச் சென்னையில் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை. இஃது தனது பேருக்கொப்ப ஆரோக்கியம், சுகாதாரம், பிரசவ முறைகள், முதற் சிகித்சை, சிசுசம்ரக்ஷணை முதலிய விஷயங்களை ஆடவருக்கும் பெண்டிருக்கும் போதிப்பது. இயற்கை முறைகளால் தேகசுகத்தைப் பாதுகாத்து, நோயணுகாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமெனப் போதிப்பது. அநேக பிரபல வைத்தியர்கள் ஐரோப்பியரும், இந்தியரும் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்கிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் "ஆரோக்கிய தீபிகை" என்னும் இப்பத்திரிகையில், நோயற்ற வாழ்வினுக் கவசியமான செய்திகளெல்லாம் இனிது வரையப்படுகின்றன. இதன் ஆசிரியர் டாக்டர் ப. ராமாராவ், எம். எல். சி. இதன் வருஷ சந்தா ரூ. 1-8-0. இதன் பிரதிகளை விற்க வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. வேண்டியவர்கள் சென்னை தம்பு செட்டித்தெரு 323 நெ. டாக்டர் யு. ராமா ராவுக்கு எழுதிக்கொள்ளவும்.

தேசோபகாரி.

அரியபெரிய விஷயங்கள் கொண்டு இரங்கூனிலிருந்து வெளிவரும் சிறந்த வாரப் பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருவது.

(தேசோபகாரி காரியாலயம், நெ. 45, 36-வது வீதி, இரங்கூன்.)

சந்தாவிவரம்.

இரங்கூன்:— வருஷம் 1-க்கு ரூ. 5; மாதம் 6-க்கு ரூ. 2-12. உள்நாடு: வருஷம் 1-க்கு ரூ. 6; மாதம் 6-க்கு ரூ. 3-
வெளிநாடு: வருஷம் 1-க்கு ரூ. 7; மாதம் 6-க்கு ரூ. 4

விளம்பரவிகிதம். மாதக்கட்டணம்.

பக்கம் ஒன்றுக்கு ரூபாய் 40; பக்கம் அரைக்கு ரூபாய் 25; கலம் ஒன்றுக்கு ரூபாய் 15.
மற்றவை நேரில் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தேசத்தொண்டு செய்வதெவ்விதம்?

அன்பர்களே! தாங்கள் தேசத்திற்கு ஓர் அற்பத் தொண்டேனும் புரிய விரும்வில்லையா? அப்படியானால், உடனே 'தேசோபகாரி' லிமிடெட் கம்பெனியில் பங்காளிகளாக சேருங்கள். [illegible] சேருங்கள். ஒரு பங்குக்கு ரூபாய் ஐந்தே. அதியத் [illegible] புண்ணியமும் கிடைக்கும்.